



# தினப்புயல்

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06





மலர்-01 Tel&Fax- 0242227558, Hot line: 0713594443. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -401



# தாயகம்,தேசியம்,சுயநிர்ணய உரிமையை திட்டமிட்டு சிதைக்கும் சிங்கள பேரினவாதம்




# இலங்கை அரசுடன் தேனிலவு கொண்டாடுகிறதா தமிழ் தரப்பு? – நிலாந்தன்



# உள்ளூராட்சி தேர்தலும் கறுப்பு பணமும்

# தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமையை திட்டமிட்டு சிதைக்கும் சிங்கள பேரினவாதம்




போரியல் வரலாற்றில் என்றும் இல்லாதவாறு யுத்தத்திற்கு பின்னரான தமிழினத்தின் இருப்பு கேள்விக்குறியாகவே பயணிக்கின்றது. உள்ளூராட்சி சபைத் தேர்தல் என்றும் மாகாணசபை தேர்தல் என்றும் பாராளுமன்ற தேர்தல் என்றும் ஜனாதிபதி தேர்தல் என்றும் மாறி மாறி வருகின்ற அரசாங்கங்கள் இவ்வாறான ஒரு நிலைப்பாட்டை தமக்கு சாதகமாக மக்களை பயன்படுத்தி செயற்பட்டு வருகின்றார்களே தவிர அதிகாரபூர்வமான மாற்றத்தை சிறுபான்மையினத்திற்கு இன்னமும் ஏற்படுத்திக்கொடுக்கவில்லை. உரிமைகள் மறுக்கப்படுகின்ற பொழுது தான் ஆயுத போராட்டம் இடம்பெற்றது என்பது வரலாறு. ஏனைய நாடுகளினுடைய விடுதலை போராட்டத்தை இலங்கையுடன் ஒப்பிடும் பொழுது முதலாளித்துவத்திற்கான போராட்டமாக இல்லை. மாறாக ஒரு இனத்தின் இருப்பை தக்கவைத்துக்கொள்வதற்காக குறித்த இனம் குறித்த தேசத்திற்குள் சிங்கள மக்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய அதே விடயங்களை தமிழ் மக்களும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதே. போராட்டம் தான் தீர்வு என்ற முனைப்போடு போராட புறப்பட்ட ஆயுத கட்சிகளுள் சர்வதேச மயமாக்கப்பட்ட விடயமாக அது தமிழீழ விடுதலைப்புலிகளை குறிப்படலாம்.

அரச நிகழ்ச்சி நிரல்களுக்கே தற்பொழுது இருக்கக்கூடிய ஆயுத கட்சிகள் செயற்படுகின்றன என்பது தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் குற்றச்சாட்டாக இருக்கின்றது. இவர்கள் இதனை வைத்தே தமது அரசியல் பிளைப்பினை மக்கள் மத்தியில் அதிகரித்து வருகின்றனர். பாராளுமன்றத்தில் பயங்கரவாத தடைச்சட்டத்தை எதிர்த்து பல கட்சிகள் பல தமிழ் தரப்புக்கள் குரல் எழுப்பினாலும் அரசாங்கம் தொடர்ந்தும் பயங்கரவாத தடைச்சட்டத்தை அமுல்படுத்திக்கொண்டே தனது அரசியலை செய்து வருகின்றது. தமிழீழ விடுதலைப்புலிகளால் உருவாக்கப்பட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு தற்பொழுது பிளவடைந்துள்ள நிலையில் தமிழ் தேசியம் பேசிவந்த கட்சி ஆதரவாளர்கள் கட்சி

தலைவர்கள் அனைவரும் தமக்கிடையே பரஸ்பரம் இவர் துரோகி அவர் துரோகி என்ற சொற்றாடலை வைத்தே அரசியல் பிளைப்பு நடத்தி வருகின்றனர். இத்தகைய சிந்தனையில் இருந்து இவர்கள் மாற்றம் பெறவேண்டும். அவ்வாறான ஒரு மாற்றம் ஏற்படுத்தப்படுகின்ற பொழுது தான் தமிழ் சார்ந்து கட்சிகள் அனைத்தும் ஒரு குடையின் கீழ் செயற்படுகின்ற நிலைமை உருவாக்கப்படும். இல்லாவிட்டால் தொடர்ந்தும் சிங்கள பேரினவாதிகள் இதனை ஒரு பொருட்டாக வைத்துக்கொண்டு தமிழ் தரப்பு இணைந்து வந்தால் நாம் பேசத்தயார் என்ற நிலைப்பாட்டை எம் மீது அவர்கள் திணிக்கின்றார்கள். கடந்த காலம் கடந்த காலம் என்று பேசுவதை விட்டுவிட்டு நிகழ்காலத்தில் தமிழினத்தின் இருப்பை எவ்வாறு தக்கவைத்துக்கொள்ள வேண்டும் என்பதற்கான வியூவை அமைத்து பேரினவாத அரசுக்கு எதிராக எமது அரசியலை தென்னிலங்கையில் முடக்கிவிடுவதன் ஊடாக எமக்கான ஒரு தீர்வு திட்ட நகர்வை நோக்கி செல்லமுடியும். 1983 யூலை தொடக்கம் 1990 காலப்பகுதி வரை தொடர்ந்தும் இந்த நாட்டில் கலவரங்கள் இன வெறியர்களால் அரங்கேற்றப்பட்டிருந்தது. அதனைத் தொடர்ந்து தொடர் பேச்சு வார்த்தைகள் மாறி மாறி வந்த அரசாங்கங்களினால் முன் எடுக்கப்பட்டது.

குறிப்பாக சொல்வதானால் டட்லி சேனநாயக்க தொடக்கம் ரணில் விக்ரமசிங்க வரையிலான ஆட்சியாளர்கள் இனவாத போக்கை இதுவரையிலும் கைவிடவில்லை. தொடர்ந்தும் தமிழினம் ஒடுக்கப்படுகின்ற ஒரு சூழல் அவர்களினால் ஏற்படுத்தப்பட்டுக்கொண்டு இருக்கின்றது. தமிழ் தரப்பிற்காக இயங்கிவந்த தமிழ் தேசிய கூட்டமைப்பை தற்பொழுது சுக்குநூறாக சிங்கள பேரினவாதம் சிதைத்திருக்கின்றது. இன்று தாயம் தேசியம் சுயநிர்ணய உரிமை என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணி குரல் கொடுத்து வந்தாலும் அவர்கள் சொல்வதைக் கேட்டு மக்கள் ஒரு குடையின் கீழ் அணி திரள்வதற்கும் தயாராக இல்லை. ஆயுதம் ஏந்திய கட்சிகள் தூள்

வியாபாராத்தில் ஈடுபடுவதாக தமிழரசுக் கட்சி தற்பொழுது குற்றம் சாட்டிவருகின்றது. குறிப்பாக சுமந்திரன் அவர்களுடைய பேச்சுக்கள் இனவிடுதலைக்காக போராடிய போராளிகள் மீது கரி பூசுகின்ற ஒரு செயலையே செய்கின்றார். கடந்த கால தேர்தலை எடுத்துக்கொண்டால் தமிழ் கட்சிகள் ஒற்றுமையாக செயற்பட்டுவந்ததே வரலாறு. ஆனால் இன்றைய சூழலில் கட்சிகள் பிளவுபட்ட நிலையில் தமது வாக்குகளை சேமிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. 'அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு' என்ற பழமொழிக்கமைய செயற்பட்டுவந்த கட்சிகள் இன்று அந்த பிடியில் இருந்து விலகிச்சென்றுள்ளமையானது தமிழினத்திற்கான விடிவின் பாதையை நோக்கி நகர்கின்ற நகர்வுகள் மந்தகெதியில் இடம்பெற்று வந்தமை அவதானிக்க முடிகின்றது.

பேச்சளவில் தேர்தலின் பின்னர் கட்சிகள் நாம் ஒன்றிணைவோம் என்று தமிழரசு கட்சியின் பசப்பு வார்த்தைகளை கேட்பதாக இனியும் ஆயுத கட்சிகள் இல்லை என்பதனை உணர்த்தும் முகமாக மன்னாரில் இடம்பெற்ற DTNA கட்சி கூட்டத்தில் ரெலோ கட்சியின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தமிழரசுக் கட்சி எமக்கு துரோகம் விளைவித்திருக்கின்றது என்றும் அவர்கள் இனி எம்முடன் இணைந்து செயற்படுவதாக இருந்தால் பல நிபந்தனைகள் மூலமே அவர்கள் இணைந்துகொள்ள வேண்டும் என்றும் இவர்களுக்கு நாம் இனிவரும் காலங்களில் பாடம் புகட்டுவோம் என்ற தோரணையில் அவருடன் ஏனைய கட்சி தலைவர்களும் அதனையே வலியுறுத்தி கூறுகின்றனர்.

தமிழ் தேசிய கூட்டமைப்பு மிகச் சிறந்த ஒழுங்கமைப்பாளர்களாக செயற்பட்ட இருவரும் இன்று உயிருடன் இல்லை. தேசியத் தலைவர் பிரபாகரனால் உருவாக்கப்பட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பை தொடர்ந்தும் பாதுகாத்து வந்த பங்கு ஊடகவியலாளர் சிவராம் அவர்களுக்கும், முன்னாள் மன்னார் மறைமாவட்ட ஆயர் இராஜப்பு ஜோசப் அவர்களையுமே சாரும். அவர்கள் இருவரினதும் இறப்பிற்கு பின்னர் தமிழ் தேசிய கூட்டமைப்பின் சதி வேலைகளை நிவர்த்தி செய்துகொண்டு கட்சியை வலிநடத்தி செல்வதற்கான சரியான தலைவர் இல்லை என்றே கூற வேண்டும். TNA யின் தலைவராக சம்பந்தன் அவர்கள் செயற்பட்டுவந்தாலும் அவரது வயது முதிர்வு என்பது சில ஞாபக மறதிகளை அவருக்கு ஏற்படுத்துகின்ற காரணத்தினால் கௌரவமாக TNAயின் தலைமைப் பதவியிலிருந்து விலகிக்கொள்வது சிறந்ததொன்றாகும். ஆனால் எப்போதைய சூழ்நிலையிலும் அவர் தனது கௌரவத்தை விட்டுக்கொடுக்க தயாராக இல்லை. கட்சியில் இருக்கும் ஒரு சிலரும் அவ்வாறே செயற்படுகின்றார்களே தவிர கட்சி நலனில் அக்கறை கொள்ளாமலும், மக்களிடையே அக்கறை கொள்ளாமலும் இருந்து வருவதே இதற்கு பிரதானமான காரணமாகும். மக்களை நேசிக்கின்ற ஒரு தலைமைத்துவம் உருவாக்கப்பட வேண்டும் இவ்வாறன சூழ்நிலையில் தான் தற்பொழுது இருக்கக்கூடிய அரசாங்கம் தமிழ்பரப்பில் உள்ள தமிழ் கட்சிகளை ஆளுங்கட்சி அல்லது எதிர்கட்சியுடன் இணைப்பதற்கான நடவடிக்கைகளை ஏற்படுத்தியுள்ளது.

இதற்கு துணைபோகின்ற தலைமைகளாகவே தற்பொழுது இருக்கக்கூடிய தமிழ் தரப்புக்கள் செயற்படுகின்ற ஒரு நிலையே தற்பொழுது தோற்றுவிக்கப்பட்டுள்ளது. தமிழினத்தின் விடுதலைக்கான காலத்தினை கருத்தில் கொண்டு தமிழ் கட்சிகள் செயற்பட வேண்டும் என்ற நிலைமை மாற்றப்பட்டு பதவி மோகங்களுக்காக வெறி கொண்டு தேசியத்தை சிதைக்கின்ற நடவடிக்கைகளிலே களமிறங்கியிருப்பது என்பது கவலையை தருகின்றது. போராட்ட களங்கள் மாற்றம் பெறலாம் போர் தந்திரோபாயங்கள் மாற்றியமைக்கப்படலாம்

குறித்த கொள்கைகளில் கட்சிகள் விலகிச் செல்லுமாக இருந்தால் தமக்கான இருப்பை தக்கவைத்துக்கொள்ள முடியாத சூழ்நிலையே உருவாகும் அதனையே மாறி மாறி வந்த அரசாங்கங்கள் கையாண்டு வந்தன. தற்பொழுது நாட்டின் ஜனாதிபதி அவர்களும் இதனையே கையாண்டு வருகின்றார். தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமைகளில் போராடிய போர் வீரர்கள் தற்பொழுது புலம்பெயர்ந்த தளத்தில் பலர் மௌனமாக இருக்கின்றனர். அவர்கள் தொழில் ரீதியாக உயர்ச்சி பெற்று இலங்கையின் வடக்கு கிழக்கை கூட பணம் கொடுத்து வாங்கும் அளவிற்கு வசதி படைத்தவர்களாக இருக்கின்றார்கள். இவர்களை இலங்கை அரசாங்கம் பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் தடை செய்திருக்கின்றது. புலம்பெயர்ந்திருக்கும் மொத்த மக்களை டயஸ் போராக்கள் என்று அழைக்கின்றது. டயஸ் போராக்களின் மூலம் அரசாங்கம் மறைமுகமாக தனது உதவிகளுக்கு பணங்களை பெற்றுக்கொண்டு தமிழினத்திற்கான தீர்வை பெற்றுத்தருகின்றோம் என்ற தோரணையில் செயற்பட்டுவருகின்றனர். 75 வது சுதந்திர தினம் நடைபெற்று முடிந்துள்ள நிலையிலும் தமிழினத்தை கூறு போடுகின்ற நிலைமைகளையே அரசாங்கம் தோற்றுவித்து வருகின்றது.

2009 இல் போர் மௌனிக்கப்பட்ட சூழலில் மீண்டும் ஒரு ஆயுத போராட்டத்திற்கான வழி வகைகளை அரசாங்கம் எதிர்பார்க்கின்றதா என்ற கேள்வியும் அரசியல் வட்டாரங்களில் தற்பொழுது எழுப்பப்படுகின்றது. மிதவாதம் பேசுகின்ற அரசியல் கட்சிகள் காலத்துக்கு காலம் பச்சோந்தி அரசியலையே செய்து வருகின்றன. 13 வது அரசியல் சீர்திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதில் தொடர்ந்தும் சிக்கல் ஏற்பட்டு வருகின்றது. அவ்வாறு அதிகாரம் வழங்கப்பட்டாலும் பொலிஸ் காணி அதிகாரங்கள் முற்றாக வழங்கப்படுவதில்லை அவை ஆளுநர்களின் கைகளுக்கே சென்று விடுகின்றன. ஆயுதம் ஏந்தி போராடிய போராட்ட கட்சிகளுக்காகவே மாகாண சபை கொண்டு வரப்பட்டது முன்னர் அதில் ஈ.பி.ஆர். எல்.எப் கட்சி சார்பாக 1988 டிசம்பர் தொடக்கம் 1990 மார்ச் வரை வரதராஜப்பெருமாள் அவர்கள் முதலமைச்சராக செயற்பட்டார். இக் காலகட்டத்தில் தொடர்ந்தும் முதலமைச்சர் பதவியை தக்கவைத்துக்கொள்ள முடியாத சூழல் உருவாக அவரின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தப்பட்ட நிலையில் இந்தியாவின் ஒடிசா மாநிலத்திற்கு தப்பி சென்று தற்பொழுது நாடு திரும்பியுள்ளார். எது எவ்வாறாயினும் ஆயுத போராட்ட கட்சிகள் அனைத்தும் ஒரு விடுதலை இலட்சியத்திற்காகவே போராடினார்கள். ஈழ இராச்சியம் அமைப்பதே அவர்களின் இலக்காகும்.

இன்றைய சூழ்நிலையில் இக் கட்சிகளின் தலைவர்கள் மனம் போனபோக்கில் செல்வதும் அல்லது பணத்திற்காக அரசாங்கத்திற்கு அடிமைகளாக செயற்படுவதும் நடைமுறையாகி விட்டது. தமிழீழ விடுதலைப்புலிகள் TNA ஆக 2001 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் இணைத்துக்கொண்டார்கள். அதில் புளொட் மட்டும் வெளியில் நின்றது. பின்னர் இடம்பெற்ற தேர்தல்களில் புளொட்டும் இணைந்து கொண்டது. இன்று பிரிந்து செயற்படும் விதமானது மேலும் தேசியத்தை சிதைவடைகின்ற ஒரு நிலையை தோற்றுவித்துள்ளது எனவே எதிர்வரும் காலங்களில் இக்கட்சிகள் அனைத்தும் அரச தரப்பினருக்கு சுவரம் போகாத வகையில் தமது நிலைப்பாடுகளை மாற்றிக்கொள்ள வேண்டும் என்பதே இன்றைய நடைமுறை அரசியல் எமக்கு கற்றுத்தந்த பாடங்களாகும். இக் கட்சிகளின் தலைவர்கள் இதற்கு மாறாக தொடர்ந்தும் செயற்படுவார்களாக இருந்தால் எதிர்வரும் தலைமுறை இவர்களுக்கு பாடம் கற்பிக்கும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை.

**இரணியன்**

தினப்புயல்,
ஆசிரியர் பீடம்,
இல:154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை,
வவுனியா.

## இலங்கையின் சுதந்திர தினத்தை தமிழ்தரப்பு ஏன் கரிநாள் என்கின்றது

வெள்ளையனே வெளியேறு என்ற கோசம் 1948 உடன் நிறைவுகான ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றிக்கொண்ட இலங்கை அரசு டட்லி சேனாநாயக்க - ரணில் விக்ரமசிங்க வரையிலான ஆட்சியாளர்கள் வரை இலங்கை சுதந்திரமடைந்து 75 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில் வடகிழக்கில் வாழுகின்ற சிறுபான்மையினமாகிய தமிழர்கள் இன்னமும் இச் சுதந்திர தினத்தை கரிநாளாகவே அனுசரித்து வருகின்றனர். ஒவ்வொரு சுதந்திர தினத்திலும் இலங்கையின் எங்கோவொரு மூலையிலாவது அரசாங்கத்திற்கு எதிரான கோசங்கள் எழுப்பப்பட்டு தமிழினத்திற்கான விடிவு கிடைக்கவில்லை என்ற அடையாளத்தை கடந்த 75 வருடங்களாக காண்பித்து வருகின்றனர்.

1983 யூலைக் கலவரத்தின் பின்னர் தமிழினத்திற்கு எதிரான இனக்கலவரத்தை ஏற்படுத்திய அரசாங்கத்திற்கு எதிராக தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தி போராடினார்கள் என்பது வரலாறு. இவ் ஆயுத போராட்டமானது சர்வதேச ரீதியில் வளர்ச்சிகண்டு தமிழினத்திற்கான ஒரு தீர்வு திட்டத்தினை வழங்க வேண்டும் என்று வலியுறுத்திவருகின்ற நிலையிலும் இதுவரையிலும் தமிழினத்திற்கான தீர்வுகள் எட்டப்படாத நிலைமையே காணப்பட்டு வருகின்றது. நூற்றுக்கணக்கான போராட்டங்கள் இதுவரையில் நடந்தேறியிருக்கின்றது. அவ்வப்போது இவ் ஆர்ப்பாட்டங்கள் தாக்கத்தை செலுத்தினாலும் அனைத்தும் கிடப்பில் போடப்பட்டதே வரலாறு.

ஈழப்போரின் இறுதிக்கட்டத்தில் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடக்கம் திட்டமிட்ட முறையில் காணி சுபீகரிப்பு போன்ற விடயங்கள் அரங்கேறி வருகின்றன. தொடர்ந்தும் இந்த நாட்டுக்குள் பௌத்த மதவாதத்தை திணிக்கின்ற செயற்பாடுகளை அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது. குறுந்தூர் மலை. வெடுக்குநாரி போன்ற பிரதேசங்களில் பௌத்த கோவில்களை தொடர்ந்தும் நிறுவுவதில் அரசாங்கம் செயற்படத்தொடங்கியுள்ளது. கட்டுமானங்கள் தடுத்து நிறுத்தப்பட்ட பொழுதிலும் சட்டத்தையும் மீறி அரசாங்கம் புத்த கோவில்களை அமைக்கும் பணிகளை செய்து வருகின்றது. இவற்றுக்கான ஒரு தீர்வாக பாராளுமன்றத்தில் இருக்கின்ற தமிழ்தரப்பு அரசாங்கத்திடம் பிச்சையெடுத்து வாழும் ஒரு வாழ்க்கையை வாழ்ந்து வருகின்றது. தமிழ் அரசியல்வாதிகளின் கொடும்பாவிகள் எரிக்கப்படும் பொழுதும் அவர்கள் உணர்வில்லாமல் அரச தரப்புடன் கைகோர்த்துக்கொண்டு செயற்படுகின்றார்கள். இந்த நிலைமை மாற்றியமைக்கப்பட வேண்டும்.

பாராளுமன்றிற்கு உள்ளும் வெளியிலும் அரசாங்கத்திற்கு எதிராக கோசங்களை எழுப்பி பாராளுமன்ற அமர்வுகளை பகிஸ்கரிப்பதன் ஊடாக தமிழ் மக்களுக்கான ஒரு தீர்வு திட்டத்தை அடைந்திருக்க முடியும். ஆனால் அரசாங்கம் எமக்கான தீர்வு திட்டத்தை வழங்கவில்லை என இந்தியா அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு முறைப்பாட்டு கடிதங்களை தமிழ் தரப்பு எழுதிக்கொண்டே இருக்கின்றது. அந்நியர்களிடமிந்து இந்த நாடு சுதந்திரமடைந்தது போன்று சிங்கள பேரினவாதிகளிடமிருந்தும் தமிழ்தரப்பு சுதந்திரம் பெறுவது எப்போது என்ற கேள்வி கணைகளோடு தொடர்ந்தும் இந்த நாடு கேள்விக்குறியாகவே தனது சுதந்திர தினத்தை பயணித்துக்கொண்டிருக்கின்றது. ஆட்சியாளர்கள் ஒவ்வொருவரும் போலி வாக்குறுதிகளை வழங்குகின்றனர். இதை நம்பி அரசாங்கத்திடமிருந்து காலக்கெடுக்களை பெற்றுக்கொண்டு பேச்சு வார்த்தைகளை இழுத்தடித்து அதையும் நலிவடைய செய்கின்ற ஒரு செயல்திட்டத்தையே அரசாங்கம் செய்து வருகின்றது. தமிழ் அரசியல் தலைமைகள் தொடர்ந்தும் இவ்வாறு செய்யுமாக இருந்தால் எதிர்வரும் சந்ததி இவர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதிலும் மாற்றுக்கருத்தில்லை. தமிழ் பேசும் மக்களுக்கான சுதந்திரம் எப்போது என்ற ஏக்கத்துடன் இன்றும் தமிழ் தரப்பு வாழ்ந்து கொண்டிருக்கின்றது இந்த கேள்விக்கு என்று விடை காணப்படுகின்றதோ அன்றுதான் இந்த நாட்டிற்கு முழுமையான சுதந்திர தினம் என்பதேயாகும்.



பல்துறை எழுத்தாளர்
புயல் பெ.ஸ்ரீகந்தநேஷன்




## கல்லறை பூக்கள்

'வீட்டில் உறங்கிக் கிடங்கள் இல்லாவிடின் கல்லறையில் உறங்க வேண்டி வரும்' என்ற இத்தாலிய பிரதமரின் மகுட வாசகம் உலகமெங்கும் ஓங்கி ஒலித்த போதும் அது மக்களுக்கு செவிடன் காதில் ஊதிய சங்கு போல செயற்பாடற்று கிடந்தது. ஊருக்கு ஊர் ஆலயங்கள் தேவையில்லை வைத்தியசாலைகளே தேவை என அனைத்துச் சமூக வலைத் தளங்களிலும் வாசகங்கள் மருத்துவத்தின் முக்கியத் துவத்தையும் மருத்துவத்தின் இலவசத்தையும் உலகிற்கு பறைசாற்றின.

ஏழைகள் வீடுகளில் பட்டினி கிடந்து பசியைப் போக்கி, வரும் மரணத்தைச் செத்து மரணத்தைப் போக்கினர். அதிகார வர்க்கம், தினக் கூலிகளை ஊரடங்குகாலத்தில் இன்னும் அதிகமாக சுரண்ட தொடங்கியது. இலாப நோக்கம் கருதி புதிய புதிய மரக்கறி வியாபாரிகளும் மாமிச வியாபாரிகளும் ஒவ்வொரு பிரதேசத்திலும் துளிர் விட்டனர். வழமையான வியாபாரிகள் சிலர் நியாய விலைக்குப் பொருட்களை விற்றாலும் ஏதோ அறியாத வெறுப்பு அவர்களைச் சோர்வடைய வைத்தது.

இலங்கையில் சுகாதார அமைச்சு,மக்கள் வெளியில் செல்வதாயின் வாய்க்கும் மூக்கிற்கும் 'மாஸ்க்' கட்டுமாறும் ஒருவரொருவருக்கிடையே குறைந்தது ஒரு மீற்றர் இடைவெளியையாவது எந்த சந்தர்ப்பத்திலும் பேணுமாறும் வீட்டை விட்டு வெளியே செல்லுவதை கூடிய பாகம் தவிர்த்துக்கொள்ளுமாறும் ஒவ்வொருவரும் இயன்ற வரை முயன்று தனிமையில் இருக்குமாறும் அடிக்கடி கைகளை கழுவுமாறும் சூழலை சுத்தமாக பேணுமாறும் உடலில் ஏதாவது அசாதாரண நிலை ஏற்பட்டால், உடனடியாக தனியார் மருத்துவமனைகளை நாடாமல், அரச மருத்துவமனைகளை நாடிச் செல்லுமாறும் வதந்திகளை நம்ப வேண்டாம் என்றும் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ள வேண்டாம் என்றும் ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் உள்ள போது அத்தியாவசிய - அவசிய - தேவையில்லாமல் வெளியில் இறங்க வேண்டாம் என்றும் ஊரடங்குச் சட்டம் தளர்த்தும் போது குடும்பத்தில் ஒருவர் மட்டுமே வெளியில் செல்லுமாறும் ஒருவரை ஒருவர் சந்தித்தால் கை கொடுக்க வேண்டாம் என்றும் அண்மையில் வெளிநாடு சென்று வந்திருந்தால், உடனடியாக அருகில் உள்ள சுகாதார திணைக்களத்திலோ, காவற்றுறையின் காவல் நிலையத்திலோ அறிவித்து உங்கள் உடலைப் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும் என்றும் இன்னோரன்ன அறிவிப்புக்களை ஊடகங்களில் வெளியிட்ட வண்ணமே உள்ளன.

தொடுகை மூலம் பரவும் கொரோனா தொற்று நோய் காலத்தில், 'ஓர் ஆமையாரும் ஒரு முயலாரும் ஆள் அரவம் அற்ற வீதியில் சந்தித்துக்கொண்டனர். முயலார், ஆமையாரைப் பார்த்து கிண்டலாக்கேட்டார், யார் இந்த வீதியால், நீண்ட தூரம் நடப்பது என்று போட்டி வைக்கலாமா?." என்று ஆமையார் சிறிது நேரம் யோசித்து விட்டு, "முயலாரே வீதியில் மனிதர்கள் நடமாற்றம் இல்லை. ஊரடங்குச் சட்டம் போடப்பட்டுள்ளது. இன்று வேண்டாம். நாட்டில் மனிதர்களுக்கு கொரோனா தொற்று நோய் பரவியுள்ளதாம் கண்டபடி வெளியில் திரியக்கூடாது. வாருங்கள் முயலாரே காட்டில் போய் அமைதியாக இருப்போம்." என்று உலக நடைமுறைச் சூழலுக்கு ஏற்ப சிந்தித்து நிதானமாக பதில் சொன்னார்.

முயலார், ஆமையாரை விடவில்லை "ஆமையாரே நீங்கள் எனக்குப் பயந்து விட்டீர்கள். ஆகவே, நீங்கள் எனக்கு அடிமையாகத்தான் இந்த காட்டில் வாழ வேண்டும்" என்று இறுமாப்புக் கொண்டார். 'இந்த முயலாரை திருத்தவே முடியாது. எதை, எந்த நேரத்தில் செய்வதென்று தெரியாது? இப்படியே விட்டால் முயலாரின் அட்டகாசம் இந்த காட்டில் அதிகரித்து விடும். முயலார் பாவம் என்னால் நீண்ட தூரம் நடக்க முடியாது என்று எண்ணி எனது உடலமைப்பின் பாதுகாப்பை அறியாமல் கதைக்கின்றார்' என்று முயலாரின் அறியாமையை நினைத்துக் கவலைப்பட்டுக்கொண்டு போட்டிக்குக் சம்மதம் தெரிவித்தார், ஆமையார்.

நடைப் பந்தயம் ஆரம்பமானது. முயலார் சிறிது தூரம் நடந்தார். சிறிது தூரம் பாய்ந்தார். ஆமையாரோ மெதுமெதுவாக நகர்ந்தார். நடைப்பந்தயம் நடுவர் இல்லாமல் விதிகளை மீறி நடைப்பெற்றது. ஆமையார் சொன்ன வாக்கு தவறாமல் விடா முயற்சியாக நடந்தார்.

தனக்கு முன்னே சென்ற முயலார் ஒரு மரத்தடியில் களைத்து நிம்மதியாக தன்னை மறந்து நித்திரை செய்வதைக் கண்ட ஆமையார் முயலை எழுப்பினார். திடுக்கிட்டு எழுந்த முயலார் தன்னை சுவீகரித்துக்கொண்டு நடைப்பந்தயத்தைத் தொடர்ந்தார்.

நீண்ட தூரம் இருவரும் வந்துவிட்டார்கள். திடீரென்று வீதியால் ஜீப் வண்டியில் வந்த காவல்துறையினர் முயலாரைக் கண்டதும் விலங்கிட்டு கைது செய்து வாகனத்தில் ஏற்றினார்கள். வீதியின் அருகில் கிடந்த ஆமையாரை, ஒரு காவல்துறை அதிகாரி கைது செய்ய பார்க்கின்றார். ஆமையாருக்கு அவயங்கள் ஒன்றும் வெளியில் தெரியவில்லை. ஆமையாரும் தறுவாய்ப்பார்த்து அவயங்களை உள்ளிழுத்துக் கொண்டார்.

"நீ பாதுகாப்பாகத்தான் உள்ளாய். உன்னால்,சமூகத்திற்குநோய்த்தொற்று வராது நீங்கள் இயற்கையாகவே ஒருவர் ஒருவர் தனிமைப்பட்டு ஒற்றுமையாக உள்ளீர்கள். மனிதன்தான் உங்களுக்கு எதிரி" என்று ஆமையாரைப் பார்த்து புறுபுறுத்துக்கொண்டு வாகனத்தில் ஏறினார். முயலார்காவல்துறையினரிடம் ஏதோ சொல்ல முயற்சிக்கின்றார். கைது செய்ப்பட்ட பலருள் முயலாரின் கதையைக் காவல்துறையினர் பொருட்படுத்தவில்லை. ஆமையார் சிறிது தூரம் நடந்ததும் தனது நண்பனின் மீது இரக்கப்பட்டு நடப்பதை நிறுத்தி விட்டு, 'நண்பரை எப்படி காப்பாற்றலாம்?' என்று ஆழ்ந்த சிந்தனையில் இருக்கும் போது, முயலார் முகக்கவசத்துடன், நொண்டி நொண்டி ஆமையாரைக் காண வந்தார்.

"ஆமையாரே எமக்குள் யார் பெரியவர் என்று இனி போட்டி வேண்டாம்? நீங்கள் சொன்னதைக் கேட்டிருந்தால், எனக்கு இப்படி நடந்திருக்காது? காவல் நிலையத்தில் முகக்கவசம் அணியாமல் பிடிப்பட்டவர்களில் இலஞ்சம் கொடுத்தவர்களுக்கு புரியாணி சாப்பாடு கொடுத்து நல்ல முகக்கவசமும் கொடுத்து அனுப்பி வைத்தனர், காவல்துறையினர். எனக்கு அடியடியென்று அடிச்சு கிழிஞ்ச முகக்கவசத்தைக் கட்டித் துரத்திப்போட்டார்கள்" என்று அழுகையுடன் முயலார் கூறினார்.

ஆமையார், முயலாரைப் பார்த்து, "வாருங்கள் வாருங்கள் எமது நடைப்பந்தயத்தை ஆரம்பிப்போம். நானே கூட தூரம் நடந்து விட்டேன்" என்று நகைச்சுவையாகக் கேட்டார். "ஆமையாரே நீங்களே வெற்றி பெற்றதாக இருக்கட்டும் எனது ஆணவத்தையும் அறியாமையையும் நீக்கிவிட்டீர்கள். மனிதர்களைப் போல எமக்கிடையே போட்டி வேண்டாம்" என்றார், முயலார். முயலாரின் மன மாற்றத்தை எண்ணி மகிழ்ந்த, ஆமையார் நடக்க முடியாமல் தடுமாறிய முயலாரி முகக்கவசத்தைப் பார்த்து, "இதெல்லாம் எமக்குத்தேவையில்லை" என்று கூறி, பிய்த்தெறிந்து விட்டு அவரைத் தனது தோளில் சுமந்தவாறு காட்டுக்குள் மகிழ்வுடன் சென்றார்.

இவ்வாறு சமூக வலைத்தளங்களில் பழைய கதை மரபை புதிய கண்ணோட்டத்தில் 'நவீன முயலும் ஆமையும்' என்னும் கதையொன்று உலா வந்து மனித சமூகத்தைக் கேலி செய்தது. கொரோனா காலத்தில் பதிப்புப் பத்திரிகைகளை விட சமூக வலைத்தளங்களும் இலத்திரனியல் ஊடகங்களும் பிரபல்யம் பெற்றிருந்தமை, இப்படியான கதைகள் மக்களை இலகுவில் சென்றடைந்தமையையும் எதிர்காலத்தில் உலகத்தின் செயற்பபாடுகள் புதிய பாதையில் செல்லப் போவதையும் காட்டுகின்றன.

தொடரும்...

# இலங்கை அரசுடன் தேனிலவு கொண்டாடுகிறதா

# தமிழ் தரப்பு?



அரசியல் ஆய்வாளர்
-நிலாந்தன்-



சுதந்திர தினத்தையொட்டி இனப்பிரச்சனைக்கான தீர்வு தொடர்பில் ஒரு திருப்பகரமான அறிவிப்பு ஒன்றை வெளியிடப்போவதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஏற்கனவே அறிவித்திருந்தார் பதவியேற்றபின். ஆனால் இதுவரையும் தமிழ் தரப்புடன் நடந்த பேச்சு வார்த்தையின் விளைவின் படி அவர் அப்படிப்பட்ட திருப்பகரமான ஒரு முடிவை சுதந்திர தினத்தன்று அறிவிக்கப்பட முடியாத நிலை தான் காணப்படுகின்றது. இதற்கு வெளிப்படையாக தெரியும் காரணம் என்னவென்றால் தமிழ் தரப்பு பேச்சு வார்த்தைக்கான ஒரு நல்ல எண்ண சூழலை ஏற்படுத்தும் விதத்தில் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி என்ற வகையில் அவர் சில விடயங்களை செய்து காட்ட வேண்டும் என்று கேட்டிருந்தார்கள் அதற்கான கால அவகாசமும் கொடுத்திருந்தார்கள். ஆனால் அவர்கள் கேட்டுக்கொண்டபடி கேட்டுக்கொண்ட கால எல்லைக்குள் அவர் பெரிதாக எதையும் செய்திருக்கவில்லை மூன்று கைதிகளை விடுவித்திருக்கின்றார், இதற்கு அப்பால் கொஞ்ச காணிகள் விடுவிக்கப்பட்டிருக்கின்றது என்று சொல்லி தாங்கள் கேட்ட விடயங்களை தாங்கள் கேட்ட காலப்பகுதிக்குள் அவர் செய்து முடிக்கவில்லை என்பதனை காரணமாகக் கூறி தமிழ் தரப்பு அவருடைய பேச்சுவார்த்தையை அவர் எதிர்பார்த்த விதத்திலும் அவர் விரும்பிய நிகழ்ச்சி நிரலின்படி முன்னெடுப்பதற்கு தயாராக இருக்கவில்லை.

இதனால் ரணில் விக்ரமசிங்க ஒரு நிகழ்ச்சி நிரலை ஏற்றுக்கொண்டு பேச்சு வார்த்தைகளை தொடங்கினார். அது என்னவெனில் தமிழ் தரப்போடு பேசப்போகின்றேன் என்று காட்டுவதன் மூலம் அவர் ஐ.எம்.எப் இடம் இருந்து பெறும் உதவிகளை வேகப்படுத்தலாம், வெளி உலகின் உதவிகளையும் வேகப்படுத்தலாம். இப்படி பல நாடுகள் பொருளாதார நெருக்கடிக்கான நிதியுதவியும் இனப்பிரச்சனைக்கான தீர்வும் ஒரே பக்கேஜ்க்குள் (ஒரே தீர்வுக்குள்) இருக்க வேண்டும் என்று கேட்பதாக தகவல் தவிர போன ஜெனீவா கூட்டத்தொடரின் இந்தியாவின் நிலைப்பாடும் அப்படித்தான் இருந்தது எவ்வாறெனில் பிரச்சனைக்கான தீர்வும் இலங்கையின் பொருளாதார மீள்ச்சிக்கான செயல்திட்டமும் ஒன்றில் இருந்து ஒன்று பிரிக்கப்பட முடியாது என்று இந்தியர்களிடம் பேசியிருந்தார். இந்த அடிப்படையில் இனப்பிரச்சனையை தீர்க்கப்போகின்றேன் என்ற தோற்றத்தை கட்டியெழுப்ப வேண்டிய தேவை அவருக்கு தற்பொழுது வந்துவிட்டது. அப்படியொரு தோற்றத்தை கட்டுவதற்கு அவரோடு தமிழ் தரப்பு ஒத்துழைக்கும் என்றும் அவர் நம்பியிருக்கலாம் ஆனால் அந்த நம்பிக்கையின்படி எதுவும் நடக்கவில்லை. அதற்கு தமிழ் தரப்பு கூறும் காரணம் குறிப்பாக கட்சிகளுள் பெரிய கட்சியாக இருக்கும் தமிழரசுக் கட்சி அப்படித்தான் சொல்ல வேண்டும். ஏனென்றால் பேச்சு வார்த்தை தொடங்கும் பொழுது கூட்டமைப்பு இருந்தது. பேச்சு வார்த்தை தொடங்கிய பின் கூட்டமைப்பு இல்லை தற்பொழுது கூட்டமைப்பு வந்திருக்கின்றது. அதில் தமிழரசுக் கட்சி தனியொரு பெரிய கட்சியாக நிற்கின்றது. தமிழரசுக் கட்சி சொல்வது என்னவெனில் தாங்கள் முன்வைத்த சில விடயங்களை காலஅவகாசத்துக்குள் முடிக்கவில்லை அதே போன்று தமிழரசுக் கட்சியுடன் முன்னர் பங்காளி கட்சிகளாக இருந்த ரெலோ புளொட் கட்சிகளும் சொல்லுகின்றன நாங்கள் முன்வைத்த பல விடயங்களை அவர் குறிப்பிட்ட கால எல்லைக்குள் நிறைவேற்றவில்லை என்பது மட்டுமல்ல தமிழரசுக் கட்சி இந்த பேச்சு வார்த்தைகள் தொடர்பில் நாங்கள் இனி பேச மாட்டோம் என்று கூறி முடிவெடுப்பதற்கு முன்னரே ரெலோவும்,புளொட்டும் பேச்சு வார்த்தை ஒன்றிற்கு போனார்கள். இந்த நிலையில் தமிழ் தரப்பு முன்வைத்த பேச்சு வார்த்தைக்கான நல்லென்ன சூழலை கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகள் விடயத்தில் ரணில் விக்ரமசிங்க முன்னேற்றத்தை காட்டாதபடியால் யாழ் பேச்சுக்கள் அவர் தொடங்கிய பேச்சு வார்த்தைகள் மூன்று நாள் என திட்டமிட்டும் ஒரு நாள் தான் நடந்தது.

ஆகவே நிகழ்ச்சி நிரல்கள் குழுப்பப்பட்டவிட்டன. அந்த நிகழ்ச்சி நிரல்கள் குழுப்பப்பட்டதற்த தமிழ்தரப்பின் இறுக்கமான நிலைப்பாடு காரணம். ஆனால் தமிழ்தரப்பு இறுக்கமான நிலைப்பாட்டை எடுக்க காரணம் வெளியில் இருந்து பார்த்தால் அரசாங்கம் ஒப்புக்கொண்ட விடயங்களை நிறைவேற்றாது என்று தோன்றும். அது ஒருபகுதி உண்மை அரசாங்கம் ஒப்புக்கொண்டதை நிறைவேற்றவில்லை என்பது இப்பொழுது மட்டுமல்ல நல்லாட்சி என்று சொல்லப்பட்ட ரணில் மைத்திரி கூட்டாட்சியின் போதும் கூட்டமைப்பு ரணில் விக்ரமசிங்கவின் மறைமுக பங்காளியாக இருந்தது. நிலைமாறு கால நீதியின் பங்காளிகளில் ஒன்றாக இருந்தது. அப்படி இருந்துவிட்டு அப்பொழுது ரணில் சொன்னபடி காரியங்களை செய்யவில்லை என்று சொல்லி அந்த யாப்பு உருவாக்க முயற்சியை உடைத்துக்கொண்டு வெளியில் வரவில்லை. அன்று இருந்த ரணிலின் செயல் முறையை முறிக்கவில்லை. ஆனால் இன்று அவர்கள் தேனிலவுக்கு போகவே தயாரில்லை என்றால் வெறும் ஏற்றுக்கொண்ட விடயங்களை அரசாங்கம் நிறைவேற்றாதது மட்டும் ஒரு காரணம் என்று சொல்வது ஏற்புடையதல்ல. அதைவிட வேறு காரணங்களும் உண்டு.

ஒரு பிரதான காரணம் தமிழ் கட்சிகளுக்குள் ஏற்பட்டிருக்கும் உடைவும் புதிய சேர்க்கையும். கூட்டமைப்பு தற்பொழுது இல்லை அதாவது கடந்த 20 வருடங்களாக நிலையில் நின்ற சம்பந்தர் தலைமையிலான கூட்டமைப்பு தற்பொழுது இல்லை. புதிய கூட்டுக்கள் உருவாகியுள்ளன. இதில் புதிய கூட்டு உருவாகும் பொழுது புதிய கூட்டுக்குள் உள்ள கட்சிகள் தீவிரமான நிலைப்பாட்டை எடுத்து பேச்சு வார்த்தையை எடுக்க தொடங்கினால் தனியே நிற்கும் தமிழரசுக் கட்சி அதைவிட தீவிரமான நிலைப்பாட்டை எடுக்க வேண்டிய தேவை வரும் இதுவொரு காரணம். இரண்டாவது தமிழரசுக் கட்சி வழமையாக யு.எம்.பி ஆட்சிக்கு வரும்பொழுது ஆட்சி ஏற்காது அதே நேரம் எக்கனமி ஆட்சிக்கு வரும்பொழுது போராடத் தொடங்கும் அரசாங்கத்தை எதிர்க்கும் போனமுறையும் அதுதான் நடந்தது. ஆனால் இந்தமுறை வந்திருப்பது யு.எம்.பி தலைவர் அதாவது தாமரை மொட்டு நாடாளுமன்றம் என்றும் பொழுது இதில் கூட்டு சேரவும் முடியாது. அரகலிய போராட்டத்தில் சுமந்திரன் திட்டவட்டமாக அரகலியவின் பக்கம் நின்ற காரணத்தால் அரகலியவை நசுக்கிய ஒரு தலைவரோடு கூட்டு சேர்ந்து போவதும் கஷ்டம். இதுவும் இந்தமுறை இனக்கரசியலிற்குள் போவது தான் கதை. இதைவிட முக்கிய காரணம் போன தேர்தலில் கூட்டமைப்பு ஆறு ஆசனங்களை இழந்தது. ஆறு ஆசனங்களை இழப்பதற்கு காரணம் பிரதானமாக ரணில் மைத்திரி அரசாங்கத்துடன் கொண்டாடிய தேனிலவு தான். நிலைமாறு கால நீதிக்கான தேனிலவு தான். திட்டமிட்ட அடிப்படையில் கூட்டமைப்பு எதிர்ப்பு அரசியலுக்கு வந்து விட்டது. இது வழமையாக தமிழரசுக் கட்சியின் வரவை பார்த்தால் தமிழரசுக் கட்சி முதலில் யு.என்.பி அரசாங்கங்கள் வரும் பொழுது அல்லது இனக்கமான அரசியலுக்குள் வரும் பொழுது தேனிலவு கொண்டாடும் தேனிலவு கொண்டாடி தமிழ் மக்களுக்கு எதுவும் பெற்றுக்கொடுக்காது. ஒன்றையும் பெற்றுக்கொடுக்காத பொழுது அடுத்து வரும் தேர்தலில் அது தோற்கும். தோல்வியுற்றவுடன் கடும் நிலைப்பாடுகளை எடுத்து பிரகடனங்களை வெளியிடும். வட்டுக்கோட்டை பிரகடனமும் அப்படிப்பட்டதொன்று தான். தோல்விகளின் பின் தமிழரசுக் கட்சிகள் எப்பொழுதும் தீவிரமான நிலைப்பாட்டை எடுத்து வாக்காளரை கவர முயற்சிக்கும். இந்த முறையும் அப்படித்தான் போன பொதுத் தேர்தலில் தோல்வியுற்றதன் விளைவாக தமிழரசுக் கட்சி இழந்த ஆசனங்களை பெறுவதற்கு எதிர்ப்பு அரசியலை பின்பற்றுவது என்ற முடிவிற்கு வந்து விட்டது. இந்த முடிவு அரகலியவிலே தொடங்குகின்றது. அரகலியவை ஆதரித்ததன் காணத்தால் அதன் தக்கபூர்வ வளைவாக ரணிலை ஆதரிக்க முடியாத நிலை வந்து சாணக்கியனுக்கும் ரணிலுக்கும் இடைப்பட்ட வாக்குவாதங்கள் இவை எல்லாவற்றினதும் சேர்க்கையாக இப்பொழுது இந்த அரசாங்கத்திற்கு எதிரான நிலைப்பாட்டுடன் தான் கூட்டமைப்பில் தமிழரசுக் கட்சி காணப்படுகின்றது. கூட்டமைப்பில் காணப்பட்ட கட்சிகள் தாங்கள் ஒரு புதிய கூட்டை உருவாக்கி அதே நேரம் பங்காளி கட்சிகளாக இருந்த ரெலோ புளொட் என்பன பேச்சு வாரத்தை தொடர்பாக இறுக்கமான நிலைப்பாட்டை கொண்டிருக்கின்றன. அரசாங்கம் நினைத்ததை வளைக்கமுடியாத நிலைப்பாட்டை கொண்டிருக்கின்றது. இதில் ஒப்பீட்டளவில் ஓரளவிற்கு தாராள தன்மை நிலைப்பாட்டை விக்னேஸ்வரன் தான் கொண்டிருக்கின்றார். ஓரளவு ரணிலுடன் உறவாடக்கூடிய ஒருவராகவும் காணப்படுகின்றார். அவர் தனியான பேச்சு வார்த்தையை நடத்த முடியாது. விக்னேஸ்வரனும் அண்மையில் வீரகேசரியின் பணிப்பாளர் நடேசனுக்கு இந்தியாவில் விருது வழங்கப்பட்ட அந்த நிகழ்வில் பேசும் பொழுது அரசியல் தொனியில் தான் பேசுகின்றார். அப்படிப்பார்த்தால் விக்னேஸ்வரனும் ஏனைய கட்சிகளின் எதிர்ப்பு அரசியலை முன்னெடுக்கும் பொழுது இனக்கரசியலுக்கு போவதற்கான வாய்ப்பு குறைவு. முற்றும் அவருடன் இணைந்திருக்கும் மணிவண்ணன் அவரை ஒரு இனக்க அரசியல் நோக்கி செல்ல விடமாட்டார் என்றும் ஊகிக்கலாம். தற்பொழுது இருக்கும் நிலையில் கஜேந்திரகுமார் ஏற்கனவே சொல்லிவிட்டார் இந்த பேச்சு வார்த்தைக்கு தாங்கள் வரமாட்டோம் என்று. தமிழரசுக் கட்சி அதுக்குள்ளே என்ரி பன்னி எக்ஸ்போஸ் பன்னலாம் என்ற மாதிரி போய் தற்பொழுது தமிழரசுக் கட்சியின் கிட்டத்தட்ட பேச்சு வார்த்தையை நிபந்தனைகளோடு தொடர்வதற்கு தான் அவர்கள் தயாராக இருக்கின்றார்கள். தமிழரசுக் கட்சியில் முன்னர் இருந்து தற்பொழுது விலகி போன பங்காளி கட்சிகளும் இதற்கான நிலைப்பாடு தான்.

ஆனால் இதில் தமிழ் கட்சிகளுக்கு இருக்கக்கூடிய ஒரு புதிய பிரச்சனை என்னவென்றால் இந்தியா 13ஐ தொடர்ந்தும் வலியுறுத்துகின்றது. குறிப்பாக அண்மையில் கொழும்பிற்கு வந்து போன இந்திய வெளியுறவு அமைச்சர் 13ஐ முழுமையாக அமுல்படுத்துவதைப் பற்றி சொல்லியிருக்கின்றார். ஆனால் அவர் அதையொரு இடைக்கால ஏற்பாடாகத்தான் சொல்லுகின்றார் 13க்கு அப்பால் போக வேண்டாம் என்று அவர் சொல்லவில்லை அதற்கு அப்பால் போவது தமிழ் மக்களினது கையில் விடப்படுகின்றது. எந்தவொரு நாடுமே தமிழ் மக்கள் போராடாமல் தீர்வு இல்லை தானே. தமிழ் மக்கள் தங்களுக்காக தாங்கள் தானே போராட வேண்டும். இந்தியாவோ அல்லது ஐ.நா வோ தமிழ் மக்களுக்கு தீர்வை தரும் என்று எதிர்பார்க்க முடியாது தானே. எனவே தமிழ் மக்கள் தான் போராட வேண்டும்.

அந்த அடிப்படையில் பார்த்தால் ஜெய்சங்கர் ஒரு இடைக்கால ஏற்பாடாக அவர்கள் 13 ஐ சொல்லுவார். கடந்த 3 தசாப்பதங்களாக அதைத்தான் தற்பொழுது சொல்லப்படுகின்றது. ஜெய்சங்கர் 13 ஐ முன்வைக்கும் பொழுதும் ரணிலுக்கு அது வசதி. ரணில் இந்தியாவை நெருக்கிச் செல்லாது உதவும் அதே நேரம் இந்தியாவையும் தமிழ் தரப்பையும் மோதவிடாது இருக்க உதவும். 13 ஐ ரணில் பிடிக்கின்றார் ஆனால் போனமுறை நல்லாட்சி காலகட்டத்தில் அவர் 13 ஐயும் கடந்து என்பதன் பொருள் என்னவென்றால் 13 ஐயும் இல்லாமல் செய்யும் புதிய யாப்புக்கு அவர் போனார். ஆனால் புதிய யாப்பிற்குள் அவர் கொண்டுவர தொடங்கியது ஒற்றையாட்சி என்று சொல்லப்படும் தீர்வு ஒற்றையாட்சிக்கு வெளியில் வந்துவிட்டதா? இல்லையா? என்பது வரவில்லை. அதுவும் ஒற்றையாட்சி பண்பு உடையது என்று கருதப்படுகின்றது. ஆனால் அது சிங்கள மக்களுக்கு ஒற்றையாட்சி என்று சொன்னார்கள் தமிழ் மக்களுக்கு லேபில் இல்லாத சமஷ்டி என்று சொன்னார்கள். போனமுறை 13 ஐ தாண்டி போக முற்பட்ட ரணில் தற்பொழுது 13 க்குள்ளேயே நிற்கலாம் என்று யோசிக்கின்றார். ஏனென்றால் இந்தியாவின் அரவணைப்பு அவருக்கு தேவை. இந்தியா கடந்த ஓராண்டு காலமாக ரணில் விக்ரமசிங்கவை பொறுத்து விலகி நிற்கும் நிலைப்பாட்டை கொண்டிருந்ததாக நம்பப்படுகின்றது. ரணில் இந்தியாவிற்கு போக முயற்சித்த பொழுதும் இந்தியா அவரை வரவேற்கவில்லை. அன்றிருந்த பின்னணிக்குள் கடந்த ஓராண்டு முழுவதும் கடனை அடைக்கும் விடயங்களிலும் புதிய விடயங்களை பெறும் விடயங்களிலும் இந்தியா இலங்கைக்கு உடனடியாகவும், அதிகமாகவும் உதவியிருக்கின்றது. இதன் மூலம் இந்தியா கடந்த ஓராண்டு காலப்பகுதிக்குள் இலங்கைத் தீவு மீதான தன் பிடியை ஒப்பீட்டளவில் இறுக்கி கொண்டு இருக்கின்றது கடந்த 13 ஆண்டுகளில்.

தொடரும்...

# தமிழ் மக்களுக்கான தீர்வுதிட்டத்தை சர்வதேச ரீதியாகவே பெற்றுக்கொள்ள முடியும்



1948 ஆம் ஆண்டு பெப்ரவரி 4 இல் பிரித்தானியரிடமிருந்து இலங்கைக்கு சுதந்திரம் கிடைக்கப்பெற்றது என்று சொல்லப்படுகின்றது. ஆனால் தமிழ் மக்களுக்கு விலங்கிடப்பட்ட நாளும் அன்று தான். 75 வது இலங்கையின் சுதந்திர தினம் என்றால் 75 வது தமிழர்களுக்கான இருண்ட தினம் அல்லது விலங்கிடப்பட்ட நாளும் அதுதான். அதை நாங்கள் தொடர்ச்சியாக தமிழ் மக்களை பொறுத்தவரையில் 75 வருடங்களாக நாங்கள் அதை கடந்து வந்திருக்கின்றோம். இலங்கை தமிழரசுக் கட்சி தான் முதன் முதலாக போராட்டத்தை ஆரம்பித்தது 1949 ஆம் ஆண்டில் இருந்தே 1950 ஆம் ஆண்டு தொடக்கம் எல்லா சுதந்திர தினத்தையும் நாங்கள் புறக்கணித்தது தான் வரலாறு. இன்று வரை அது தொடர்ந்தும் பேணப்பட்டுவருகின்றது. 1965 ஆம் ஆண்டு சிங்கள தலைமைகளுடன் செய்யப்பட்ட ஒப்பந்தங்களையும் ஒப்பந்தத்தை கிழித்தெறிந்ததும் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டு அதை பின்வாங்கியது முழுவதுமாக ஆட்சி செய்தது சிங்கள தலைமைகள் தான். அதனால் தான் 1976 ஆம் ஆண்டு ஒன்றுமே செய்யமுடியாமல் வட்டுக்கோட்டை தீர்மானம் எடுக்கப்பட்டதும் தமிழர்கள் தான் பிரகடனம் என்று சொல்லப்பட்டதற்கும் காரணம் 1976 ஆம் ஆண்டுக்கு முதல் தந்தை செல்வா உடன் பேசி ஒரு இணக்கப்பாடான அரசியல் சுதந்திரம் கிடைத்திருந்தால் வட்டுக்கோட்டை தீர்மானத்தை தந்தை செல்வாவிடம் திணிக்கமாட்டார் அதுதான் உண்மை. அவரால் ஒப்பந்தம் செய்தும் இயலாது. அகிம்சை போராட்டம் செய்தும் இயலாது. பேச்சு வார்த்தை நடத்தியும் இயலாது என்பதை அறிந்து தான் தமிழர் விடுதலை கூட்டணியை உருவாக்கி வட்டுக்கோட்டை தீர்மானத்தை எடுத்தார்.

1949 ஆம் ஆண்டு முதல் சமஷ்டியை கேட்ட தந்தை செல்வா சாகும் பொழுது கூட அவர் சமஷ்டியுடன் சாகவில்லை தமிழீழ கனவுடன் தான் இறந்தவர். சிலபேர் சொல்கின்றனர் தந்தை செல்வா சாகும் பொழுது 1970 இல் தமிழ் மக்களை இனி கடவுள் தான் காப்பாற்ற வேண்டும் என்று சொல்லுகின்றார்கள் அது பொய் அகிம்சை போராட்டத்திற்காகத்தான். அவர் சாகும் பொழுது கடவுளிடம் பாரம் கொடுத்துவிட்டு போகவில்லை. தமிழீழம் கிடைக்கும் என்ற நம்பிக்கையை தான் கொடுத்துவிட்டு போனார். அனைவரும் அந்த வரலாற்றை மறைப்பதும் தந்தை செல்வா கடவுள் தான் காப்பாற்ற வேண்டும் என்று சொன்னது என்பது எல்லாம் பொய். தந்தை செல்வா சொன்னவர் தான் கடவுள் தான் காப்பாற்ற வேண்டும் என்று ஆனால் அது 1970 ஆம் ஆண்டு. அதன் பின் 5 வருடத்திற்கு பிறகு சுதந்திர தினம் தான் மக்களுக்கான தீர்வு என்று சொன்னது.1976 ஆம் ஆண்டு அவர் இறந்தார்.ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதி இதை தெளிவாக பார்க்க வேண்டும். ஒரு பேச்சு வார்த்தையை செய்ய முடியாது செய்து ஒவ்வொரு சுதந்திர தினத்தையும் அடிமை நாளாக கருப்பு பட்டி போராட்டங்கள் எல்லாம் நடத்திய வரலாறு தந்தை செல்வாவின் காலத்தில் தான் இருக்கின்றது. தந்தை செல்வாவின் காலத்தில் தான் திருகோணமலையில் முதன் முதலில் சுதந்திர தினத்திற்கு கறுப்பு கொடி கட்டி நடராசா என்பவர் இறந்ததும் அவரின் காலத்தில் தான்.

எனவே வட்டுக்கோட்டை தீர்மானம் எடுத்ததன் பிற்பட்ட காலப்பகுதியில் தான் விடுதலை போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இளைஞர்களின் கையில் பாரத்தை கொடுத்தவர். அப்பொழுது 36 விடுதலை இயக்கங்கள் அதில் போராட்டத்திற்கு என்று வந்தது. இறுதியாக 1987 ஆம் ஆண்டு யூலை மாதம் 29 ஆம் திகதி வரை பல இயக்கங்கள் போராடினார்கள். அதிலும் பல இயக்கங்கள் 1987 ஆம் ஆண்டு இலங்கை இந்திய ஒப்பந்தத்துடன் மௌனிக்கப்பட்டு விட்டன. தமிழீழ விடுதலைப் புலிகள் தான் தொடர்ந்தும் 2009 மே வரையும் போராடியது. அதில் என்ன பிரச்சனை என்றால் 1987 - 1990 ஆம் ஆண்டும் எங்களது விடுதலைக்காக போராடிய ஆயுத இயக்கங்கள் காட்டிக்கொடுத்து ஒட்டுக்குழுக்களாக மாறிய வரலாறும் இருக்கின்றது.

ஏன் தொடர்ந்தும் இனவாத அரசியலை செய்தார்கள். என்றால் சிங்கள மக்களிடம் வாக்கு பெறுவதற்காக அரசியல் முதலீடு என்பது இனவாதம் தான் சிறிலங்கா சுதந்திர கட்சியாக இருக்கலாம் அல்லது ஐக்கிய தேசிய கட்சியாக இருக்கலாம் யாராக இருந்தாலும் சந்திரிகாவாக இருக்கலாம். சிறிமாவோவாக இருக்கலாம்.ஆர்.பிரேமதாஸவாக இருக்கலாம். பண்டாரநாயக்க குமாரதுங்கவாக இருக்கலாம். மகிந்த ராஜபக்சவாக இருக்கலாம் அத்தனை பேருமே வாக்கு பெறுவதற்கான முதலீடு இனவாதம் தான். 75 வது சுதந்திர தினம் வரும் பொழுது கூட ஒரு பேச்சுவார்த்தை மூலம் ஒரு தீர்வை தருவதற்கு தான் தயார் என்று சொல்லுகின்றார் ரணில் விக்ரமசிங்க. அவருக்கு பலம் இல்லை என்பது வேறு விடயம். 134 பாராளுமன்ற உறுப்பினர்களால் தெரிவு செய்யப்பட்ட இலங்கையில் முதலாவது ஜனாதிபதி அவர் தான். ஆனால் அவர் கொடுக்கும் சில பேச்சு வார்த்தைக்கு கூட 13 வது அரசியல் முழுமையாக அமுல்படுத்துவதற்கு விமல் வீரவன்ச என்ன சொல்கின்றார் என்றால் அதை கொடுத்தால் தமிழீழம் கிடைக்கும் என்கின்றார். அதே நேரத்தில் காணிகளை எக்காரணம் கொண்டும் படையினரை வடக்கு கிழக்கில் இருந்து மாற்ற முடியாது என்று சொல்லுகின்றார்கள். எனவே என்ன பிரச்சனை என்றால் அரசியல்வாதியாக இருந்தாலும் சரி இலங்கையில் பௌத்த இன துறவிகளாக இருந்தாலும் சரிதான் தமிழ் மக்களுக்கான தீர்வு கொடுக்கக்கூடாது என்ற வரலாறு தான் இந்த 75 வருடங்களும் நடந்துகொண்டு இருக்கின்றது. இலங்கை சுதந்திரம் அடைந்தாலும் கூட 75 வருடங்கள் தமிழர்கள் அடிமைகளாக இருக்கின்றார்கள் என்பது தொடர்ந்தும் இருந்து வந்த வரலாறு ஆகும்.




சந்திரிக்கா இருக்கும் பொழுது ஒரு தீர்வு திட்டம் வந்தது அந்த திட்டத்தை தயாரித்தது நீலன் திருச்செல்வம். வழங்கப்பட்ட தீர்வு திட்டத்திற்குள் அதை ஒரு முன்னேற்றகரமான தீர்வுதிட்டம் என்று சொல்லுகின்றார்கள். அந்த தீர்வு திட்டம் வழங்கும் பொழுது விடுதலைப் புலிகள் 70 சதவீதமான நிலப்பரப்பை தன்னகத்தே கொண்டு நிர்வாக கட்டமைப்பை ஆட்சி செய்த காலப்பகுதி தான் அந்த தீர்வு திட்டம் வந்தது. எனவே தமிழீழ விடுதலைப்புலிகளின் கொள்கை கோட்பாடு எல்லாம் முடிந்த இறுதி முடிவு தமிழீழம் என்பது தான் என்ற முடிவுடன் போராடிக்கொண்டிருந்தார்கள். அந்த காலத்தில் அந்த தீர்வு திட்டத்தை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை அதுதான் உண்மை. அவர்களுக்கு நம்பிக்கை இருந்தது என்னவென்றால் தமிழீழம் கிடைக்கும் என்று போராட்டம் இடம்பெற்றதனால் எந்தவொரு தீர்வு திட்டமும் இலங்கையில் பேரினவாதம் ஏமாற்றும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இருந்தது எனவே அதை ஏற்றுக்கொள்ளவில்லை அதுதான் உண்மை.

டிஜிட்டல் உலகத்தில் நாங்கள் வாழ்ந்தாலும் கூட காலி முகத்திடலில் சிங்கள மக்கள் போராட்டம் நடத்தி கோட்டபாயவைத்தான் விரட்டியடிக்க முடிந்ததே தவிர சிங்கள மக்களால் இனவாதத்தை விரட்டியடிக்க முடியவில்லை. தற்பொழுதும் இருக்கின்றது தானே. அப்படியான ஒரு நல்ல நோக்கம் கொண்ட பொது அமைப்பாக இருக்கக்கூடிய சிங்கள மக்கள் கூட இந்த காலகட்டத்திலே அவர்கள் ஒரு தீர்வை கொடுக்க வேண்டும் என்றோ அப்படியொரு போராட்டம் நடத்தவில்லை.

விடுதலைப்புலிகளினுடைய போராட்டம் தமிழ் மக்களினுடைய அகிம்சை போராட்டம் எல்லாம் தற்பொழுது சர்வதேச மயப்படுத்தப்பட்டு விட்டது. சர்வதேச மயப்படுத்தப்பட்ட இலங்கைக்குள்ளே ஒரு ஈழம் இருக்கின்றது. 10 இலட்சம் மக்கள் இடம்பெயர்ந்து போனவர்கள் எல்லாரும் தானும் தங்களது பாடும் என்று இருக்கவில்லை போனவர்கள் அனைவரும் தனது நாட்டுக்கு ஒரு விடிவு கிடைக்க வேண்டும் என்ற போராட்டங்களைத் தான் அங்கும் செய்கின்றார்கள். ஆகவே சர்வதேச மயப்படுத்தப்பட்டுவிட்டது அதற்கு காரணம் ஆயுத போராட்டம் தான். விடுதலைப் புலிகளின் ஆயுத போராட்டத்தால் தான் சர்வதேசமயப்படுத்தப்பட்டது என்பதை 2001 ஆம் ஆண்டு தமிழ் தேசிய கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்திலே சொல்லியிருக்கின்றார்கள். தமிழ் தேசிய கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் கையொப்பமிட்டிருக்கின்றார். அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் பொதுச்செயலாளர் சிறிதரன் அவர்கள் கையொப்பமிட்டிருக்கின்றார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் பொதுச்செயலாளர் சிறிகாந்தா கையொப்பமிட்டிருக்கின்றார். அந்த கையொப்பமிட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் என்ன சொல்லுகின்றார்கள் என்றால் இரண்டு தசாப்தங்களாக நாட்டில் ஏற்பட்ட விடுதலைப் புலிகளின் தியாகத்தின் காரணமாக இந்த போராட்டம் சர்வதேசமயப்படுத்தப்பட்டுள்ளது என்று 2001 இல் சொல்லுகின்றார்கள். 2001 இல் தான் விடுதலைப்புலிகளால் தான் சர்வதேசமயப்படுத்தப்பட்டது என்பதை தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவரும் சொல்லியிருக்கின்றார்கள். அதற்கு பின்னரும் இன்னும் பல போராட்டங்களாலும் அனைத்து நாடுகளுக்கும் போயிருக்கின்றது. சர்வதேச அழுத்தங்கள் இலங்கைக்கு இருந்தாலும் கூட இன்னும் இலங்கை தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்ற அந்த இடத்திற்கு இன்னும் வரவில்லை. அதுதான் இனப்படுகொலைக்கான நியாயமான தீர்வு என்றால் சர்வதேச விசாரணை தான் அதற்கு சரி என்று சொல்வது அதுதான். இனிவரும் காலத்தில் இனவாத அரசு தொடர்ந்தும் இப்படித்தான் இருக்கும் எனவே நாங்கள் சர்வதேச ரீதியாக தான் தீர்வை பெற்றுக்கொள்ள முடியும் என்பதே இன்றைய நிலைப்பாடு.


**துரியோதரன்**

# உள்ளூராட்சி தேர்தலும் கறுப்பு பணமும்

உள்ளூராட்சிமன்ற தேர்தல்களை பொறுத்தவரையில் பிரதேசங்களின் அபிவிருத்தியை முன்னெடுப்பதற்கு ஏதுவாகவே அமையப்பெறுகின்றது. அதில் குறிப்பாக கொண்டுவரப்பட்ட விடயங்களாக உள்ளூராட்சி சட்டங்கள், உள்ளூராட்சிமன்ற தேர்தல் நடத்தப்படும் முறை, உள்ளூ ராட்சி மன்றங்கள் நிரூவப்படுதல், உள்ளூ ராட்சி மன்றங்களுக்கான அதிகாரங்கள், நிதி மற்றும் கட்டுப்பாடு, வரவு - செலவு திட்டம் என்ற விடயங்களே ஆகும். உள்ளூ ராட்சி நிறுவனங்கள் அல்லது மன்றங்கள் என்று பார்க்கும் பொழுது பிரதேச சபைகள், நகர சபைகள், மாநகர சபைகள் என்பன காணப்படுகின்றன. ஆக மொத்த உள்ளூ ராட்சி மன்றங்களாக 341 அதில் எல்பிட்டிய மற்றும் கல்முனை மாநகர சபைகளை தவிர்த்து 339 சபைகளும் 58 அரசியல் கட்சிகளும் 329 சுயேட்சை குழுக்களுமாக மொத்தம் 80,720 பேர் போட்டியிடுகின்றனர். மாகாணசபைகள் என்னும் பொழுது உள்ளூ ராட்சி நிறுவனங்கள் அல்ல மாகாணசபைகள் ஆட்சிக்காக வரையறுக்கப்பட்ட மற்றும் நிறைவேற்று அதிகாரங்கள் கையளிக்கப்பட்ட நிறுவனங்களாகும். உள்ளூராட்சிக்கான அதிகாரங்கள் எவ்வாறு கிடைக்கின்றன என்று பார்த்தால் நாட்டின் பிரதான சட்ட அரசின் அமைப்பின் மூலம், 13 வது திருத்தத்தின் 9 வது அட்டவணையில் 4.1, 4.2, 4.3 உறுப்புரைகள் எடுத்துக்கூறுகின்றன.

மேற்படி உள்ளூராட்சி மன்றங்களுக்கான அதிகாரங்கள் எவருக்கு கிடைக்கின்றது எதற்காக கிடைக்கின்றது என்று பார்க்கும் பொழுது உள்ளூராட்சி அமைச்சுக்கும் மாகாணசபையின் அதனை ஒத்த அமைச்சுக்கும் உள்ளூராட்சிமாகாணசபையும் ஒன்று சேர்ந்து மாகாணசபையின் மாதிரி பொறுப்புக்கள் கொள்கை பதவிக் காலம் என்பவற்றை தீர்மானித்து உள்ளூராட்சி மன்றங்கள் ஸ்தாபிக்கப்படுகின்றன. உள்ளூராட்சி சபைகளை நிர்வகிக்கும் மொழிகளாக சிங்களம், தமிழ் இரு மொழிகளும் அமைகின்றன. உள்ளூராட்சி மன்றங்கள் எவ்வாறு நடத்தப்படுகின்றன என்று பார்க்கும் பொழுது அரசியலமைப்பின் 104 வது (ஆ) உறுப்பின் பிரகாரம் மேற்படி ஆணைக்குழுவினாலும் தேர்தல் ஆணையகத்தினாலுமே சட்டங்கள் பிறப்பிக்கப்படுகின்றன. 80,720 பேர் போட்டியிடுகின்ற பொழுது குறைந்தபட்சம் ஒருவருக்கு 5 இலட்சம் ரூபாய் வரை தேவைப்படுகின்றது. மக்கள் எதிர்பார்க்கும் அளவிற்கு அபிவிருத்திகளை மேற்கொள்ளாவிட்டாலும் தேர்தல் பிரச்சாரங்களின் போது அவ்வப்போது தேர்தல் பதாதைகள் நோட்டீஸ் மற்றும் தம்மைப் பற்றிய விளம்பரங்கள் கொடுப்பதற்கு கட்டாயம் இப் பணம் செலவாகும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. அவ்வாறு இருக்கும் பொழுது இப்பணத்தை அரசாங்கம் இவர்களுக்கு ஒருபோதும் வழங்காது. குறித்த கட்சிகளே தமது கட்சிகளில் போட்டியிடும் ஒருவருக்கு 40 ஆயிரம் ரூபாய் வீதம் கொடுக்கின்றார்கள். செல்வாக்குள்ளவர்கள் கூடுதலாக பெற்றுக்கொள்ளும் வாய்ப்பும் இருக்கின்றது. 58 அரசியல் கட்சிகளும் வெளிநாடுகளில் இருந்து தமது கட்சிக்கான பணத்தை அறவிடப்போகின்றார்கள். 58 கட்சிகளுக்குமான செலவீனங்களாக குறைந்தபட்சம் 3 ஆயிரத்து 500 கோடி ரூபாய் வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு கிடைக்க இருக்கின்றது. இதனால் இலங்கைக்குள் பணம் கொண்டுவருவதற்கான டொலர் பற்றியோ கவலைப்பட வேண்டிய தேவையில்லை. இத் தேர்தலை நடத்துவதன் முக்கிய நோக்கம் கறுப்பு பணத்தை சந்தைக்கு கொண்டு வருவதேயாகும்.

குறிப்பாக சுயேட்சைகளாக போட்டியிடும் 329 சுயேட்சைக் குழுக்களும் கட்சிகளின் வாக்குகளை உடைப்பதற்கு அதிகூடிய பணத்தை மக்களுக்கு கொடுத்து திசை திருப்பும் வேலைத்திட்டங்களையே செய்வார்கள். பிரதான 58 கட்சிகளும்



ஆளுக்கு 5 சுயேட்சை குழுக்களையாவது சராசரி களமிறக்கியிருப்பார்கள். இதற்கான செலவீனங்களை பார்க்கும் பொழுது தலா ஒருவருக்கு 5 இலட்சம் ரூபாய் வீதம் பார்க்கலாம். அரசாங்கம் இந்த தேர்தலை நடத்துவதற்கு 1100 கோடி தேவை என அறிவித்திருக்கின்றது. அந்த 1100 கோடிகளும் இலகுவில் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பை நாட்டின் ஜனாதிபதி ஏற்படுத்திவிட்டார் என்றே கூறவேண்டும். மக்கள் வரிப்பணத்தில் இருந்தே இந்த உள்ளூராட்சி மன்றங்கள் கூடுதலாக இயங்குகின்றன வரி மற்றும் குத்தகை பணங்களாக அறவிடப்படுகின்றன. அந்த அறவீடுகள் ஒழுங்கான முறையில் அறவிடப்படுவதில்லை. மாகாண சபைகளும் உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பில் கட்டுப்படுத்தும் அதிகாரங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

எனினும் மாநகர சபை, நகர சபை மற்றும் பிரதேச சபைகளால் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களை நீக்கக்கூடிய சட்டங்களை நீக்க முடியாது. அதிகாரங்களை அதிகரிக்கும் சட்டங்கள் விதிக்கப்படலாம். இவ் வேளையில் மாகாண ஆளுநர்களின் அதிகாரங்களை மாகாண அமைச்சின் மூலம் அமுலாக்கப்படும். உள்ளூராட்சிமன்ற ஊழியர்கள் மாகாண அரச சேவைக்கு சொந்தமானவர்கள். அது தொடர்பான அதிகாரங்கள் ஆளுநராலேயே மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவுக்கு கையளிக்கப்படுகின்றது. உள்ளூராட்சி மன்றங்களில் இடம்பெறும் ஊழல் மற்றும் முறைகேடுகள் தொடர்பாக விசாரிக்கும் அதிகாரம் பாராளுமன்றத்திற்கு இருக்கின்றது.

**நகரசபைக் குழுக்கள் :**

ஆலோசணைக் குழுக்களை நியமிக்கலாம். அரை வாசியினர் உறுப்பினர்களையும் அரைப்பகுதி பிரஜைகளையும் கொண்டதாக அமையும். பிற நகர சபைகள் மற்றும் மாநகர சபைகளுடன் கூட்டுக் குழுக்களையும் அமைத்துக் கொள்ளலாம். இவ்விதமாகப் பிரஜைகள் நகர சபைகளில் பங்குபற்ற முடியும்.

**பிரதேச சபைக் குழுக்கள் :**

நான்கு விடயங்கள் தொடர்பில் ஓர் ஆலோசணைக் குழு வீதம் நிறுவப்படும்.

1. நிதி மற்றும் கொள்கை வகுத்தல்
2. வீடமைப்பு மற்றும் சனசமூக அபிவிருத்தி
3. கைத்தொழில் சேவைகள்
4. சுற்றாடல் மற்றும் வசதிகள்

ஒரு பகுதி உறுப்பினர்களையும் மறுபகுதி பிரதேசத்தின் வதிவாளர்களையும் கொண்டதாக அமையும். இவ்வாலோசணைக் குழுக்களினால் அதிகாரங்கள், பணிகள் மற்றும் பொறுப்புகள் பற்றிய ஆலோசனைகள் வழங்கப்படும்.

**உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்களும் பணிகளும் யாவை?**

மூன்று வகையான உள்ளூராட்சி மன்றங்களுக்குமான காணி மற்றும் அதன் நிர்வாகம்

மாநகர சபை 5, 36, 37
நகர சபை 3, 34
பிரதேச சபை 16, 17, 18 என்பவை ஏற்புடையன.

(அ) சபைக்கு ஒப்படைக்கப்படும் ஆதனங்கள்

01. தரிசு நிலங்களும் திறந்த வெளிகளும்
02. கருங்கல், கபொக்கல், கிரவல் கிடங்குகள்
03. பொது தடாகங்களும் ஓடைகளும்
04. பொதுவான குளங்களும் தடாகங்களும் கால்வாய்களும்
05. கட்டிடமுள்ள அல்லது கட்டிடமற்ற அரசாங்கக் காணிகள்

(ஆ) சுவீகரிப்பின் மூலமாக ஒப்படைக்கப்படும் ஆதனங்கள்

06. பொதுப் பூங்கா, தோட்டங்கள் மற்றும் திறந்த வெளி நிலங்கள்
07. பொது வீதிகள், பாதைகள், கால்வாய், பாலம் அவற்றுடன் தொடர்புடைய காணிகளும் நிர்மானிப்புகளும்
08. பொது வர்த்தக நிலையங்கள், கைத்தொழில் நிர்மானிப்புகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய ஆதனங்கள்
09. பிற சகல விதமான பொதுக் கட்டிடங்களும் அவை அமைந்துள்ள நிலங்களும்
10. விளக்குகள், விளக்குத் தூண்கள், இரும்பு உதவிச் சாதனங்கள் முதலியன

மேலே சொல்லப்பட்ட ஆதனங்களை சட்டத்தில் இடமளிக்கப்பட்டுள்ள கருமங்களுக்காக நிர்வகிக்கவும் அவற்றில் இருந்து கிடைக்கின்ற வருமானத்தைச் சட்டத்தில் இடமளித்துள்ள பணிகளுக்காகப் பிரயோகிக்கவும் முடியும். அரசாங்க ஆதனங்கள் அரசாங்கத்திற்கே சொந்தமானவையாகும். ஒப்படைக்கும் போது நிலவிய நிபந்தனைகளை மீற முடியாது.

**ஏனைய அதிகாரங்கள் யாவை?**

தனது நிதியங்களைக் கொண்டு கீழ்க்காணும் பணிகளை மேற்கொள்ளலாம்.

01. தாய், சேய் நலன்புரிப் பணிகள்
02. விதவைகளைப் பயிற்றுவித்தல்
03. வீடமைப்புத் திட்டங்கள்
04. புண்ணிய நடவடிக்கைகள்
05. திடீர் இயற்கை அனர்த்தச் செயற்பாடுகள்
06. பஞ்சம், பெருவாரியாகப் பரவும் நோய்கள் போன்ற அனர்த்தங்கள். (மா.ந.ச 188அ, ந.ச. 35அ, பி.ச 19ஐ பிரிவுகள் ஏற்புடையன)
07. அதிகாரப் பிரதேசத்தின் கல்வி வசதிகள், (கட்டிடங்கள், தளபாடங்கள், விளையாட்டு மைதானங்கள், விடுதிகள், ஆசிரியர் இல்லங்கள், விளையாட்டு உபகரணங்கள், நூலக வசதிகளுக்கான திட்டங்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் சமர்ப்பித்தல்)
08. அதிகாரப் பிரதேசத்தில் பாடசாலைகளை அங்குரார்ப்பணம் செய்தல், மூடிவிடுதல், ஒருங்கிணைத்தல், பெயரிடுதல், தர முயர்த்தலுக்கான விதப்புரைகளைச் சமர்பித்தல். (மா.ந.ச. 40(1), ந.ச. 36 எ.ஏ, பி.ச. 18 ஐ அ,ஆ)
09. சமய விழாக்களை ஏற்பாடு செய்தல், அறநெறிப் பாடசாலைகள் மற்றும் அறங்காவலர் சபைகளை நடாத்துதல், கலாசார நிலையங்களை நிறுவுதல், இலக்கிய நூல்களை பிரசுரித்தல், கலைஞர்களுக்கான பரிசளிப்பு போன்றவை. (மா.ந.ச. 188(1) ஐ.ஓ, ந.ச. 159(1) இ, பி.ச.19(1) xviii)
10. வறியோருக்கான நிவாரணங்கள் வழங்குதல்

**மூவகையான உள்ளூராட்சி நிறுவனங்களுக்குமான பிற பொதுவான அதிகாரங்களும் பணிகளும் யாவை?**

01. சேவை அல்லது பண்டங்களின் வழங்கலுக்கான ஒப்பந்தங்களைச் செய்தல்
02. பொதுப் பணிகளுக்கான காணிகளைச் சுவீகரித்தல்
03. வழக்குத் தொடுத்தலும் தொடுக்கப்படுதலும்
04. பொதுக் கருமங்களுக்காக காணிகளை அளவீடு செய்ய அதிகாரமளித்தல்
05. பொதுக் கருமங்களுக்கான பொறுப்பாளராகச் செயற்படுதல்.

**மாநகர சபைகளுக்கும் நகர சபைகளுக்கும் மாத்திரம் தொடர்புடைய பணிகள் உள்ளனவா?**

நிறுவனத்திற்குச் சொந்தமான காணியில் நினைவுத் தூபியினை அமைக்கலாம். இதற்கு உள்ளூராட்சி அமைச்சரின் முன்னனுமதி தேவை. (மா.ந.ச. 37, ந.ச. 34 பிரிவுகள்) பூங்காக்கள் போன்றவற்றுக்கான பெயர் குறிக்கவும் அதே வழிமுறை கடைப்பிடிக்கப்படும்.

**மாநகர சபைகளுக்கு மாத்திரம் ஏற்புடைய அதிகாரங்கள் உள்ளனவா?**

இலங்கைக்கு வெளியில் சேவையில் ஈடுபடுத்தவோ பண்டங்களை வழங்கவோ ஒப்பந்தங்களைச் செய்து கொள்ளலாம். (மா.ந.ச39(1) பிரிவு)

அரசாங்க அல்லது நகர சபைக் காணியில் அனுமதியின்றிக் கட்டிடமொன்றை அமைத்தால் 14 நாட்கள் கால அவகாசம் வழங்கி நகர சபை அதனைத் தகர்த்து அகற்றலாம். (மா.ந.ச 42 வது பிரிவு)

**மூவகை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் ஒப்படைக்கப்பட்டுள்ள விசேட பொறுப்புக்களும் பணிகளும் யாவை?**

1. பாதைகள் / தெருக்கள்
2. பொதுச் சுகாதார சேவைகள்
3. பொதுப் பயன்பாட்டுச் சேவைகள் - எனும் மூன்று துறைகளாகும்.

மாநகர சபை சட்டத்தின் 47 முதல் 95 வரையான பிரிவுகளிலும் நகரசபைக் கட்டளைச் சட்டத்தின் 44 - 102 பிரிவுகளிலும் பிரதேச சபைச் சட்டத்தின் 21 - 77 வரையான பிரிவுகளிலும் அப்பணிகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

தொடர்ந்தும் நாம் இவ் அதிகாரங்கள் தொடர்பாக மக்களுக்கு அறிவிக்க வேண்டியதன் தேவை காரணமாகவும் தெளிவுபடுத்தலை கொடுக்கும் வகையிலும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான விதிமுறைகள் என்ன என்பது பற்றி எமது ஊடகங்களில் தொடர்ந்து வெளியாகும்.

**தொடரும்...**

**மறவன்**

# தமிழ் தேசிய கூட்டமைப்பை சிதைக்கவந்த சகுனி எம்.ஏ.சுமந்திரன்

## பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன் ஜனா எம்.பியுடனான (ரெலோ) சிறப்பு நேர்காணல்

கடந்தவார தொடர்ச்சி...

**கேள்வி : தமிழ் தேசிய கூட்டமைப்பின் இணைவிற்காக ஏன் சுமந்திரன் முடிவெடுக்கின்றார். தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் கேட்டபொழுது அவர் ரெலோவினுடைய கட்சியைப் பற்றி விமர்சிக்கின்றார் தன்னிச்சையாக நீங்கள் செயற்படுவதாக குறிப்பிடுகின்றார். வெளிநாடுகளுக்கு சென்று அல்லது தூதரங்களுக்கு சென்று ஒரு கூட்டமைப்பினுடைய கட்டமைப்பை மீறி ரெலோ செயற்படுகின்றது என்ற குற்றச்சாட்டை சுமந்திரன் அவர்கள் முன்வைத்திருந்தார் ஏன் அந்த புலமைப்பாடு?**

பதில் :

வட மாகாண முதலமைச்சர் வேட்பாளராக ஏனைய அங்கத்துவ கட்சிகள் அனைத்துமே ஒற்றைக்காலில் நின்றது மாவை சேனாதிராஜா அவர்களை முதலமைச்சராக கொண்டுவரவேண்டும் என்பதில். ஆனால் தன்னுடைய குரு தனது சட்டக் கல்லூரியிலே கற்பித்தவர் என்ற ஒரே காரணத்திற்காக சம்பந்தன் ஐயாவினுடைய ஆதரவுடன் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களை கொண்டுவருகின்றார்கள். 2016 இல் என்ன நடக்கின்றது. அவருக்கு தெரியாமலேயே நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டுவருகின்றார்கள் மாகாணசபையிலே. ஆனால் அவர் மனமுடைந்து செல்கின்றார். இதையெல்லாம் பார்க்கும் பொழுது அதற்கு மேலாக தற்பொழுது எஞ்சியிருப்பது மூன்று கட்சிகளே. தமிழரசுக் கட்சி, தமிழீழ விடுதலை இயக்கம், தமிழீழ மக்கள் விடுதலை கழகம் (புளொட்) இவர்கள் மூவரும் தனித் தனியே இந்த தேர்தலிலே நாங்கள் இறங்குவோமாக இருந்தால் அவரவர் கட்சியை பிரபல்யப்படுத்தி பிரச்சாரம் செய்து தேர்தலை சந்திப்பாரே தவிர தமிழ் தேசிய கூட்டமைப்பு என்று யாருமே கலந்துகொள்ளப்போவதில்லை. இதிலிருந்து நான் என்ன கூறவருகின்றேன் என்றால் இந்த தமிழ் தேசிய கூட்டமைப்பு இருக்கக்கூடாது என்றவொரு நிலைப்பாட்டில் அவர்கள் இருக்கின்றார்கள். எங்களுக்கு மேலும் ஒரு சந்தேகம் இருக்கின்றது கடந்த காலங்களில் கடந்த வருடங்களாக ஈ.பி.ஆர்.எல்.எப் தமிழ் தேசிய கூட்டமைப்புக்குள்ளே இருந்தபொழுதும் பல தடவைகள் நாங்கள் வலியுறுத்தியிருந்தோம் த.தே கூட்டமைப்புக்கு ஒரு கட்டமைப்பு வேண்டும், தேர்தல் திணைக்களத்திலே பதிவு செய்யவேண்டும் என்று.

ஆனால் தமிழரசுக் கட்சி இழுத்தடித்து இழுத்தடித்து கொண்டு வந்தது காரணம் எங்களுக்கு இப்பொழுது விளங்குகின்றது. த.தே கூட்டமைப்பை பதிவு செய்திருந்தால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது. இதற்காகவே தாங்கள் தங்களது சின்னத்தை பிரபல்யப்படுத்திவிட்டு இன்று பாருங்கள் வீட்டு சின்னம் மக்கள் மத்தியிலே பிரபல்யமாகியிருக்கின்றது. வீட்டு சின்னத்தை பிரபல்யப்படுத்தியதன் பெரும்பாலான பங்கு எங்களுக்கும் இருக்கின்றது. நான் 2012, 2015, 2020 ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தல்கள் என மூன்று தேர்தல்களை சந்தித்திருக்கின்றேன். ஒரு மாகாணசபைத் தேர்தலும் இரண்டு பாராளுமன்றத் தேர்தலுமாக இதில் இரண்டு தேர்தல்களில் வெற்றி பெற்றிருக்கின்றேன்.

இந்த வீட்டு சின்னம் மக்கள் மத்தியில் மூலை முடுக்கு எல்லாவற்றிற்கும் சென்றதன் பங்கு எனக்கும் இருக்கின்றது. இன்று எங்களை எல்லாம் பயன்படுத்தி வீட்டு சின்னத்தை பிரபல்யப்படுத்திவிட்டு தாங்கள் 2004 ஆம் ஆண்டு சங்கரி ஐயா கூட்டமைப்பிலிருந்து எப்படி தன்னுடைய சின்னத்தையும் கட்சியையும் தூக்கிச் சென்றாரோ அதே பாணியிலே இன்று சம்பந்தன் ஐயா, சுமந்திரன் வீட்டு சின்னத்தில் தமிழரசுக் கட்சியை தூக்கிச் செல்லுகின்றார். இதிலிருந்து எதை உணர்ந்துகொள்ள வேண்டும் என்றால் சங்கரி ஐயாவிற்கும் உங்களுக்கும் எந்தவித வித்தியாசமும் இல்லை.

**கேள்வி : ஆனந்த சங்கரி அவர்கள் தமிழீழ விடுதலைப்புலிகளை ஏகபிரதிநிதிகளாக ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொல்லிவிட்டு தானே அவர் சென்றார்?**

பதில் : தமிழீழ விடுதலைப்புலிகளை 2002 ஆம் ஆண்டு தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஊடாக பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்ட 15 உறுப்பினர்களை ஏகபிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டார்கள். சங்கரி ஐயா மட்டும்தான் ஏற்றுக்கொள்ளவில்லை. அந்த நேரத்திலே சம்பந்தன் ஐயா கூட ஏகபிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டார். ஆனால் 2010 க்கு பின்னர் என்ன நடந்தது. சம்பந்தன் ஐயா தமிழ் தேசிய கூட்டமைப்பின் உருவாக்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லையென்று கூறுகின்றார். இவற்றையெல்லாம் பார்க்கும்பொழுது நாங்களும் இவர்களுடன் ஒற்றுமையை நாங்கள் குழைக்கக்கூடாது இணைந்து போவோம் இணைந்து போவோம் மேலும் பலப்படுத்துவோம் என்று நாங்களும் அவர்களுடன் இணைந்திருந்தோம். எங்களிலும் பிழை இருக்கின்றது. நாங்கள் இதற்கான நடவடிக்கையை ஏற்கனவே எடுத்திருக்க வேண்டும். ஆனால் தமிழர்களுக்கான ஒற்றுமையை நாங்கள் வலியுறுத்தியிருந்தோம். இன்று தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள் இந்த ஏமாற்று அரசியலுக்குள்ளே. ஒருமுறை சொல்லுகின்றார்கள் தமிழீழ விடுதலைப்புலிகளை ஏகபிரதிநிதிகள் என்று 2009 க்கு பின் தமிழீழ விடுதலைப்புலிகள் மௌனிக்கப்பட்டதன் பின்பு தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இந்த தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கும் சம்பந்தம் இல்லையென்று கூறுகின்றார்கள்.

அப்பொழுது 2004 ஆம் ஆண்டு மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினராக இருந்த அரியநேத்திரன் அவர்கள் தன்னுடைய முகநூலிலே பதிவிடுகின்றார் தலைவர் காட்டிய சின்னமாம் வீட்டுச் சின்னம், தமிழ் தேசிய கூட்டமைப்பின் சின்னம் இன்றும் வீட்டுச்சின்னம். இதெல்லாம் மக்களை மடையனாக்கும் செயலல்லவா தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருந்து இலங்கைத் தமிழரசுக் கட்சி இன்று வெளியேறி தனியாக போட்டியிடப்போகிறேன் என்று சொன்னதன் பின்பும் தமிழ் தேசிய கூட்டமைப்பு இன்றி அவர்கள் சிலவேளை பயன்படுத்துவது மக்களை ஏமாற்றுவதற்கான அரசியலை செய்து கொண்டிருக்கின்றார்கள். ரெலோவும் புளொட்டும் வெளியேறவில்லை. என்னவென்றால் ஒன்றை மட்டும் இந்த மக்கள் உணர்ந்துகொள்ள வேண்டும் த.தே கூட்டமைப்பில் இருந்து 2010 ஆம் ஆண்டு இலங்கை தமிழ் காங்கிரஸ் வெளியேறியதன் பின்பு தமிழ் தேசிய கூட்டமைப்பாகத்தான் நாங்கள் இயங்கினோம். 2015 சுரேஸ் பிரேமச்சந்திரன் வெளியேறியதன் பின்பு அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், ஈ.பி.ஆர்.எல்.எப், ரெலோ, தமிழர் விடுதலை கூட்டணி இந்த 4 கட்சிகளும் தான் தமிழீழ விடுதலை புலிகளுடன் இணைந்து தமிழ் தேசிய கூட்டமைப்பை உருவாக்கிய அரசியல் கட்சிகள். 2010 ஆம் ஆண்டு அதிலொரு அரசியல் கட்சி வெளியேறிய போது தமிழ் தேசிய கூட்டமைப்பு தமிழ் தேசிய கூட்டமைப்பாகத்தான் பயணித்தது.

அதே போன்று ஆரம்ப கட்சியான ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சி 2015 இல் ஆரம்பத்திலே வெளியேறியபோது த.தே.கூட்டமைப்பு தமிழ் தேசிய கூட்டமைப்பாகத்தான் பயணித்தது. அதே போன்று தற்பொழுது தமிழரசுக் கட்சி வெளியேறியிருக்கின்றது. தமிழரசுக் கட்சி வெளியேறினால் த.தே.கூட்டமைப்பு தமிழரசுக் கட்சியாகத்தான் பயணிக்கின்றது. 2010 இல் கஜேந்திரகுமார் வெளியேறிவிட்டு நான் த.தே கூட்டமைப்பு என்று கூறவில்லை. 2015 இல் சுரேஸ் பிரேமச்சந்திரன் வெளியேறிவிட்டு த.தே கூட்டமைப்பு என்று கூறவில்லை. நீங்கள் எப்படி இப்போது வெளியேறிவிட்டு த.தே.கூட்டமைப்பு என்று கூறுவீர்கள்? நீங்கள் ஒரு ஆரம்ப கட்சியும் இல்லை. த.தே கூட்டமைப்பிற்கு இடையில் வந்தவர்கள். இடையில் வந்து இடையில் போகின்றீர்கள். த.தே கூட்டமைப்பு என்று ஒரு பஸ் வண்டி ஒரு இலக்கை நோக்கி போய்க்கொண்டிருக்கின்றது அந்த பேரூந்திலே பயணிப்பவர்கள் ஆரம்பத்தில் இருந்து பயணிக்கின்றார்கள் சிலபேர் இடையில் இறங்குகின்றார்கள் சிலபேர் இடையில் இருந்து ஏறுகின்றார்கள் தமிழீழ மக்கள் கழகம் இடையில் இருந்து ஏறுகின்றது. அதே போன்று இடையில் இருந்து ஏறியவர்கள் தான் தமிழரசுக் கட்சி தற்பொழுது இடையில் இறங்குகின்றார்கள். ஆனால் த.தே.கூட்டமைப்பு என்ற பேரூந்து அந்த இலக்கை நோக்கி நகர்ந்து கொண்டு தான் இருக்கின்றது. அவர்களுக்கும் அந்த பேரூந்துக்கும் தற்பொழுது சம்பந்தமில்லை.



**கேள்வி : த.தே.கூட்டமைப்பு இணைக்கப்படுகின்ற காலப்பகுதியில் தராக்கி சிவராமுடன் நின்று பணியாற்றியவர்கள் என்ற வகையிலே நான் அப்பொழுது புகைப்பட பிடிப்பாளராக நின்றேன். அப்பொழுது கட்சிகள் எல்லாம் ஒன்றிணைந்து தமிழ் தேசிய கூட்டமைப்பு விடுதலைப்புலிகளை ஏகபிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டுதான் கையெழுத்து வைத்தார்கள். அது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய விடயம் தான். தற்பொழுது அவர் மாறிக்கூறுகின்றார் என்பதற்காக அந்த வரலாறுகள் அழிக்கப்படப் போவதில்லை. ஆனால் நீங்கள் தற்பொழுது DTNA என்ற ஒன்றை உருவாக்கி அதனூடாக நீங்கள் உங்களது பயணத்தை ஆரம்பித்திருக்கின்றீர்கள். இதிலே DTNA என்பது RR என்பவர் புளொட் சம்பந்தப்பட்டவர். அவர் தான் 2004 ஆம் ஆண்டு அந்த கட்சியை உருவாக்கியிருக்கின்றார். இந்த RR என்பவர் த.தே.கூட்டமைப்பை உருவாக்கியதில் முக்கிய வகிபாகம் வகித்த சிவராமின் கொலையின் சூத்திரதாரியாக அவர் சிங்கப்பூர் சென்று தற்பொழுது வந்திருக்கின்றார். இந்த கட்சியில் தானே நீங்கள் DTNA ஐ தற்பொழுது உருவாக்கியிருக்கின்றீர்கள். இது மக்கள் மத்தியில் மிகவும் ஆபத்தான விடயத்தை தானே கொண்டு செல்லப்போகிறது?**

பதில் : ஒன்றை உணர்ந்துகொள்ள வேண்டும் கடந்த காலங்களிலே எங்களுக்கு இருந்த வரலாற்று அனுபவம் கூட்டமைப்பு உருவாக்கும் பொழுது இருந்த தமிழர் விடுதலை கூட்டணி தங்களது சின்னத்தை தூக்கிச் சென்று விட்டார்கள். தற்பொழுது இலங்கை தமிழரசுக் கட்சி தங்களது வீட்டு சின்னத்தை தூக்கிச் செல்கின்றார்கள். எஞ்சியிருக்கும் கட்சிகளும் பதிவு செய்யப்பட்ட கட்சிகள் இதிலே ஆரம்பத்தில் இருந்து இன்று வரை நாங்கள் நிதானமாக உறுதியாக பயணித்துக்கொண்டிருக்கும் ஒரேயொரு கட்சி தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ). ரெலோ 1988 ஆம் ஆண்டு அரசியல் கட்சியாக பதிவு செய்யப்பட்டது எங்களது சின்னம் வெளிச்ச வீடு 1994 ஆம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்டத்திலே அனைத்து உள்ளூராட்சி சபைகளையும் வெளிச்சவீட்டு சின்னத்திலே நாங்கள் பிடித்திருந்தோம் மட்டக்களப்பு மாநகர சபை உட்பட. அதைவிட 2000 ஆம் ஆண்டு வவுனியாவிலே நாங்கள் வெளிச்சவீட்டு சின்னத்திலே போட்டியிட்டு 3 பாராளுமன்ற உறுப்பினர்களை கூட நாங்கள் பெற்றிருந்தோம். ஆனால் நாங்கள் கூட தற்பொழுது இலங்கை தமிழரசுக் கட்சி வெளியேறியவுடன் தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு ஒரு சின்னம் தேவை தேர்தலிலே நிற்பதற்கு ஒரு அரசியல் கட்சி தேவை நாங்கள் கூட எங்களது வெளிச்சவீட்டு சின்னத்தை பாவிக்கக்கூடாது என்று தான் சொன்னோம். ஏனென்றால் மற்றவர்கள் எங்களை சந்தேகப்படக்கூடாது. ஆனந்த சங்கரி ஐயா மாதிரியோ சம்பந்தன் ஐயா மாதிரியோ நாளைக்கு செல்வம் அடைக்கலநாதனும் வெளிச்சவீட்டு சின்னத்தை தூக்கிச் சென்றுவிடுவார் என்று சந்தேகம் கொள்ளக்கூடாது. அதேபோன்று புளொட்டிடம் இருக்கின்றது அவர்களுடைய நங்கூர சின்னம், அதேபோன்று ஈ.பி.ஆர்.எல்.எப் இடம் இருக்கின்றது மீன் சின்னம் இப்படி அந்த சின்னங்கள் எல்லாம் இருக்கும் பொழுது நாங்கள் ஏன் DTNA குத்துவிளக்கை எடுத்தோம் என்றால் இயங்கு நிலையில் இல்லாத கட்சி ஒன்றை பொதுவாக எடுத்து எங்களுக்குள்ளே புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றை கையொப்பமிட்டு எதிர்காலத்திலே இது பொதுவான ஒரு சின்னம் இதற்கு ஒரு கட்டமைப்பு வேண்டும் இதனுடைய பெயரை மாற்றி TNA தமிழ் தேசிய கூட்டமைப்பு என்று ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பு என்ற பெயரை மாற்றி தேர்தல் காலத்திலே அந்த வேலைகளை செய்யமுடியாது தேர்தல் முடிந்தவுடன் நாங்கள் அந்த வேலையை செய்யவிருக்கின்றோம். அதற்கான ஒரு புதிய கட்டமைப்பு நிர்வாக குழுவை உருவாக்கி அந்த குழு எடுப்பது தான் முடிவு என்ற நிலையிலே நாங்கள் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை கையொப்பமிட்டிருக்கின்றோம்.

ஏனென்றால் தமிழ் தேசியம் இன்று நான் இருக்கலாம் அல்லது என்னுடைய கட்சி இருக்கலாம் நாளை இல்லாமல் போகலாம். அல்லது வேறு கட்சி இருக்கலாம் கட்சி தலைவர்கள் இருக்கலாம் இல்லாமல் போகலாம் ஆனால் நாங்கள் பயணிக்கும் பாதை எங்களது இலக்கை அடையும் வரை நாங்கள் செல்ல வேண்டும் நாங்கள் தமிழீழத்திற்காக போராடியவர்கள் எங்களுக்கு தமிழீழம் தற்போதைய நிலையிலே கிடைக்கும் சாத்தியம் இல்லை. எங்களது முழு நோக்கமும் வடக்கு கிழக்கிலே தமிழ் மக்கள் உள்ளக சுயாட்சியுடன் சுதந்திரமாக வாழ வேண்டும் என்ற இலக்குடன் நாங்கள் சென்றுகொண்டிருக்கின்றோம். அதற்கு நாங்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும்.

**தொடரும்...**

**நேர்காணல் : மறவன்**

# பிராந்திய செய்திகள்

## பாரிய கஞ்சாத்தோட்டம் கைப்பற்றி அழிப்பு



அம்பாறை பக்மிட்டியாவ வனப்பகுதியில் ஒரு ஏக்கரில் கஞ்சா பயிரிடப்பட்டு வந்த நிலையில். வெள்ளிக்கிழமை(3) மாலை கைப்பற்றப்பட்டுள்ளது. அக்கரைப்பற்று இராணுவப் புலனாய்வுப்பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் மற்றும் அருகம்பை விஷேட அதிரடிப்படையினர் இணைந்து நடாத்திய தேடுதலில் பக்மிட்டியாவ வனப்பகுதியில் பயிரிடப்பட்ட கஞ்சா கைப்பற்றப்பட்டது.

இதன் போது சுமார் 7.500 கஞ்சா செடிகள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன். அவை ஒவ்வொன்றும் சுமார் 3-6 அடி என உயரம் வரை வளர்ந்திருந்தது. கைப்பற்றப்பட்ட கஞ்சா செடிகள் அனைத்தும் பாதுகாப்புத் தரப்பினரால் அழிக்கப்பட்டதுடன். மேலதிக விசாரணைகளை தமன பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

## யாழ்.பல்கலைக்கழகத்தில் கறுப்புக் கொடி



நாட்டின் 75ஆவது சுதந்திர தினத்தை கரி நாளாகப் பிரகடனப்படுத்தி யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் அன்று(4) கறுப்புக் கொடி ஏற்றப்பட்டுள்ளது.

அத்துடன் சுதந்திர நாளை தமிழர் பிரதேசங்களில் கரி நாளாக கடைப்பிடிக்குமாறு அரசியல் கட்சிகள். பொது அமைப்புகள் மற்றும் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஆகியன கோரிக்கை விடுத்துள்ளன.

அத்துடன் யாழ். பல்கலைக்கழக கொடிக் கம்பத்தில் கறுப்புக் கொடி ஏற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இந்திய முட்டைகளை இறக்குமதி செய்ய நடவடிக்கைகள்

முட்டை இறக்குமதி தொடர்பில் இந்திய விநியோகஸ்தர்களால் வழங்கப்படவுள்ள அறிக்கைகள் அன்று (04) பெற்றுக்கொள்ளப்படவுள்ளதாக அரச வர்த்தக பல்வேறு நியதிசார் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஆசிரி வலிசுந்தர தெரிவித்துள்ளார். உரிய அறிக்கைகள் கிடைத்தவுடன் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் துறைக்கு அறிக்கைகள் அனுப்பி வைக்கப்படும் என்றார்.

கேள்வி மனு நடைமுறையின் கீழ் தெரிவு செய்யப்பட்ட இரண்டு இந்திய விநியோகஸ்தர்களுக்கும் (4)அன்றைய தினத்துக்குள் உரிய அறிக்கைகளை வழங்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாக ஆசிரி வலிசுந்தர குறிப்பிட்டார். அதன்படி, கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் துறை ஒப்புதல் அளித்தவுடன், முட்டை இறக்குமதி செய்யும் பணி உடனடியாகத் தொடங்கப்படவுள்ளது.

## 37,500 முன்பள்ளிச் சிறார்களுக்கு மாதம் ஆயிரம் ரூபா நிவாரணம்

நாட்டில் 37,500 சிறுவர்கள் முன்பள்ளிக் கட்டணத்தைச் செலுத்த முடியாத நிலையில் இருப்பதாகத் தெரியவந்துள்ளது. முன்பள்ளிப் பிள்ளைகளுக்கு மாதாந்தம் ஆயிரம் ரூபா முன்பள்ளிக் கட்டணக் கொடுப்பனவாக வழங்கப்படும் என ஆரம்பக் குழந்தைப் பருவ அபிவிருத்தித் திட்டத்தின் பணிப்பாளர் சந்திரலால் பிரேமகுமார தெரிவித்தார்.

இந்நாட்டில் முன்பள்ளிக் கட்டணத்தை செலுத்த முடியாதவர்கள் அதிகளவில் இருப்பதாகத் தெரியவந்துள்ளது. அந்தக் குழுவில், முன்பள்ளி பெற்றோர் குழுக்களின் மூலம் அடையாளம் காணப்பட்ட கடினமான பொருளாதார நிலைமைகளைக் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்த 37.500 குழந்தைகளுக்கு உலக வங்கி உதவியின் அடிப்படையில் மாதம் ஆயிரம் ரூபா வீதம் நிவாரணம் வழங்கப்படும். ஒரு முன்பள்ளியிலிருந்து அதிகபட்சமாக ஐந்து பிள்ளைகள் தெரிவு செய்யப்படுவார்கள் என ஆரம்பக் குழந்தைப் பருவ அபிவிருத்தித் திட்டத்தின் பணிப்பாளர் சந்திரலால் பிரேமகுமார மேலும் தெரிவித்தார்.

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவருக்கு 5 நீல இரத்தினக்கற்கள்

கதிர்காமம் - கொச்சிபத்தான பகுதியில், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவருக்கு, 5 நீல இரத்தினக்கற்கள் கிடைத்துள்ளன. கதிர்காமம் யாத்திரைக்கு செல்லுபவர்களுக்காக, பூசைத் தட்டுகளை விற்பனை செய்யும் மூன்று வர்த்தகர்களுக்கே, 5 நீல இரத்தினக்கற்கள் கிடைத்துள்ளன. கதிர்காமம்-கொச்சிபத்தான பகுதியில் அண்மைக் காலமாக, இரத்தினக்கல் தோண்டும் பணிகள் இடம்பெறுகின்றன.

இந்தநிலையில், மூன்று பேருக்கு 5 இரத்தினக்கற்கள் கிடைத்ததை அடுத்து, அந்த இடத்திற்கு செல்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த மூவருக்கும் கிடைத்த 5 இரத்தினக்கற்களும், எலஹர பிரதேசத்தில் உள்ள வர்த்தகர் ஒருவருக்கு, சுமார் ஒரு கோடி ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## நெல் மற்றும் சோளம் செய்கைக்காக பத்து பில்லியன் ரூபா

எதிர்வரும்சிறுபோகத்தின் போது.நெல் மற்றும்சோளம்செய்கைக்காக யூரியா உரத்தை கொள்வனவு செய்வதற்கு பத்து பில்லியன் ரூபாவை ஒதுக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது தொடர்பாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர. அமைச்சின் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

தற்போது. உர மற்றும் வர்த்தக உர நிறுவனங்களுக்கு சொந்தமான களஞ்சியசாலைகளில் 30 ஆயிரம் மெற்றிக் தொன் யூரியா உரம் காணப்படுகிறது. அதனைத் தவிர. மேலும் 25 ஆயிரம்மெற்றிக் தொன் யூரியா உரம் கொள்வனவு செய்யப்படவுள்ளது. இதற்கென பத்து பில்லியன் ரூபா ஒதுக்கப்படுவதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

ஒருலட்சம் மெற்றிக் தொன் யூரியா உரத்தை கையிருப்பில் வைத்துக் கொண்டு. சிறுபோகத்தில்நெல். சோளம் மற்றும் ஏனைய பயிர்ச் செய்கைகளுக்கான யூரியா உரம் பகிர்ந்தளிப்பது நோக்கமாகும். சிறுபோக நெற் செய்கைக்காக சேதனப் பசளை. பண்டி. யூரியா உர வகைகளை. தட்டுப்பாடின்றி விவசாயிகளுக்கு வழங்குவது விவசாய அமைச்சின் எதிர்பார்ப்பாகும்.

ஆரம்ப உரமான சேதனப் பசளை. சிறுபோகத்தின் ஆரம்பத்திலேயே விவசாயிகளின் தேவைக்கேற்ப. முழுமையாக இலவசமாக வழங்கப்படவுள்ளது. 36 ஆயிரம் மெற்றிக் தொன் உரத்தை ஏற்றிய கப்பல் இந்த மாத நடுப்பகுதியில் துறைமுகத்தைவந்தடையவுள்ளது.

மேலதிகமாக. 35 ஆயிரம் மெற்றிக் தொன் பண்டி உரம். உர நிறுவனத்திடம் காணப்படுகிறது. அதன்படி. சிறுபோகத்தில் நெல் வயல்களுக்கு தேவையானஉரத்தை தட்டுப்பாடின்றி வழங்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரமேலும் தெரிவித்துள்ளார்.

## 622 கைதிகளுக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு

75வது சுதந்திர தினத்தை முன்னிட்டு. நாடளாவிய ரீதியில் சிறையில் உள்ள 622 கைதிகள் அன்று (04) ஜனாதிபதி பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட உள்ளனர்.

போதைப்பொருள் குற்றச்சாட்டில் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டு புனர்வாழ்வளிக்கப்படும் கைதிகளும் இவர்களுள் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தவிர சிறைச்சாலையில் நல்லடக்கத்துடன் செயற்பட்ட 31 கைதிகளும் ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் பின்னர் விடுதலை செய்யப்பட உள்ளதாக சிறைச்சாலை திணைக்களம் தெரிவித்துள்ளது.




## டிஜிட்டல் சாரதி அனுமதிப்பத்திரம்

ஒழுக்கமான சாரதிகளை உருவாக்கும் நோக்கில், டிஜிட்டல் சாரதி அனுமதிப்பத்திரம் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிஷாந்த அனுருத்த வீரசிங்க தெரிவித்துள்ளார். இந்த டிஜிட்டல் சாரதி அனுமதிப் பத்திரத்தை. தமது கையடக்கத் தொலைபேசியின் ஊடாக பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும். இந்த புதிய சாரதி அனுமதிப் பத்திரம் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர். இந்தப் பத்திரம் அனைத்து தரவுகளிலும் சேர்க்கப்படும்.



# சினி துளிகள்





## இரண்டு பெரிய படங்களை கைப்பற்றிய நயன்தாரா!



நடிகை நயன்தாரா திருமணத்திற்கு பிறகு சிறிய இடைவெளி எடுத்துக்கொண்டு அதன் பின் ஷாருக்கானின் ஜவான் படத்தில் நடிக்க தொடங்கினார். அட்லீ இயக்கி வரும் அந்த படம் ஷூட்டிங் தொடர்ந்து விறுவிறுப்பாக நடைபெற்று வந்தது. அதே நேரத்தில் நயன்தாராவின் இறைவன் படமும் ரிலீஸ்க்கு தயாராகி வருகிறது.

ஷாருக்கான் பதான் பட ப்ரோமோஷனில் பிசியாகி இருந்த நிலையில், அந்த படம் தற்போது வசூல் வேட்டை நடத்தி வருகிறது. விரைவில் அந்த படம் 1000 கோடி மைல்கல்லை கடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதனால் ஷாருக் - நயன் நடிக்கும் ஜவான் மீதும் மிகப்பெரிய எதிர்பார்ப்பு எழுந்திருக்கிறது. நயன்தாரா இந்த படத்தை முடித்தபிறகு அடுத்து யார் இயக்கத்தில் நடிப்பார் என ரசிகர்கள் எதிர்பார்த்து இருந்த நிலையில் தற்போது அவர் புதிதாக இரண்டு ப்ராஜெக்ட்களில் கமிட் ஆகி இருப்பதாக தகவல் வெளியாகி இருக்கிறது.

மித்ரன் ஜவஹர் இயக்கத்தில் ஒரு படத்தில் நடிக்க நயன்தாரா ஒப்பந்தம் ஆகி இருக்கிறார் எனவும், அதே நேரத்தில் மோகன் ராஜா இயக்கத்தில் தனி ஒருவன் 2 படத்திலும் நடிக்க இருக்கிறார் எனவும் தகவல் பரவி வருகிறது. ஜெயம் ரவி - நயன்தாரா நடித்த தனிஒருவன் மிகப்பெரிய ஹிட் என்பதால் அதன் இரண்டாம் பாகம் மீது பெரிய எதிர்பார்ப்பு இருந்து வருகிறது.

## தமிழில் எந்த படத்திலும் நடிக்க ஒப்பந்தமாகவில்லை - ஜான்வி கபூர்

லிங்குசாமி இயக்கத்தில் கார்த்தி, தமன்னா ஆகியோர் நடித்து 2010-ல் வெளியாகி பெரிய வரவேற்பை பெற்ற பையா படத்தின் இரண்டாம் பாகம் தயாராகவுள்ளது.


பையா 2-ம் பாகத்தில் கார்த்தி நடிக்கவில்லை பதிலாக ஆர்யாவை ஒப்பந்தம் செய்துள்ளனர் என்றும் இதில் கதாநாயகியாக நடிக்க மறைந்த நடிகை ஸ்ரீதேவியின் மகள் ஜான்வி கபூரிடம் பேசி வருவதாகவும் இணையத்தில் பேசப்பட்டது. ஜான்வி கபூர் - ஆர்யா ஏற்கனவே தமிழ் படத்தில் நடிக்க ஜான்வி கபூர் விருப்பம் தெரிவித்து வந்த நிலையில் பையா 2-ம் பாகத்தில் நடிக்க சம்மதிப்பார் என்று கூறப்பட்டது.

ஆனால் இதனை அவரது தந்தையும் தயாரிப்பாளருமான போனிக் கபூர் மறுத்து சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார். அதில், "ஜான்வி கபூர் தமிழில் எந்த படத்திலும் நடிக்க ஒப்பந்தமாகவில்லை. வதந்திகளை பரப்ப வேண்டாம் என கேட்டுக்கொள்கிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

## பெப்ரவரி 8-ம் திகதி நெட்ஃபிக்ஸ் ஓடிடி தளத்தில் 'துணிவு'

இயக்குனர் எச்.வினோத் இயக்கத்தில் நடிகர் அஜித் நடிப்பில் உருவான 'துணிவு' திரைப்படம் சமீபத்தில் திரையரங்குகளில் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்று வருகிறது. இதில் மஞ்சுவாரியர், சமுத்திரக்கனி, ஜி.எம். சுந்தர், மகாநதி சங்கர், ஜான் கொக்கன் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். போனி கபூர் தயாரித்துள்ள இந்த படத்தை ரெட் ஜெயண்ட் மூவிஸ் நிறுவனம் தமிழ்நாட்டிலும் லைகா நிறுவனம் வெளிநாட்டிலும் வெளியிட்டது. வசூல் ரீதியாகவும் விமர்சன ரீதியாகவும் நல்ல வரவேற்பை பெற்று வரும் துணிவு திரைப்படத்தை ரசிகர்கள், திரையுலகினர் என பலரும் பாராட்டி வருகின்றனர்.

இந்நிலையில், 'துணிவு' திரைப்படத்தின் ஓடிடி ரிலீஸ் திகதியை படக்குழு வெளியிட்டுள்ளது. அதன்படி இப்படம் வருகிற பெப்ரவரி 8-ம் திகதி நெட்ஃபிக்ஸ் ஓடிடி தளத்தில் வெளியாகும் என்று வீடியோ வெளியிட்டு படக்குழு அறிவித்துள்ளது.



## இளம்பெண்ணுக்கு பாலியல் தொல்லை கொடுத்த சினிமா தயாரிப்பாளர் கைது

கேரள மாநிலம் எர்ணாகுளத்தை சேர்ந்தவர் மார்ட்டின் செபாஸ்டின். சினிமா தயாரிப்பாளர். மலையாள திரையுலகில் பல படங்களை தயாரித்து உள்ள மார்ட்டின் செபாஸ்டின் மீது திருச்சூரை சேர்ந்த இளம்பெண் ஒருவர் போலீசில் புகார் கொடுத்தார். அந்த புகாரில் மார்ட்டின் செபாஸ்டின் மீது பரபரப்பு குற்றச்சாட்டுக்களை கூறியிருந்தார். மார்ட்டின் செபாஸ்டின் சினிமாவில் வாய்ப்பு தருவதாக கூறி தனக்கு பாலியல் தொல்லை கொடுத்தார் எனவும் குற்றம்சாட்டியிருந்தார்.

கடந்த 2000-ம் ஆண்டு இந்த சம்பவங்கள் நடந்ததாகவும் கூறி இருந்தார். மேலும் சினிமாவில் வாய்ப்பு தருவதாக கூறி மும்பை, பெங்களூரு போன்ற நகரங்களுக்கு அழைத்து சென்று தன்னை கற்பழித்ததாகவும் புகார் கூறியிருந்தார். இந்த புகார் தொடர்பாக போலீசார் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் மார்ட்டின் செபாஸ்டின் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தினர். இந்த குற்றச்சாட்டுகளை மார்ட்டின் செபாஸ்டின் மறுத்தார்.

மேலும் இந்த வழக்கில் போலீசார் தன்னை கைது செய்யாமல் இருக்க கேரள ஐகோர்ட்டில் முன்ஜாமீன் கேட்டு மனு தாக்கல் செய்தார். மனுவை விசாரித்த கோர்ட்டு, எர்ணாகுளம் போலீசார் முன்பு விசாரணைக்கு ஆஜராக வேண்டும் என்ற நிபந்தனையுடன் ஜாமீன் வழங்கியது. இதையடுத்து போலீசார் மார்ட்டின் செபாஸ்டினிடம் விசாரணை நடத்தினர். 72 மணி நேரம் அவரிடம் விசாரணை நடத்தப்பட்டது. விசாரணைக்கு பின்னர் போலீசார் அவரை கைது செய்தனர். பாலியல் புகாரில் சினிமா தாயரிப்பாளர் மார்ட்டின் செபாஸ்டின் கைது செய்யப்பட்டது மலையாள திரையுலகில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## பெப்ரவரி 22ம் திகதி அமேசான் ப்ரைமில் 'வாரிசு'

வம்சி இயக்கத்தில் நடிகர் விஜய் நடிப்பில் உருவான திரைப்படம் 'வாரிசு'. இப்படத்தில் விஜய்க்கு ஜோடியாக ராஷ்மிகா மந்தனா நடித்திருந்தார். மேலும், பிரகாஷ்ராஜ், சரத்குமார், குஷ்பூ, ஷாம், யோகி பாபு உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர்.

பெரும் எதிர்பார்ப்பில் உருவான இப்படம் கடந்த 11 ஆம் திகதி ரசிகர்களின் கொண்டாட்டத்துடன் திரையரங்குகளில் வெளியானது. இதைத்தொடர்ந்து இப்படத்தின் தெலுங்கு பதிப்பான 'வாரசுடு' கடந்த 14 ஆம் திகதி திரையரங்குகளில் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்று வருகிறது.
இந்த திரைப்படம் வசூலில் ரூ.250 கோடியை கடந்துள்ளதாக தயாரிப்பு நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்த நிலையில் வாரிசு திரைப்படம் மீண்டும் வெளியாகவுள்ளது. அதன்படி இப்படம் பெப்ரவரி 22ம் திகதி அமேசான் ப்ரைமில் ஓடிடி தளத்தில் வெளியாகவிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. இதனால் ரசிகர்கள் மகிழ்ச்சியில் உள்ளனர்.



# மாவிலாறு மகிந்தவும் முள்ளிவாய்க்கால் பிரபாகரனும் நடந்தது என்ன?



சுழியோடி

06



விடுதலைப்புலிகளால் திருகோணமலை கைப்பற்றப்பட்டுவிட்டால் அங்கு தமது இருப்பு கேள்விக்குறியாகிவிடும் என்ற எண்ணம் இந்தியாவிடம்காணப்பட்டது. திருகோணமலை படைத்தளம் மீது விடுதலைப்புலிகளின் எறிகணை தாக்குதல்களும் கடற்பரப்பில் கடற்புலிகளின் ஆதிக்கமும் திருகோணமலையை சிறிலங்கா இழக்க வேண்டிய நிலைக்கு கொண்டு வந்து விட்டு விடும் என்பதை இந்தியா உணர்ந்திருந்தது அதனை தக்கவைப்பதற்கான நடவடிக்கையில் இந்தியா இறங்கியது. திருகோணமலையில் இந்தியாவிற்கு சொந்தமான எண்ணெய் குதங்கள் மட்டுமல்ல பல பொருளாதார நலன்களும் இருக்கின்றன. இவற்றுக்கு பாதிப்பு ஏற்படும் என்பது திருகோணமலையில் தனது இருத்தலுக்கான ஆதிக்கத்திற்கு ஆப்பு வைத்துவிடும் என்பதே இந்தியாவின் அவசர நடவடிக்கைக்கு காரணம். திருகோணமலையை முழுமையான கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர அங்கிருந்து விடுதலைப்புலிகள் அகற்றப்பட வேண்டும் என்ற முடிவிற்கு இந்தியா வந்திருந்தது. எனவே தான் கிழக்கில் மகிந்த எடுத்த படையெடுப்பிற்கு இந்தியா தனது ஆதரவுகளை வழங்கியது வெளிப்படையாக சொல்லுவதானால் திருகோணமலையில் விடுதலைப்புலிகள் மீதான தாக்குதலை இந்தியாவே தூண்டிவிட்டது.

மகிந்தவின் கிழக்கின் உதயம் என்ற கருத்துருவாக்கமும் இந்தியாவிடம் இருந்து வந்த கருத்துருவாக்கம் என்பது திடமானது அத்துடன் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த சில பிரதேசங்களையும் ஆக்கிரமித்து அங்குள்ள வளங்களையும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பது இந்தியாவின் நீண்டகால நோக்கங்களில் ஒன்றாக இருந்தது. திருகோணமலையில் புல்மோட்டை தொடக்கம் மூதூர் வரையான கடற்கரை பிரதேசங்கள் பல வளங்களை கொண்டிருக்கிறது. இதில் கனிய வளங்கள் மிகமுக்கியமானவை இதனை தனதாக்கிக்கொள்வதில் முன்னர் யப்பான் அரசு கடுமையாக ஈடுபட்டு வந்தது. சில வருடங்களுக்கு முன் புல்மோட்டையில் யப்பான் கொண்டு செல்லுவதற்காக கனிம வளங்களை ஏற்றிக்கொண்டு இருந்த கப்பல் ஒன்று விடுதலைப்புலிகளின் தாக்குதலுக்கு உள்ளாகி இருந்தது. உங்கள் நினைவுக்கு வரலாம். எனவே இவ்வாறான வளங்கள் நிறைந்த வசதியான இடங்களை கையகப்படுத்த வேண்டும் என்ற நிலையில் இந்தியா சிறிலங்கா அரசுக்கு உதவிகளை வழங்க தொடங்கியது. இந்தியா அதிகாரிகளின் ஆலோசனைகள் சிறிலங்காவிற்கு வழங்கப்படுகின்றன. இதில் படைத்துறை சார்ந்த உதவிகளும் வழங்கப்படுகின்றன. இந்திய அதிகாரிகள் கிழக்கில் நிலைகொள்கின்றார்கள் என்பது அன்று நமக்கு தெரியவில்லை. ஆனால் 2007 ஆம் ஆண்டு வவுனியா ஜோசப் படைமுகாம் மீது புலிகள் நடத்திய கரும்புலித் தாக்குதலில் இந்திர 02 ராடர் சேதமாக்கப்பட்டதும் இதன் போது இந்திய அதிகாரிகள் காயமடைந்ததையும் பின்பு காணக்கூடியதாக இருந்தது. எனினும் கிழக்கில் அவர்கள் இருந்ததற்கான ஆதாரங்களையும் தகவல்கள் எவற்றையும் வெளிக்கொண்டுவர முடியவில்லை. எனினும் திருகோணமலையில் இந்தியாவிடம் இருந்த எண்ணெய் குதங்கள் போன்றவற்றின் பாதுகாப்புக்காக இந்திய படைகள் அங்கு நிலைகொண்டுள்ளன என்பதையும் தொழில்நுட்ப கருவிகளையும் வைத்திருந்தார்கள் என்பது அனைவரும் அறிந்த ஒன்றே. திருமலையில் இருந்த விடுதலைப்புலிகளை அகற்றுவது என்ற நோக்கில் படைநடவடிக்கை பெரும் எடுப்பில் ஆரம்பமாகின்றது. மூதூர் பகுதியில் இருந்த படையினர் விடுதலைப்புலிகளின் பிரதேசங்களை ஆக்கிரமிக்க நகர்கின்றார்கள்.

இதனால் சுமார் 80,000 வரையான மக்கள் வாகரை பெருகல் பிரதேசங்களில் முடக்கப்படுகின்றார்கள் பொருளாதார தடைகள் விதிக்கப்பட்டு மக்கள் பட்டினியால் வதைக்கப்படுகின்றார்கள். இதற்கிடையில் விடுதலைப்புலிகளின் நிலைகள் என குறிப்பிடப்படும் இடங்கள் மீது சிறிலங்கா படையின் மிக்கிபீர் விமானங்கள் தாக்குதல் நடத்துகின்றன. இவற்றில் மக்கள் கொல்லப்படுகின்றார்கள், காயமடைகிறார்கள் ஆனால்சமாதானகாலத்தில்மேற்கொள்ளப்பட்ட இந்த தாக்குதலால் சர்வதேசம் அதிர்சியடைந்த நிலையில் அவர்களை திசைதிருப்பும் நோக்கத்துடன் சிறிலங்கா அரசு திட்டமிட்ட வகையில் செய்திகளை வெளியிடுகின்றது.

திருமலை துறைமுகத்திற்கு அச்சுறுத்தலாக இருக்கும்விடுதலைப்புலிகளையும்அவர்களின் பீரங்கிகளையும் அழிக்கும் நடவடிக்கை தொடர்கின்றது என்றும் சிங்கள ஊடகங்களில் செய்திகள் வெளியாகின்றன. இதனையடுத்து வெருகல் ஈசிலம்பரு மீது மூர்க்கத்தனமான தாக்குதல்களை சிறிலங்காவின் முப்படைகளும் மேற்கொள்கின்றார்கள் வெருகல் பிரதேசத்தில் பிரசித்தி பெற்ற முருகன் ஆலயம் அமைத்துள்ளது. திருகோணமலை என்ற பேருக்கு அமைவாக இங்கு மலைகள் அதிகம் காணப்படும். அந்த வகையில் வெருகல் பிரதேசத்திலும் மலைகள் காணப்படுகின்றன. மகாவலி கங்கையின் ஒரு கிளை ஆறாக வெருகல் ஆறு உள்ளது. இந்த ஆற்றின் அருகிலே வெருகல் முருகன் ஆலயம் அமைந்துள்ளது.

சிறிலங்கா படைகளின் தாக்குதல் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் வெருகல் ஆறும் மற்றும் முருகன் ஆலயத்தை அண்டிய பகுதிகளில் அகதிகளாக தஞ்சம் புகுந்தார்கள். இந்த மக்களுக்கான அத்தியாவசிய உதவிகள் சிலவற்றை அரச சார்பற்ற நிறுவனங்கள் வழங்குகின்றன. இதற்கிடையில் விடுதலைப்புலிகளின் ஆளுகைக்கு உட்பட்ட நிலப்பரப்பினை படையினர் ஆக்கிரமிக்க தயாராகின்றார்கள். இந்த முயற்சியை தடுப்பதற்கு மட்டக்களப்பில் இருந்து திருகோணமலைக்கு ஒரு தொகுதி போராளிகள் நகர்த்தப்பட தயாராகின்றார்கள். எனினும் சில காரணங்களால் இவர்களின் நகர்வு இடைநிறுத்தப்படுகின்றது. இதற்கான காரணம் என்னவென்று தெரியவில்லை. அதேவேளை திருகோணமலையில் இருந்த காயமடைந்த போராளிகள் காட்டுப்பகுதி ஊடாக மட்டக்களப்பிற்கும் ஏனைய பகுதிக்கும் நகர்த்தப்படுகின்றார்கள். கிபீர் விமானங்கள் தாக்குதலில் ஈடுபடுகின்றது.

தளபதி சொர்ணம் நிலைகொண்டிருந்த பகுதிகளை இலக்குவைத்து சிறிலங்கா வான்படையினர் கடுமையான தாக்குதலை நடத்தியிருந்தனர். இலக்குகளை படையினர் அறிந்துகொண்டே தாக்குதலை நடத்தியதில் இருந்து இந்த தாக்குதல்களுக்கு பின் பலம்வாய்ந்த கரங்கள் இருக்கின்றன என்பதை உணரக்கூடியதாக இருந்தது. மக்கள் வாழ்விடங்களிலும் தாக்குதல்கள் கடுமையாக இருந்தது மக்கள் பாதிக்கப்பட்டதை அடுத்து சிறிலங்கா அரசு மீது சில குற்றச்சாட்டுக்கள் வைக்கப்படுகின்றன. இந்த குற்றசாட்டுக்களில் இருந்து தப்பிப்பதற்காக மக்களை அங்கிருந்து வெளியேற்றிவிட்டு தாக்குதலை நடத்துவதற்கு சிறிலங்கா முனைகின்றது. அங்கிருந்து மக்களை வெளியேறுமாறு சிறிலங்கா உத்தரவு இடுகின்றது. ஆனால் மக்கள் அங்கிருந்து வெளியேற மறுக்கின்றார்கள்.


இதனால் விடுதலைப்புலிகள் மக்களை பணயமாக வைத்திருக்கிறார்கள் என்று இன்னுமோர் பொய்யான குற்றச்சாட்டையும் சர்வதேச ரீதியாக சிறிலங்கா அரசு முன்வைக்க தொடங்கியது. எனவே சிறிலங்கா அரசின் இந்த பொய் பிரச்சாரத்தை முறியடிக்க போர்நிறுத்த கண்காணிப்பு குழுவுடன் விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவினர் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுகின்றார்கள். மக்களின் நிலைப்பாட்டினை அறிந்துகொள்ள போர் நிறுத்த கண்காணிப்பு குழுவினரை விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிக்கு நேரில் வந்து மக்களிடம் நிலமையை கேட்டறிந்து கொள்ளும்படி கட்டாயப்படுத்துகின்றார்கள். இதற்கமைவாக கந்தளாய் ஊடாக போர்நிறுத்த கண்காணிப்பு குழுவினர் வெருகல் பிரதேசம் செல்கின்றார்கள் அவர்கள் அங்கு சென்றிருந்த போது நிலைமை மேலும் மோசமடைகின்றது.




**தொடரும்...**

# ஊடகவியலாளர் சிவராமின் கொலையில் தொடர்புடைய கட்சியே DT.N.A

**ஓய்வுபெற்ற முன்னாள் நீதியரசரும், முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் அவர்களுடனான சிறப்பு நேர்காணல்**



கடந்தவார தொடர்ச்சி...

**கேள்வி: அப்படியாயின் நீங்கள் மணிவண்ணன் உடன் எப்படி கூட்டமைக்கீர்கள்?**

பதில் : மணிவண்ணன் தானாக வந்து எங்களிடம் கேட்டு கட்சியில் சேர்ந்திருக்கின்றார். மணிவண்ணன் வேறுயாருமில்லை இப்பொழுது அவர் என்னுடைய கட்சியின் அங்கத்தவர். ஆகவே அவரை ஏற்றுக்கொள்வோம்.

**கேள்வி : ஆனால் இன்று அந்த கூட்டை உடைப்பதற்கு மணிவண்ணன் ஊடாக சுமந்திரன் ஒரு ஏவலாளியை அனுப்பி உங்களை கொண்டுபோனதாக பலர் கூறுவதாக இணையதளங்களிலும் செய்தி வந்தது அதை ஏற்றுக்கொள்கின்றீர்களா?**

பதில் : அதாவது மணிவண்ணனை சுமந்திரன் பாவித்திருக்கின்றார் என்றா கேட்கின்றீர்கள். அப்படி ஒன்றும் இல்லை ஏனென்றால் மணிவண்ணன் அங்கு பேசவே இல்லை நான் தான் பேசினேன். அதிலே தீர்மானங்களை எடுத்திருந்தவன் நான். மணிவண்ணன் என்னுடன் வந்தவர் தற்பொழுது எங்களுடைய கட்சியில் சேர்ந்திருக்கின்றார் என்பதால் அவரையும் அழைத்துக்கொண்டு போனோம். அவரையும் பேராசிரியர் சிவநாதனையும் கூட்டிக்கொண்டு போனோம். மற்றும்படி மணிவண்ணன் அதிலே எதுவும் செய்யவில்லை.

**கேள்வி : தமிழ் தரப்பு இப்படியே சிதைவுகளை சந்தித்துக்கொண்டு போகும் நிலை உருவாக்கப்பட்டதன் காரணம் என்னவென்றால் 2001 ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலிலே 16 ஆசனங்களை கைப்பற்றியிருந்தது. அப்பொழுது தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ் தேசிய மக்கள் முன்னணி இந்த ரெலோவும் ஈ.பி.ஆர்.எல்.எப் ம் இருந்தது புளொட்டில். அதன் பின்னர் தமிழீழ விடுதலைக் கூட்டணி ஆனந்த சங்கரி விலக்கப்பட்டதன் பின்னர் 2004 ஆம் ஆண்டு தேர்தலிலே 22 ஆசனங்களை வடகிழக்கிலே விடுதலைப்புலிகள் இருந்த காலகட்டத்திலே அந்த ஆசனங்கள் ஒரு கூட்டாக இருந்தபொழுது தான் வெற்றி கிடைத்தது. அவ்வாறிருக்கும் பொழுது அந்த கூட்டு ஒவ்வொன்றாக உடைந்து வருகின்ற பொழுது அடுத்த 2015 இல் இடம்பெற்ற தேர்தலிலே 15 ஆசனங்கள் பின்னர் இறுதியாக 2019 இல் இடம்பெற்ற தேர்தலிலே 10 ஆசனங்களாக வந்து விட்டது. எனவே தற்பொழுது உள்ளூ ராட்சி மன்ற தேர்தல் தான் இடம்பெறுகின்றது. இதிலே மாகாணசபை தேர்தலோ அல்லது பாராளுமன்ற தேர்தலோ அல்ல. ஆனால் இதிலே ஒரு பிரிவினையை ஏற்படுத்துவதனால் அந்த கூட்டு ஒற்றுமை என்பது இல்லாமல் தான் அந்த வாக்குகள் சிதறடிக்கப்பட்டது. ஆனால் இதிலே தமிழரசுக் கட்சி பிளவுபட்டு ஒன்றாக இணைவோம் என்று கேட்டால் நாளைக்கு உங்களையும் கேட்கலாம். இணைந்து நாங்கள் ஆட்சி அமைப்போம் என்று கேட்டால் இது சாத்தியமான விடயமாக இருக்கின்றதா?**

பதில் : ஏற்கனவே நீங்கள் கூறியது போன்று 2009 க்கு முன்னர் தேர்ந்தெடுக்கப்பட்ட பொழுது புலிகள் இருந்த படியால் அவர்களை கட்டுப்படுத்தக்கூடிய ஒரு சக்தி அந்த நேரத்திலே இருந்தது. அந்த சக்தி இல்லாமல் போனதன் பின்னர் இவர்கள் தாங்களாக தனித்து சிந்திக்க தொடங்கியதன் பிற்பாடு மக்கள் அவர்கள் மீது கொஞ்சம் ஐயம் கொண்டார்கள் அல்லது வெறுப்பு கொண்டார்கள் அல்லது வேறு அரசாங்கத்துடன் சம்பந்தப்பட்ட கட்சிகள் மீது இவர்களுக்கு போட்டார்கள் என்ற எண்ணத்திலே அவர்களுக்கு போட்டார்கள். இப்படி பலதும் நடந்து கொண்டிருக்கின்றது. முக்கியமாக எங்களிடம் ஒரு ஒற்றுமை இல்லை என்பது தான் அதன் முக்கியமான விடயம். ஆனால் என்னுடைய கருத்து என்னவென்றால் ஒற்றுமை என்று கூறிக்கொண்டு பாசாங்கு செய்யக்கூடாது. ஒற்றுமை என்று கூறும்பொழுது தலைவர் மீது எங்களுக்கு நம்பிக்கை இருக்கவேண்டும். கட்சியின் மீது நம்பிக்கை இருக்க வேண்டும். சின்னத்தின் மீது நம்பிக்கை இருக்க வேண்டும். அப்படியில்லாமல் அனைவரையும் இவரும் கள்ளம் செய்வார் அவரும் கள்ளம் செய்வார் என்று ஒற்றுமைக்காக சேர்ந்தால் அது ஒரு ஒற்றுமையாக வராது.

**கேள்வி : அவ்வாறெனில் TNA இருக்கின்றதா இல்லையா? உடைந்துவிட்டதா உடையாமல் இருக்கின்றதா?**

பதில் : அது கூறமுடியாது. TNA இல்லை என்று சொன்னால் சம்பந்தன் பதவியில் இல்லை என்று தான் அர்த்தம். ஏனென்றால் தமிழரசுக் கட்சிக்கு ஒரு தலைவர் இருக்கின்றார் அது மாவை சேனாதிராஜா அவர்கள். TNA இருந்தால் தான் சம்பந்தன் அதில் தலைமை வகிக்கலாம். எனவே இவர்கள் இரண்டு பேரும் வெளியில் வந்தால் சம்பந்தன் அவர்கள் அப்படியே விழுந்து விட்டார் என்று தான் அர்த்தம். எனக்கு அதை சொல்ல முடியாது. சம்பந்தன் இப்பொழுதும் இருந்து கொண்டு TNA இன் தலைவர் என்ற முறையில் தானே பேசுகின்றார்.

**கேள்வி : அப்படியெனில் இந்த DTNA?**

பதில் : DTNA தற்பொழுது இவர்கள் கொண்டு வந்தது. அதனுடைய அர்த்தம் எங்களுக்கு சரியாக புரியவில்லை ஏனென்றால் DTNA என்பது உண்மையிலே TNA அல்ல. இவர் TNA மாதிரி பாசாங்கு செய்துகொண்டு D ஐ முன்னுக்கு சின்னதாக போட்டுக்கொண்டு இருக்கின்றார். இவ்வாறான விடயங்களை செய்வதற்கு என்னால் ஒத்துவர முடியாது. சுமந்திரன் சொல்லுகின்றார் TNA என்ற பெயரை நீங்கள் பாவிக்க முடியாது என்று. நானும் அவர்களுக்கு அன்று அதைத்தான் சொன்னேன். இல்லை இல்லை நாங்கள் DTNA ஐ தான் பாவிக்கின்றோம் என்றார்கள். இப்படிப்பட்ட ஏமாற்று வேலைகளுக்கு போக என்னால் முடியாது. அதனால் தான் எங்களுடைய கட்சியை ஏற்றுக்கொள்ளுங்கள் கட்சியினுடைய சின்னத்தை ஏற்றுக்கொள்ளுங்கள் என்னை நீங்கள் தலைவராக ஏற்றுக்கொண்டதால் இதனையும் ஏற்றுக்கொள்ளுங்கள் என்றேன். நான் மற்றவர்கள் போல் நடந்துகொள்ளவில்லை என நீங்கள் சொன்னால் எனவே என்மீது நம்பிக்கை இல்லை நான் விட்டுவிட்டு போகின்றேன் அவ்வளவும் தான்.

**கேள்வி : இவ்வாறான பிளவுகள் ஏற்பட்டிருக்கின்ற கட்டத்திலே குறிப்பாக உள்ளூராட்சி மன்றங்களை கணிசமானளவு வடகிழக்கிலே தமிழ் தரப்பு கைப்பற்றக்கூடிய வாய்ப்புக்கள் இருக்குமா?**

பதில் : இல்லை அப்படி கைப்பற்றக்கூடிய நிலைமை வராது என்று நினைக்கின்றேன் ஏனென்றால் அரசாங்க கட்சிகள் இதனை சாதகமாக பாவிக்கக்கூடும். அதனால் தான் கூறுகின்றேன் வடக்கு கிழக்கிலும் பிளவுகள் நிறைய வந்தால் தொங்கு தீர்ப்பு தான் கிடைக்கக்கூடும். அது எங்களுக்கு பாதிப்புக்களை ஏற்படுத்தக்கூடும். முழு நாட்டிலும் அவ்வாறான தொங்கு தீர்ப்பு தான் கிடைக்கும்.

**கேள்வி : தமிழ் தரப்புக்கள் ஒவ்வொன்றும் தனித்தனியே போட்டியிட்டு ஒன்றாக சில உள்ளூராட்சி மன்றங்களை வெல்லக்கூடிய வாய்ப்புக்கள் இருக்குமா?**

பதில் : ஒன்றாக வெல்லக்கூடிய வாய்ப்புக்கள் இருக்குமோ தெரியாது. ஆனால் நாங்கள் வென்றதன் பிற்பாடு ஒருமிக்க சேரக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது.

**கேள்வி : உங்களை தமிழ் தேசிய மக்கள் முன்னணி கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்கள் ஒரு தமிழ் மக்கள் பேரவையை உருவாக்கி அதில் உங்களைத்தான் ஒரு தலைவராக வெளியிட்டு உங்களை அதில் உச்சத்துக்கே கொண்டு சென்றார்கள். உங்கள் மீது அவர்கள் அதீத விருப்பில் செயற்பட்டார்கள். அதன் பின்னர் முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்கள் ஒரு பிழையான பாதையிலே பயணிக்கின்றார் அரசாங்கத்துடன் இணைந்து அவரது செயற்பாட்டை செய்திருந்தார், அவர் சில இடங்களிலே கோமாளித்தனமாக பேசுகின்றார். எனவே இவரது கருத்துக்களை நாங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடாது இவர் சதி செய்கின்றார் என்ற விடயங்களை எல்லாம் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்கள் நேர்காணலில் கூட குறிப்பிட்டிருந்தார். தமிழ் மக்கள் பேரவை ஒன்று வந்து அதில் தமிழரசுக் கட்சியை இல்லாது செய்வதற்கான நடவடிக்கையாகவே அது அமையப்பெற்றது. அதில் இருந்ததன் பின்னர் உங்களுக்கும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களுக்கும் இடையிலான விரிசல் ஏன் உருவானது?**

பதில் : எங்களுக்குள் விரிசல் ஒன்றும் இல்லை. கஜேந்திரகுமார் சில குழந்தைப்பிள்ளைத்தனமான பேச்சுக்களை பேசிக்கொண்டிருக்கின்றார். நல்ல சிறந்த கிரிக்கெட்டருக்கு பரிசு கொடுப்பதாக இருந்தால் அவரையும் பார்க்க ஒரு சிறந்த கிரிக்கெட்டர் தான் கொடுக்க வேண்டும். அதுதான் முறையாக இருக்கும். எனவே நான் கோமாளி என்றால் எனக்கு அந்த பட்டத்தை தரும் அவர் அதிலும் பார்க்க பெரிய கோமாளியாக தான் இருக்கவேண்டும். எனவே கோமாளி சண்டை இல்லை இது. இதில் நாங்கள் சில விடயங்களை பரிசீலித்துப்பார்த்து நடவடிக்கைகளில் இறங்க வேண்டுமே தவிர இப்படியான கோமாளித்தனமான பேச்சுக்களால் எங்களுக்கு எந்தவிதமான நன்மையும் கிடைக்காது.

தமிழ் மக்கள் பேரவை நான் வருவதற்கு முன்னரே இருந்தது. அதிலே என்னைத் தலைவராக்கினார்கள். தலைவராக ஆக்கியதன் பிற்பாடு திரு. சுரேஸ் பிரேமச்சந்திரன் அவர்களுக்கும் திரு. கஜேந்திரகுமார் அவர்களுக்கும் சில பிளவுகள் ஏற்பட்டது. அந்த பிளவுகளின் நிமித்தம் அவர்கள் அதிலிருந்து வெளியேறிவிட்டார்கள். அவர்கள் அதிலிருந்து வெளியே போனதன் காரணமாக எங்களுடன் சேர்ந்து பயணித்த பலரதும் வரவு குறைந்தது. அந்த காலகட்டத்திலே தான் எனக்கு என ஒரு கட்சியை தொடங்க போனபொழுது ஏற்கனவே கட்சியின் உறுப்பினர்கள் இல்லாது இருக்கும் அந்த தமிழர் பேரவை படுக்க தொடங்கிவிட்டது இப்பொழுதும் படுத்திருக்கின்றது. ஆனால் நான் டாக்டர் அவர்களிடம் இதை கொண்டு நடத்துங்கள் என்று கூறிப்பார்த்தேன்.

அப்பொழுது அவர்கள் கூறினார்கள் நீங்கள் இருந்தபொழுது அதற்கு இருந்த மக்கள் ஈர்ப்பு தற்பொழுது இல்லையென்று. அதற்கு நான் என்ன செய்வது. நான் என்னுடைய கட்சி ரீதியான நடவடிக்கைகளில் இறங்கியதன் காரணமாக அது படுத்துவிட்டது அவ்வளவும் தான். ஆனால் அது படுத்ததற்கு முன்னரேயே சுரேஸ் பிரேமச்சந்திரனுக்கும் கஜேந்திரகுமாருக்கும் இருந்த பிரச்சனையால் அவர்களும் எங்களை விட்டு போனதன் காரணமாக அங்கிருந்தவர்கள் குறைந்து விட்டார்கள் அதுதான் உண்மை. அதனூடாக பிரிவினையை ஏற்படுத்தி விட்டார்கள். அதே நேரத்தில் நான் மற்றபக்க போகவேண்டியிருந்தது. ஆகவே அது அப்படியே படுத்துவிட்டது.

**கேள்வி : உண்மையிலே இந்த வடகிழக்கில் இருக்கக்கூடிய மக்கள் மிகவும் ஒரு பொருளாதார நெருக்கடியினாலும், கொரோனா பிரச்சனை இப்படியெல்லாம் இருக்கும்பொழுது இந்த கட்சிகள் பிளவுபடுகின்றது அல்லது செய்கின்றது என கூறி மக்களும் யாருக்கு வாக்களிக்க வேண்டும் எந்த TNA க்கு போட வேண்டும் அல்லது ரெலோவுக்கா புளொட்டிற்கா அல்லது தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்கா என்றவொரு நிலைப்பாட்டில் இருக்க பொதுவான உங்களது கருத்து என்ன? உள்ளூ ராட்சிமன்ற தேர்தலைப் பொறுத்தவரையிலே தமிழ் தரப்பு வெற்றி பெற வேண்டும் என்றால் எவ்வாறு அதனை கையாள வேண்டும் என்பது உங்களுடைய நிலைப்பாடு?**

பதில் : இரண்டு விடயங்கள் மனதிற்கு எடுக்கப்பட வேண்டும். தலைமைத்துவம் என்மீது திணிக்கப்பட பார்த்தது. அதைத்தான் நான் விட்டுவிட்டு வந்தேன் தாங்கள் தலைமைத்துவம் பெறவேண்டும் என்பதற்காக பல நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் கொஞ்சம் சிந்தனையை வேறுபடுத்தி பார்க்க வேண்டும். இரண்டாவது எங்களது ஒருமித்த பயணம் நடைபெறாவிட்டால் எவ்வாறு அரசாங்க கட்சிகள் உள்நுழைவார்கள் என்பது 2020 தேர்தலிலே எங்களுக்கு தெரியவந்தது. எனவே நாங்கள் அதனை மனதில் எடுத்து தேர்தலை பொறுத்தவரையிலே தேர்தல் உடன்பாடுகளை வைத்து நாங்கள் செல்லலாம். தற்பொழுது இந்த ஐந்து கட்சியில் உள்ளவர்களுடனும் எனக்கு எந்தவித தனிப்பட்ட பிரச்சனைகளும் இல்லை. அன்று நடந்த சில விடயங்களை என்னால் ஏற்றுக்கொள்ளமுடியாததன் காரணத்தால் தான் குழப்பம் ஏற்பட்டது.

ஆனால் அவர்கள் அனைவரும் தற்பொழுது ஒரு கூட்டணியாக முடிவு எடுத்திருக்கின்றார்கள். அவர்களுடன் நாங்கள் தேர்தல் ஒப்பந்தங்களை வைத்துக்கொள்ளலாம். ஒரு தேர்தல் வரும்பொழுது அந்த தேர்தலுக்கான ஒப்பந்தங்கள் உடன்பாடுகளிலே நாங்கள் இறங்கினோமானால் கூடிய தமிழ் தேசிய கட்சிகளை உள்வாங்கக்கூடிய ஒரு சூழல் ஏற்படும். அவ்வாறு செய்யாது விட்டால் நாங்கள் எங்களுக்கிடையே பிரிந்து கொண்டிருந்தால் கட்டாயமாக அரசாங்க சார்பு கட்சிகளுக்கு அது நல்ல காலமாக இருக்கும். எனவே தொடர்ந்தும் ஒற்றுமை பேணப்பட வேண்டும். நான் அதில் நிற்க மாட்டேன் என்று சொன்னதனால் நான் ஒற்றுமைக்காக செயற்படமாட்டேன் என்றில்லை. இதுமட்டுமல்ல தமிழரசுக் கட்சியுடனும் ஒற்றுமையுடன் சேர்ந்து பயணிக்கவும் நான் தயாராகத்தான் நிற்கின்றேன். மாவையுடன் சேர்ந்து தானே நாங்கள் பல நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தோம். மாவைக்கு எதிராக தன்னுடைய கட்சியிலே சில நடவடிக்கைகளை ஏற்படுத்திய அந்த நபர்கள் தான் இதற்கு காரணம் சொல்ல வேண்டும்.

ஏனென்றால் மாவை சரியான ஒரு தீர்மானத்தை எடுத்து எங்களுடன் சேர்ந்து பயணிக்க வேண்டும் என்று இருக்கும்பொழுது அந்த பிளவுகளை ஏற்படுத்தியவர்கள் தான் இவற்றுக்கு காரணம். அவர்கள் சரியாக இருந்தால் நாங்கள் சேர்ந்து தான் போகவேண்டும் என்றிருந்தால் நாங்கள் அனைவரும் சேர்ந்து போகக்கூடியதாக இருந்திருக்கும். அது தனிப்பட்டவர்களுடைய தலைமைத்துவ எண்ண எதிர்பார்ப்புக்கள் தான் அதற்கு காரணம்.

**நேர்காணல் : இரணியன்**

# மகளிர் பக்கம்

## முகப்பருக்களை போக்க உதவும் சில எளிய மருத்துவ குறிப்புகள்....!!

பரு வந்து விட்டால் அதை நகம் படாமல் பாதுக்காப்பது நல்லது. சிலர் பருவை கிள்ளி விடுகின்றனர். அவ்வாறு செய்தால் பரு மேலும், மேலும் அதிகமாகிக் கொண்டு தான் போகுமே தவிர குறையாது.

பரு வந்து விட்டால் அதை கிள்ள கூடாது. அத்துடன் கொழுப்புப் பொருட்களை உட்கொள்வதை தவிர்க்க வேண்டும். உதாரணமாக தயிர், மாமிசம், சாக்லெட், ஐஸ்க்ரீம், எண்ணெய்யில் வறுத்த மற்றும் பொறித்த பலகாரங்களை சாப்பிடக் கூடாது.

பரு உருவாக இன்னொரு முக்கியக் காரணம் மலச்சிக்கல். இந்த மலச் சிக்கலை போக்க தினமும் உணவில் கீரைகளை சேர்த்துக் கொள்வது நல்லது. இது தவிர ஒருநாளைக்கு குறைந்தது எட்டு டம்ளர் தண்ணீர் குடிக்க வேண்டும்.

அடிப்படையில் ஆரோக்கியமான தூக்கத்தை கடை பிடிப்பது நல்லது. பச்சைத் தண்ணீரில் குளித்து அதிக எண்ணெய் இல்லாத உணவை சாப்பிடுவது நல்லது. பயத்தம் பருப்பு போட்டுக் குளித்தால் எந்தத் தோல் சம்பந்தமான எந்த வியாதியும் நம்மை நெருங்காது.

ஆயுர்வேத சோப்புகள் போட்டுக் குளித்தாலும் பரு உண்டாவதை தடுக்கலாம். அதுபோல செயற்கையான க்ரீம், பவுடர் இவற்றுக்குப் பதிலாக, துளி பாலோடு முகத்தில் தடவிக் கொண்டு, பிறகு கழுவினால் முகம் பளபளப்பாக மெருகேறி இருக்கும்.

தேனுடன் சிறிது லவங்கப்பட்டை தூளைச் சேர்த்து முகத்தில் தடவலாம். கடுகை சிறிது தேனுடன் கலந்து முகத்தில் தடவலாம். அவ்வாறு தடவினால் முகப் பரு பிரச்சனை நம்மை அண்டாது.

மூன்று மணி நேரத்திற்கு ஒருமுறை முகத்தை குளிர்ந்த நீரால் கழுவுவது நல்லது. ஆனால் சோப்பு பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும். தினமும் குளிக்கும்போது முகத்தில் சோப்புக்குப் பதில் பாசிப்பயறு மாவைத் தேய்த்துக் குளித்துவர முகம் பொலிவு பெறும். கரும் புள்ளிகள் மறையும்.





## பல்வேறு நோய்களுக்கு அற்புத நிவாரணம் தரும் முள் சீத்தாப்பழம் !!

அதிகமான ஊட்டச்சத்துக்களைக் கொண்ட காட்டு முள் சீத்தாப்பழத்தில் கார்போஹைட்ரேட், பிரக்டோஸ் மற்றும் கணிசமான அளவில் விட்டமின் C, விட்டமின் B1, விட்டமின் B2 போன்ற சத்துக்களும் நிறைந்துள்ளன.

இந்தப் பழம், கேன்சருக்கு கொடுக்கப்படும் இரசாயன வகை மருந்துகளைவிட பல மடங்கு வலுவான எதிர்ப்புத் திறனைக் கொண்ட ஒரு அற்புதமான இயற்கைப் புற்றுநோய் கொல்லியாக உள்ளதாக ஆராய்ச்சி முடிவுகள் கூறுகின்றன.

முள் சீத்தாப்பழம் எல்லாவிதமான கேன்சர்களையும் குணப்படுத்தக் கூடியதாக அமைந்துள்ளது. கீமோ சிகிக்சை எடுத்துக்கொள்ளும்போது கடுமையான பக்கவிளைவுகள் ஏற்படும். முடி கொட்டும், உடல் எடை குறையும். ஆனால் இந்த இயற்கை கீமோ வினால், கடுமையான குமட்டல், வாந்தி, எடை இழப்பு மற்றும் மொத்த முடியும் கொட்டிப் போவது போன்றவை ஏற்படாது.

இது இயற்கையான உணவாக இருப்பதால் இரசாயனச் சிகிச்சையான "கீமோதெரபி" போலல்லாமல், பக்க விளைவுகள் இல்லாத வகையில் பாதுகாப்பான மருந்தாகவும், புற்றுநோய் செல்களை திறம்படத் தாக்கி, அவற்றை அழிப்பதாகவும் உள்ளது என்கின்றனர் மருத்துவர்கள். சிகிச்சைக்காக இதை எடுத்துக் கொள்ளும் நாட்கள் முழுவதும் உடலின் பலவீனம் குறைந்து, வலுவாகவும் ஆரோக்கியமாகவும் உணரவைக்கும்.

## உடல் வெப்பத்தை தணிக்கும் பானங்கள்

எள்: இது உடல் எடையை சீராக பராமரிக்கும் தன்மை கொண்டது. தினமும் இரவில் தூங்க செல்வதற்கு முன்பு ஒரு டேபிள்ஸ்பூன் எள்ளை அப்படியே மென்று சாப்பிடலாம். இதனை குழந்தைகளுக்கு கொடுக்கக்கூடாது.

மாதுளை: மாதுளம் பழத்தை கோடை காலத்தில் சாப்பிடுவது அவசியமானது. ஜூஸாகவும் பருகலாம். தினமும் காலையில் ஒரு டம்ளர் மாதுளை ஜூஸ் பருகி வரலாம். அதனுடன் இரண்டு துளிகள் பாதாம் எண்ணெய்யும் கலந்து கொள்ளலாம். இது உடல் வெப்பத்தை குறைக்க உதவும்.

தண்ணீர்: உடலை குளிர்ச்சி படுத்துவதில் தண்ணீருக்கு முக்கிய பங்கு இருக்கிறது. கோடை காலத்தில் தண்ணீர் அதிகம் பருகுவது நீரிழப்பை தடுக்க உதவும்.

வெந்தயம்: காலையில் எழுந்ததும் வெறும் வயிற்றில் ஒரு டேபிள்ஸ்பூன் வெந்தயத்தை வாயில் போட்டு மென்று, தண்ணீர் பருக வேண்டும். கோடையில் இந்த பழக்கத்தை தவறாமல் பின்பற்றி வந்தால் உடல் வெப்பம் தணிந்து விடும்.

சோம்பு: இரண்டு டேபிள்ஸ்பூன் சோம்பை இரவு முழுவதும் நீரில் ஊறவைத்துவிட்டு, காலையில் அந்த நீரை வடிகட்டி குடித்து வரலாம். இது உடல் வெப்பத்தை குறைக்கும் தன்மை கொண்டது.

சந்தனம்: குளிர்ந்த நீர் அல்லது குளிர்ந்த பாலில் சந்தனத்தை போட்டு குழப்பி நெற்றி, தாடை, முகத்தில் தடவிவிட்டு உலர்ந்ததும் கழுவி விடலாம். உடல் சூடு குறைந்துவிடும். மேலும் சந்தனப்பொடியுடன் ரோஸ் வாட்டரை சேர்த்து கலந்தும் முகத்தில் உபயோகிக்கலாம். இதுவும் உடலுக்கு குளிர்ச்சியை ஏற்படுத்தி கொடுக்கும்.

பால்: பாலுடன் தேன் கலந்து பருகி வருவதும் உடல் வெப்பத்தை தணிக்க உதவும்.

இளநீர்: கோடையில் உடல் வறட்சி ஏற்படாமல் தடுத்து, குளிர்ச்சியை தக்கவைக்கும் தன்மை கொண்டது இளநீர். அனைத்து தரப்பினருக்கும் ஏற்ற பானமாகவும் இது விளங்குகிறது.

விட்டமின் சி: ஆரஞ்சு, எலுமிச்சை, நெல்லிக்காய் போன்ற விட்டமின் சி சத்து கொண்டவற்றை சாப்பிடுவது உடல் வெப்பத்தை குறைக்க உதவும். கோடை கால சீசனில் கிடைக்கும் பழங்கள் அனைத்தையும் சாப்பிடலாம். இவைகளை ஜூஸ் தயாரித்தும் பருகி வரலாம்.

## கொண்டைக்கடலையின் பயன்கள்!

நம் அன்றாட வாழ்க்கையில் உட்கொள்ளும் கொண்டைக்கடலை ஏராளமான விட்டமின் மற்றும் சத்துகளை தன்னுள் கொண்டிருக்கிறது.

கொண்டைக்கடலையில் கருப்பு கொண்டைக்கடலை, வெள்ளை கொண்டைக்கடலை இரண்டுமே அதிக புரதங்களையும், சத்துக்களையும் கொண்டது.

கொண்டைக்கடலையில் இரும்பு சத்து, மக்னீசியம், புரதச்சத்து, விட்டமின் பி, நார்ச்சத்து, சுண்ணாம்பு சத்துகள் அதிகளவில் உள்ளது.

ஊற வைத்த கொண்டைக்கடலையை சாப்பிடுவது மாரடைப்பு நோய்களுக்கு எதிரான எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது.


வெள்ளை கொண்டைக்கடலையை பொடி செய்து சாப்பிட்டு வர சிறுநீர் அடைப்பு, எரிச்சல் ஆகியவை குணமாகும்.

கிளைசீமிக் இன்டெக்ஸ் குறைவாக உள்ளதால் கொண்டைக்கடலை நீரிழிவு நோயாளிகளுக்கு மிகவும் நல்ல உணவாக இருக்கிறது.

கொண்டைக்கடலை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால், பெண்களை அதிகம் தாக்கும் மார்பக புற்றுநோய், ஆஸ்டியோபோரோசிஸ் ஆகிய நோய்களுக்கு எதிரான எதிர்ப்புசக்தி கிடைக்கிறது.

இரும்புசத்து கொண்டைக்கடலையில் அதிகம் உள்ளது. அதனால் ரத்தசோகை உள்ளவர் இதை சாப்பிடுவது நல்லது.

கொண்டைக்கடலையை அவித்து அரைத்து பாலில் கலந்து சாப்பிட்டு வர உடலுக்கு உறுதியை கொடுக்கும்.



## காலை உணவை தவிர்ப்பதால் ஏற்படும் பிரச்சனைகள் என்ன...?

தற்போதைய தலைமுறையினர் போதுமான அளவிற்கு நோய் எதிர்ப்புத் தன்மை இல்லாமல் பெரும் அவதிக்கு உள்ளாகின்றனர். அதற்கு காரணம் உணவு பொருட்கள் அனைத்தும் கலப்படமாக மாறிவருவதும் ஒரு காரணம் ஆகும். விரும்பியதை உண்கின்றோம் என்ற பெயரில் துரித உணவுகளையும், அடைக்கப்பட்ட பேக்கட் உணவுகளையும் எடுத்துக்கொள்வதால் தேவையில்லாத உடல் உபாதைக்கு ஆளாகின்றனர். இதனால் உடல் ஆரோக்கியம் மிகவும் பாதிக்கப்படுகிறது.

உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படுவதற்கு சரியான நேரத்தில் சரியான உணவை சாப்பிடாமல், சரியான நேரத்தில் தூக்கம் இல்லாமல் இருப்பதும் ஆகும். இதனால் உடல் பருமன் உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகளை சந்திக்க நேரிடுகிறது. குறிப்பாக காலை சிற்றுண்டியை எடுத்துக் கொள்ளாமல் தவிர்க்கின்றனர். இதனால் சரியான நேரத்தில் சாப்பிடாமல் இருப்பதால் அல்சர் உருவாக வாய்ப்பு உள்ளது.

சர்க்கரை நோய் வருவதற்கும் உணவு பழக்கவழக்கத்தில் மாறுபாடு இருந்தால் கட்டாயம் டைப்-2 சர்க்கரை நோய் வர வாய்ப்பு உள்ளது என கூறப்படுகிறது. மேலும் தேவையான நேரத்தில் உணவு சாப்பிடாமல் இருந்தால் கட்டாயம் மன அழுத்தம் போன்றவை வர வாய்ப்பு உள்ளது. எனவே முடிந்தவரை காலை நேர உணவை தவிர்க்காமல் சாப்பிடுவது உடல் ஆரோக்கியத்திற்கு மிகவும் முக்கியம் ஆகும்.



# தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருந்து விலகியவர்கள் கொள்கை ரீதியில் விலகியதாக கூறுகின்றார்கள் உண்மை அதுவல்ல!

**முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் அவர்களுடனான சிறப்பு நேர்காணல்**




கடந்தவார தொடர்ச்சி...

**கேள்வி : ஆட்சியாளர்கள் கொலைகாரர்கள் ஆகவே இவர்களோடு இணைந்தால் நாம் பயணிக்க முடியாது என்ற கருத்து அங்கு கூறப்பட்டதாக சொல்லப்படுகின்றதே?**

பதில் : தவறுதலான கருத்துக்கள் அங்கே கூறப்படுகின்றது. நான் இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்திய குழு கூட்டத்தில் தொடர்ச்சியாக பங்குபற்றி வருகின்றவன் எந்தவொரு இடத்திலும் வன்முறையாளர்கள் ஆயுதக்குழுவில் இருக்கின்றவர்கள் என்ற வார்த்தை பிரயோகங்கள் அங்கே பாவிக்கப்படவில்லை. வதந்திகளை அவர்கள் செய்திகளாக மாற்றுகின்றார்கள் எங்களுக்கு தெரியும் தமிழ் தேசிய கூட்டமைப்பும் ஒரு விடுதலைக்காக போராடி ஆயுதம் ஏந்தி மாவீரர்களை இந்த மண்ணுக்காக ஈகம் செய்த ஒரு இயக்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட த.தே.கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் நாங்கள் அவ்வாறான கருத்துக்களை நான் இருக்கும் பொழுது அவர்கள் கூறவுமில்லை. ஏற்கனவே வெளியில் இருந்து யாரும் கூறினார்களா? என்பதும் எனக்கு தெரியவில்லை. அது உண்மைக்கு புறம்பான கருத்து என்று நான் நினைக்கின்றேன்.

**கேள்வி : 2001 ஆம் ஆண்டில் 16 ஆசனங்களை தமிழர் விடுதலைக் கூட்டணி இருந்த பொழுது கைப்பற்றுகின்றது. 2004 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலை பார்க்கின்ற பொழுது 22 ஆசனங்களை தமிழீழ விடுதலைப்புலிகளால் உருவாக்கப்பட்ட த.தே.கூட்டமைப்பு தமிழரசுக் கட்சியை உள்வாங்கிக்கொண்டு போட்டியிட்டது. அதன் பின்னர் 15 ஆசனங்கள், பின்னர் 10 ஆசனங்கள் என படிப்படியாக குறைந்தது. அந்த கூட்டு இணைந்த ஒற்றுமை 22 ஆசனங்களை கொண்டு வர முடியுமாக இருந்த கட்டத்திலே ஏன் தற்பொழுது அவ்வாறானதொரு கூட்டை விட்டு விகிதாசார தேர்தல் என்று கூறுகின்றீர்கள், கூட்டாக இருந்த பொழுது அவ்வாறான பாரியதொரு வெற்றி ஏற்பட்டது தானே ஏன் தற்பொழுது அதிலிருந்து வெவ்வேறாக சென்று கேளுங்கள் என்ற விடயத்தை கொண்டுவரவேண்டும் அல்லது அரச ஏஜன்டுகளாக பணி புரிவதாக ரணிலினுடைய திட்டத்தை சுமந்திரன் கூறுகின்றார். எனவே அதனால் தான் இப்படி நடந்ததாக கூட செய்திகளிலே வெளிவந்திருக்கின்றதே?**

பதில் : இக் கருத்தில் ஒன்றை திருத்திக்கொள்ள வேண்டும் 2001 ஆம் ஆண்டு த.தே கூட்டமைப்பு உருவாக்குகின்ற பொழுதும் இலங்கை தமிழரசுக் கட்சி இருந்தது. எப்படியிருந்தது தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் இருந்தது. அதன் பொதுச்செயலாளராக இருந்தவர் யார் இரா. சம்பந்தன் ஐயா அவர்கள். எனவே நான் வரலாற்றை தவறாக மையப்படுத்துவது இல்லை. 2001 ஆம் ஆண்டு உருவாக்கப்படும் பொழுதும் இலங்கை தமிழரசுக் கட்சி இருந்தது. ஆனால் எதனுடன் இருந்தது தமிழர் விடுதலை கூட்டணியுடன் இருந்தது. அதிலே ஜோசப் பரராஜசிங்கம் ஐயா இருந்தவர். மாவை சேனாதிராஜா அண்ணன் இருந்தவர். சம்பந்தன் ஐயா பொதுச்செயலாளராக இருந்தவர். ஊடகவியலாளராக இருக்கும் நீங்கள் கூட அதை சரியாக விளங்கிக்கொள்ள வேண்டும். ஆனந்த சங்கரி என்பவர் அதில் ஒரு அங்கமாகத்தான் இருந்தார். அதில் தெரிவு செய்யப்பட்ட 15 பேரில் 14 பேர் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தை ஏகபிரதிநிதித்துவத்திற்காக அங்கீகரித்திருந்தார்கள். அதிலே அவ்வாறு அங்கீகரிக்க முடியாது என்ற வாத பிரதிவாதங்கள் வந்ததனால் அவர் அதிலிருந்து தானாக விலகிச்சென்றார். சென்றதன் பிற்பாடு 2004 ஆம் ஆண்டு தேர்தலை சந்திக்கின்றோம். அன்று தான் ஏற்கனவே 2001 இல் போட்டியிட்ட இலங்கை தமிழர் விடுதலை கூட்டணியின் சின்னம் இதிலே பாவிக்க முடியாத ஒரு சூழல் ஏற்பட்டது. எனவே எந்த தேர்தலில் போட்டியிட வேண்டும் என்று கிளிநொச்சியில் இடம் பெற்றது. 2004 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி கிளிநொச்சியிலே இந்த கூட்டம் இடம்பெறுகின்றது. அதிலேதலைவர்பிரபாகரன் அவர்கள் இருக்கின்றார் பொட்டம்மான் இருக்கின்றார் பலரும் இருக்கின்ற பொழுது தான் எந்த கட்சியில் போட்டியிட வேண்டும் என்ற வாத பிரதிவாதங்களில் விருப்புக்கள் கேட்கும் பொழுது அதில் பலரும் தங்கள் தங்கள் கட்சியை கூறிக்கொண்டிருந்தபொழுது தலைவர் அவர்கள் மாவை அண்ணனிடம் கையை நீட்டிக்காட்டி அண்ணன் உங்கள் இலங்கை தமிழரசுக் கட்சி எந்த நிலையில் இருக்கின்றது என்று கேட்கின்றார். அப்பொழுது அவர் சொன்னார் நீங்கள் சொன்னால் தம்பி அது பிரச்சனை .ல்லை என்று. இலங்கை தமிழரசுக் கட்சியிலும் வீட்டு சின்னத்திலும் போட்டியிடுங்கள் என்று தலைவர் தான் இந்த தேர்தலையும் கட்சியின் பெயரையும் அதிலே உச்சரிக்கின்றார். இது தான் வரலாறு. நான் மட்டும் கூறவில்லை கட்சி தலைவர்கள் தற்பொழுது மாறிக் கூறலாம் இது தான் உண்மையில் நடந்தது.

**கேள்வி : ஏக பிரதிநிதிகளாக ஆனந்த சங்கரி ஏற்றுக்கொள்ளவில்லை அப்படியாயின் சம்பந்தன் அவர்கள் ஏகபிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டாரா?**

பதில் : 15 பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவர் ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் அதிலிருக்கும் 14 உறுப்பினர்களும் ஏற்றுக்கொண்டிருக்கின்றார்கள். அவர் ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் அது அவரின் கருத்து. அவர்கள் 2001 ஆம் ஆண்டு முதன் முதலில் விட்ட தேர்தல் விஞ்ஞாபனத்திலே எழுத்து மூலமாக ஒரு பொதுச் செயலாளரும் அதிலே கையொப்பமிட்டிருக்கின்றார். ஏகபிரதிநிதித்துவம் என்ற வார்த்தைப் பிரயோகம் அதிலே வரவில்லை 2 தசாப்தங்களாக தமிழீழ மண்ணுக்காக போராடி இன்று சர்வதேசமயப்படுத்தப்பட்டிருப்பது தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினால் என்ற வசனம் என்னிடம் எழுத்து மூலத்தில் இருக்கின்றது வேண்டுமானால் அதையும் காட்டலாம்.

அவர் ஏகபிரதிநிதிகளாக ஏற்கவில்லை அல்லது ஏற்பாரா என்பது அந்த காலத்திலே ஆனந்த சங்கரி ஐயாவே பகிரங்கமாக கூறியிருக்கின்றார். இவர்கள் 14 பேரும் அதை ஏற்றுக்கொண்டார்கள் ஆனால் நான் ஏற்கவில்லை என்று. அதற்கு பின்னர் தான் 2004 ஆம் ஆண்டு தேர்தலிலே இருந்து இன்று வரை நாங்கள் வீட்டு சின்னத்திலே போட்டியிட்டுவருகின்றோம். நீங்கள் கேட்ட ஒரு கேள்வி ஏன் 22 பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்த நீங்கள் இன்று குறைந்து வந்துள்ளது என்பதை நான் ஏற்றுக்கொள்கின்றேன். அதன் உண்மை என்னவென்றால் விடுதலைப்புலிகளின் மௌனம் 2009 ஆம் ஆண்டு மே 19 ஆம் திகதி இடம்பெறுகின்றது. 2010 இல் தேர்தல் அதன் பின்னர் தான் இடம்பெற்றது. 2010 ஆம் ஆண்டு தேர்தலில் தான் ஆனந்த சங்கரி ஐயா 2001 இல் விலகினாரே தவிர அந்த கட்சியில் இருந்து எவரும் விலகவில்லை. இதை நீங்கள் எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் தனி மனிதனாக ஆனந்த சங்கரி ஐயா மட்டும் தான் விலகினார். ஏனையவர்கள் இலங்கை தமிழரசுக் கட்சியுடன் வந்து அதில் பயணித்து 2010 ஆம் ஆண்டு அதில் அப்பொழுது இருந்த 4 கட்சிகள் அதாவது அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், தமிழீழ விடுதலை இயக்கம், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, இலங்கை தமிழரசுக் கட்சி இவை 4 கட்சிகளும் அதிலே தொடர்ந்தும் பயணித்து 2010 இல் இடம் பெற்ற பொதுத்தேர்தலில் வேட்பாளர் தெரிவில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக அகில இலங்கை தமிழ் காங்கிரஸை சேர்ந்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பத்மினி சிதம்பரநாதன், செல்வராசா கஜேந்திரன் மூவரும் அதிலிருந்து விலகிச்செல்கின்றார்கள். சிவநாதன் கிசோர் அவர்களுடன் செல்லவில்லை அவர் தனியாக சென்றார் அந்த கட்சியுடன் அவர்கள் செல்லவில்லை அதில் தான் முதலாவது முடிவு ஏற்படுகின்றது அதில் நீங்கள் ஒன்றை பார்க்க வேண்டும் தமிழ் தேசிய கூட்டமைப்பு ஒரு கட்சியாக இருந்து 10 ஆக தற்பொழுது பேரளவில் இருக்கின்றது. 2 பேர் ஒரு முச்சக்கரவண்டியில் சென்றாலும் ஒரு கட்சி ஒருவர் சைக்கிளில் சென்றாலும் ஒரு கட்சி ஆனால் அடிப்படையில் பார்த்தால் த.தே.கூட்டமைப்பு. எனவே அவர்கள் தற்பொழுது பிரிந்து சென்றிருக்கின்றார்கள். இதில் உண்மை என்னவென்றால் 2009 மே 19 க்கு பின்னர் தற்பொழுது யார் தலைவர் என்பதில் தான் இந்த போட்டி பொறாமை வருகின்றது அது உண்மை அதில் எந்த மாற்றுக்கருத்துமில்லை.

**கேள்வி : தற்பொழுது நீங்கள் கிழக்கு மாகாணத்தை பொறுத்தவரையில் பிரதிபலிக்கின்ற முக்கியமான ஒரு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையிலும் ஒரு ஊடகவியலாளர் என்ற வகையிலும் நீங்கள் இந்த கிழக்கிலே ஒரு உள்ளூராட்சிமன்ற தேர்தல் எப்படி அமையப்பெறும் அல்லது அது எங்களது தமிழ் தேசியத்திற்கான ஒரு அபிவிருத்தி சார்ந்த ஒரு நிலைமையை ஏற்படுத்துமா என்பதில் உங்களது கருத்து என்ன?**

பதில் : எனக்கு முதலாவதாக உள்ள சந்தேகம் இன்னும் தேர்தல் திகதியை அறிவித்தாலும் கூட இன்னும் கெசட் பண்ணவில்லை. வர்த்தமானி உண்மையான ஜனநாயக நாட்டில் தேர்தல் திணைக்களம் தேர்தலை அறிவித்ததன் பிற்பாடு தேர்தலுக்கான வேட்புமனு கோரப்பட்டதன் பிற்பாடு முதலாவது செய்ய வேண்டியது தேர்தல் தினத்தை வர்த்தகமானியில் பிரசுரிக்க வேண்டும் இதுவரையில் பிரசுரிக்கவில்லை ஊடகத்தில் மட்டும் மார்ச் மாதம் 9 ஆம் திகதி தேர்தல் நடத்துவதாக தேர்தல் ஆணையகம் அறிவித்திருக்கின்றது. எனக்கு இன்று வரை ஒரு சந்தேகம் இருந்து கொண்டு இருக்கின்றது. அதாவது இறுதிவரை இந்த தேர்தல் இடம்பெறுமா? என்பது முதலாவது சந்தேகம் இரண்டாவது விடயம் என்னவென்றால் தேர்தல் இடம்பெறுமாக இருந்தால் நிச்சயமாக தமிழ் தேசியம் சார்ந்த நாங்கள் அதிகூடிய ஆசனங்களை இலங்கை தமிழரசுக் கட்சியின் வீட்டு சின்னத்தில் போட்டியிடுகின்றவர்கள் மட்டக்களப்பில் பல சபைகளில் இருக்கக்கூடிய பெரும்பான்மை ஆசனங்களை நாங்கள் பெறுவோம் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. ஆனால் ஆட்சி அமைக்கக்கூடிய நிலை எந்தவொரு கட்சிக்கும் வராது என்பதும் எங்களுக்கு தெரியும். எனவே இன்னுமொரு கட்சியுடன் இணைந்து தான் நாங்கள் ஆட்சி அமைக்க வேண்டும் அவ்வாறானவர்களைத் தான் நாங்கள் தற்பொழுது எங்களது பங்காளி கட்சிகளை சேர்ந்தவர்களை அவர்கள் சேர்க்காவிட்டாலும் நாங்கள் சேர்ப்பதற்கு தயாராக இருக்கின்றோம் என்பதனை நான் பகிரங்கமாக கூறுகின்றேன்.

**கேள்வி : இருக்கின்ற பங்காளி கட்சிகளே தமிழரசுக் கட்சியை விட்டு பிரிந்திருக்கின்றது. அப்படியெனில் அது எவ்வாறு சாத்தியப்படும்?**

பதில் : தேர்தலிலே நிரந்தர எதிரியும் இல்லை நிரந்தர பகைவனும் இல்லை. தேர்தல் பிரச்சாரங்களுக்காக பலர் பொய்களை கூறுவார்கள். பலர் எங்களுக்குள்ளேயே பல கதைகளை சொல்லுவார்கள் எங்களுக்கு எதிரான கருத்துக்களையும் அவர்கள் சொல்லுவார்கள் ஏனென்றால் தேர்தல் வாக்கு என்பது முக்கியம். அந்த வாக்கை பெறுவதற்காக மற்றவர்களை சாடித்தான் பெறவேண்டும் என்பது எழுதப்பட்ட விதியாகும்.

**கேள்வி : மக்களை ஏமாற்றுவதாகத் தானே அமைகின்றது?**

பதில் : உண்மையில் மட்டக்களப்பில் தற்பொழுது 9, 10 கட்சிகள் போட்டியிடுகின்றது அதில் 8 கட்சிகளும் எங்களுக்கு எதிராகத்தான் பிரச்சாரம் செய்வார்கள். அவர்கள் வெற்றிபெற்று மக்களுக்கு என்ன செய்யப்போகின்றோம் என்று எவருமே கூறமாட்டார்கள். இவர்கள் பிரித்துவிட்டார்கள் இவர்களுக்கு எப்படி மக்கள் வாக்களிப்பது எப்படி நம்புவது என்று தான் கூறுகின்றார்கள். ஆனால் தேர்தல் முடிந்ததன் பின்னர் மக்கள் இன்னும் ஒன்றை பார்ப்பார்கள். இவ்வாறு தேர்தலிலே பிரிந்து கேட்டவர்கள் எவ்வாறு ஒற்றுமையாக செயற்படுகின்றார்கள் என்று மக்கள் ஏமாந்த வரலாறுகள் பல இருக்கின்றன நான் இன்று மட்டும் சொல்லவில்லை. தற்பொழுது இருக்கும் கட்சிகளாக இருக்கலாம் பல கட்சிகளாக இருக்கலாம் அது நடக்கும்.

எனவே அடுத்தது என்னவென்றால் அபிவிருத்தி தொடர்பாக இலங்கையிலே அதற்கான சர்வதேச நாணய நிதியம் கூட இவர்களின் கோரிக்கையை இது வரையில் ஏற்றுக்கொள்ளவில்லை. சர்வதேச நாணய நிதியம் இங்கு உதவிகளை செய்வதற்கு கூட அங்கு புலம்பெயர்ந்து வாழுகின்ற மக்களின் அனுசரணைகள் அல்லது அவர்களின் ஒரு தாக்கம் அங்கு இருந்து கொண்டிருக்கின்றது. அவர்களது உண்மையான கோரிக்கை என்னவென்றால் வடகிழக்கு மக்களுக்கான ஒரு நிரந்தர அரசியல் தீர்வு ஒன்றை வைக்க வேண்டும், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான சரியான நீதி கிடைக்க வேண்டும், கைது செய்யப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும், காணிகள் அபகரிப்பில் இருந்து மீளப்பட வேண்டும் என பல விடயங்களை நிபந்தனைகளாக வைத்திருக்கின்றார்கள். அதை செய்வதற்கு கூட இந்த அரசாங்கம் முடியாமல் வெறுமனே 75 வது சுதந்திர தினத்தில் தாங்கள் ஒரு தீர்வை கொண்டுவருவோம் என்ற மாயையை ஜனாதிபதி கூறியிருக்கின்றார் அது எந்தளவுக்கு நடக்கும் என்பதிலும் எனக்கு சந்தேகம் இருக்கின்றது.

தொடரும்...

நேர்காணல் : இரணியன்

# விளையாட்டு

## 23 வயதில் இத்தனை சாதனைகளை படைத்த வீரர்!

ஷீப்மன் கில் இல்லாத இந்திய அணியை நினைத்துப் பார்க்க முடியாது என்கிற அளவுக்குத் தொடர்ந்து சதங்கள் அடித்து சாதனை படைத்து வருகிறார்.

நியூசிலாந்துக்கு எதிரான கடைசி மற்றும் 3 வது டி20 ஆட்டத்தில் இளம் வீரர் ஷீப்மன் கில்லின் சூறாவளி ஆட்டத்தால் 168 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்று தொடரையும் 2 - 1 எனக் கைப்பற்றியது இந்தியா. 63 பந்துகளில் 7 சிக்ஸர்கள், 12 பவுண்டரிகளுடன் 126 ஓட்டங்கள் எடுத்து அசத்தினார் ஷீப்மன் கில். டி20 கிரிக்கெட்டில் தனிநபராக அதிக ஓட்டங்கள் எடுத்த இந்திய வீரர் என்கிற சாதனையைப் படைத்துள்ளார். 2023 தொடங்கிய 1 மாதம் 1 நாளில் 3 சதங்களும் ஒரு இரட்டைச் சதமும் எடுத்துள்ளார்.

23 வயதான ஷீப்மன் கில் இதுவரை சர்வதேச கிரிக்கெட்டில் நிகழ்த்தியுள்ள சாதனைகள் :

A19 உலகக் கிண்ணத்தை வென்றுள்ளார். (2018 இல்)

2021 இல் அவுஸ்திரேலியாவில் டெஸ்ட் தொடரில் விளையாடி இந்திய அணியின் வெற்றிக்கு முக்கியப் பங்கு வகித்தார். (பிரிஸ்பேனில் 2 வது இன்னிங்ஸில் 91 ஓட்டங்கள் எடுத்தார்.)

ஐபிஎல் போட்டியை வென்றுள்ளார். (2022 இல் குஜராத் அணி ஐபிஎல் கிண்ணத்தை வென்றது. ஷீப்மன் கில், 16 ஆட்டங்களில் 4 அரை சதங்களுடன் 483 ஓட்டங்கள் எடுத்தார்.)

டி20 கிரிக்கெட்டில் தனிநபராக அதிக ஓட்டங்கள். (இதற்கு முன்பு விராட் கோலி 122 ஓட்டங்கள் எடுத்திருந்தார். அதை முறியடித்தார் கில்.)

யு-19 உலகக் கிண்ணம், டெஸ்ட், ஒருநாள், டி20 என அனைத்திலும் சதமடித்துள்ளார்.

ஒருநாள் கிரிக்கெட்டில் இரட்டைச் சதம்.

டெஸ்ட், ஒருநாள், டி20 என மூன்றிலும் சதங்கள் அடித்த இந்திய வீரர்கள் - கோலி, ரோஹித் சர்மா, ராகுல், ரெய்னா, ஷீப்மன் கில்.

ஒருநாள் கிரிக்கெட்டில் 200 ஓட்டங்கள், டெஸ்ட், டி20யில் 100 ஓட்டங்கள் எடுத்த இந்திய வீரர்கள் - ரோஹித் சர்மா, ஷீப்மன் கில்.



## தென்னாப்பிரிக்காவிற்கு இலங்கை மகளிர் கிரிக்கெட் அணி விஜயம்

தென்னாபிரிக்காவில் நடைபெறவுள்ள இருபதுக்கு 20 உலகக் கிண்ணப் போட்டியில் பங்கேற்பதற்காக இலங்கை மகளிர் கிரிக்கெட் அணி கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து புறப்பட்டது.

இந்த அணியில் 15 வீரர்கள் மற்றும் 10 பயிற்சியாளர்கள் மற்றும் அதிகாரிகள் இடம் பெற்றுள்ளனர்.

இந்தப் போட்டியில், இலங்கை மகளிர் கிரிக்கெட் அணி "ஏ" குழுவின் கீழ் பலப்பரீட்சை நடத்தவுள்ளதுடன், முதலாவது போட்டி எதிர்வரும் 10ஆம் திகதி நடைபெறவுள்ளது.




## இனிமேல் சாதிப்பதற்கு எதுவுமில்லை – லயோனல் மெஸ்ஸி



இனிமேல் சாதிப்பதற்கு எதுவுமில்லை என ஆர்ஜென்டீனா கால்பந்து ஜாம்பவான் லயோனல் மெஸ்ஸி கூறியுள்ளார்.

கத்தாரில் கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற பி..பா உலகக் கோப்பை கால்பந்து போட்டி இறுதி ஆட்டத்தில் பிரான்ஸை வீழ்த்தி உலக சாம்பியன் பட்டத்தை மூன்றாவது முறையாக மெஸ்ஸி தலைமையில் கைப்பற்றியது ஆர்ஜென்டீனா.

மெஸ்ஸியின் வசம் 7 பேலன் டி ஆர் விருதுகள், 4 யுஇஎ.ப்ஏ சாம்பியன்ஸ் லீக் பட்டம், கோபா அமெரிக்கா பட்டம் உள்ளிட்டவை இருந்தன.

ஆனால் உலகக் கோப்பை சாம்பின் பட்டம் இல்லாமல் வேதனை அடைந்திருந்தார் மெஸ்ஸி.

இந்நிலையில் உலக சாம்பியன் பட்டத்தை கைப்பற்றி விட்டார்.

இதுதொடர்பாக அவர் புதன்கிழமை கூறியதாவது:

எனது கால்பந்து வாழ்க்கையில் அனைத்தையும் பெற்று விட்டேன். நான் கால்பந்து ஆடத் தொடங்கிய போது, இவை எல்லாம் நடக்கும் என எதிர்பார்க்கவில்லை. கடந்த 2021-இல் கோபா அமெரிக்கா பட்டத்தை வென்றோம். தற்போது உலகக் கோப்பையும் கைப்பற்றி விட்டோம். எங்கள் ஜாம்பவான் டியகோ மாரடோனா கையில் உலகக் கோப்பையை பெற்றிருந்தால் மிகவும் மகிழ்ச்சியாக இருந்திருக்கும்.

எனது கால்பந்து வாழ்க்கையை சிறப்பாக நிறைவு செய்ய வேண்டும். இனிமேல் சாதிப்பதற்கு எதுவுமில்லை என்றார் மெஸ்ஸி.

தற்போது பிஎஸ்ஜி அணியில் ஆடி வரும் மெஸ்ஸி, இந்த சீசனில் தனது அணியின் நோக்கமான சாம்பியன்ஸ் லீக் பட்டத்தை பெற்றுத் தர ஆயுத்தமாகி வருகிறார்.

## ஓய்வு பெற்றார் முரளி விஜய்!

சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாகப் பிரபல வீரரான முரளி விஜய் அறிவித்துள்ளார்.

இந்திய அணிக்காக 2008 முதல் 61 டெஸ்டுகள், 17 ஒருநாள், 9 டி20 ஆட்டங்களில் விளையாடியுள்ளார் முரளி விஜய். டெஸ்டில் 12 சதங்கள், 15 அரை சதங்களுடன் 3982 ஓட்டங்கள் எடுத்துள்ளார்.

இந்திய அணிக்காகக் கடைசியாக 2018 இல் பெர்த் டெஸ்டில் விளையாடினார். தமிழ்நாடு அணிக்காகக் கடைசியாக 2019 ஆம் ஆண்டிலும் ஐபிஎல் போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்காக 2020 ஆம் ஆண்டிலும் விளையாடினார். அதன்பிறகு தொழில்முறை கிரிக்கெட்டில் அவர் பங்கேற்கவில்லை.



இந்நிலையில் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ள முரளி விஜய், உலகளவில் புதிய வாய்ப்புகளைத் தேடிச் செல்வதாகக் கூறியுள்ளார். இதை அடுத்து இதர நாடுகளில் நடைபெறும் டி20 லீக் போட்டிகளில் அவர் பங்கேற்கவுள்ளார்.

2013 முதல் 2018 வரை இந்திய டெஸ்ட் அணியில் முக்கிய வீரராக இருந்தார் முரளி விஜய். டிசம்பர் 2013 முதல் ஜனவரி 2015 வரை இந்திய அணி - தென்னாப்பிரிக்கா, நியூசிலாந்து, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் டெஸ்ட் கிரிக்கெட் விளையாடியபோது அதிக பந்துகளை எதிர்கொண்ட, அதிக ஓட்டங்கள் எடுத்தவர்களில் 2 வது பேட்டராக இருந்தார் முரளி விஜய்.

ஐபிஎல் போட்டியில் 106 ஆட்டங்களில் விளையாடியுள்ளார். தில்லி டேர்டெவில்ஸ், பஞ்சாப் கிங்ஸ் அணிகளின் தலைவராகச் செயல்பட்டுள்ளார். சிஎஸ்கே அணி 2010, 2011 ஆம் ஆண்டுகளில் கிண்ணத்தை வென்றபோது அந்த அணியின் முக்கிய வீரராக இருந்தார்.

ஆர்சிபி அணிக்கு எதிரான 2011 ஐபிஎல் இறுதிச்சுற்றில் 52 பந்துகளில் 95 ஓட்டங்கள் எடுத்து ஆட்ட நாயகன் விருதை வென்றார் முரளி விஜய். ஐபிஎல் போட்டியில் 2 சதங்கள், 13 அரை சதங்களுடன் 2619 ஓட்டங்கள் எடுத்துள்ளார்.

# உலக வலம்

## ஆடை வடிவமைப்பில் அணிந்து கொள்ளும் வகையில் கேக் - கின்னஸ் சாதனை

சுவிட்ஸ்லாந்தை சேர்ந்த நடாஷா என்பவர் திருமண ஆடை வடிவமைப்பில் அணிந்து கொள்ளும் வகையில் கேக் ஒன்றை வடிவமைத்து கின்னஸ் சாதனை படைத்துள்ளார்.

சுவிட்ஸ்லாந்தைச் சேர்ந்தவர் நடாஷா கோலின் கிம். இவர் ஒரு கேக் தயாரிப்பாளர் ஆவார். நடாஷா ஸ்வீட்டி கேக்ஸ் என்ற பேக்கரியை நடத்தி வருகிறார். இவர் வித்தியாசமான முறையில் கேக் வடிவமைத்து கின்னஸ் சாதனை படைக்கும் முயற்சியில் ஈடுபட்டார்.

இதற்காக நடாஷா, திருமண ஆடை வடிவில், அணியக் கூடிய வகையில் கேக் ஒன்றை வடிவமைத்துள்ளார். இந்த கேக் சுமார் 131.15 கிலோ கிராம் எடையில் உருவாக்கப்பட்டு உள்ளது. இந்த பிரமிக்க வைக்கும் கேக் கடந்த மாதம் 15ஆம் திகதியன்று சுவிட்ஸ்லாந்தின் பெர்னில் நடந்த சுவிஸ் உலக திருமண கண்காட்சியில் வெளியிடப்பட்டது. கண்காட்சிக்கு வருகை தந்த விருந்தினர்களுக்கு கேக் வழங்கப்பட்டது. இந்த கேக் தற்போது கின்னஸ் சாதனையில் இடம்பெற்றுள்ளது.

கின்னஸ் உலக சாதனையாளர்கள் நடாஷா வடிவமைத்த இந்த கேக் உடையின் வீடியோவை இன்ஸ்டாகிராமில் பகிர்ந்துள்ளனர். இந்த வீடியோ 68,000இற்கும் மேற்பட்ட லைக்குகளைப் பெற்றுள்ளது.



## சமூக வலைதளத்தில் தன்னைப் போன்ற பெண்ணை தேடி கொலை செய்த இளம்பெண்

தெற்கு ஜெர்மனியில் உள்ள முனிச் பகுதியை சேர்ந்த 24 வயது இளம்பெண் ஷராபன். இவரது காதலன் ஷேகிர். கடந்த சில நாட்களுக்கு முன்பு குடும்பத்தில் ஏற்பட்ட தகராறு காரணமாக ஷராபன் தலைமறைவாக இருக்க விரும்பி உள்ளார். இதற்காக தன்னை போல தோற்றம் அளிக்கும் ஒரு பெண்ணை சமூக வலைதளங்களில் தேடி உள்ளார். அப்போது கதீஜா (23) என்ற இளம்பெண்ணை சமூக வலைதளம் மூலம் கண்டுபிடித்துள்ளார். கதீஜாவும் தன்னை போலவே தோற்றம் அளிப்பதை உறுதி செய்த ஷராபன், அவரை இன்ஸ்டாகிராமில் தொடர்பு கொண்டு பேசியுள்ளார். அப்போது தன்னிடம் அழகு கிறீம்கள் இருப்பதாகவும், அதனை உங்களுக்கு தருகிறேன் எனவும் ஆசைகாட்டி கதீஜாவை நேரில் சந்திக்க அழைத்துள்ளார். அதை நம்பி கதீஜா சென்ற போது ஷராபனும் அவரது காதலரான ஷேகிரும் சேர்ந்து கதீஜாவை காரில் கடத்தி சென்று கொலை செய்துள்ளனர்.

பின்னர் கதீஜா உடலை சாக்கு பையில் கட்டி காரில் மறைத்து வைத்துவிட்டு ஷராபன் காதலனுடன் தலைமறைவாகியுள்ளார். இதற்கிடையே ஷராபனை காணவில்லை என அவரது பெற்றோர் பொலிஸில் புகார் செய்துள்ளனர். அதன்பேரில் பொலிஸார் தேடிய போது, காட்டு பகுதியில் கார் நிறுத்தப்பட்டிருந்த காருக்குள் ஒரு சடலம் கிடைத்துள்ளது. பொலிஸார் உடலை டி.என்.ஏ. பரிசோதனைக்கு அனுப்பியுள்ளனர். முதலில், காரில் கொலை செய்யப்பட்டு கிடந்தது ஷராபன் என அவரது பெற்றோர் கருதிய போதும், டி.என்.ஏ. பரிசோதனையில் கொலை செய்யப்பட்டது கதீஜா என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து பொலிஸார் நடத்திய விசாரணையில் குடும்ப பிரச்சினை காரணமாக ஷராபன் தலைமறைவாக இருப்பதற்காக காதலனுடன் சேர்ந்து கதீஜாவை கொலை செய்ததும், பின்னர் காதலனுடன் தலைமறைவாக வாழ்ந்து வருவதும் தெரியவந்துள்ளது. இதையடுத்து பொலிஸார் அவர்கள் இருவரையும் கைது செய்துள்ளனர்.

## உக்ரைனுக்கு அதிநவீன ஆயுதங்களை வழங்க அமெரிக்கா ஒப்புதல்

ரஷ்யா-உக்ரைன் இடையேயான போர் இன்னும் முடிவுக்கு வரவில்லை. உக்ரைன் நாடு மீது தாக்குதல் நடத்திய ரஷ்யா அந்த நாட்டின் பல பகுதிகளை பிடித்து கொண்டது. ரஷ்யாவின் பிடியில் இருக்கும் பகுதிகளை மீட்க உக்ரைன் கடும் போர் புரிந்து வருகிறது. பல மாதங்கள் ஆனபின்பும் இன்னும் போர் முடிவுக்கு வரவில்லை.

இந்த நிலையில் உக்ரைனுக்கு அமெரிக்கா ஆயுத உதவிகளை செய்து வருகிறது. இதற்கிடையே அமெரிக்க அரசு உக்ரைனுக்கு 2.17 பில்லியன் அளவுக்கு ஆயுத உதவி வழங்க உள்ளதாக தெரிவித்து இருந்தது. இந்த உதவியின் போது தங்களுக்கு நீண்ட தூரம் சென்று தாக்கும் டாங்கிகள் மற்றும் ஏவுகணைகளை வழங்க வேண்டும் என உக்ரைன் கோரி இருந்தது.

முதலில் இதனை வழங்க தயக்கம் காட்டிய அமெரிக்கா இப்போது, அதி நவீன ஆயுதங்களை உக்ரைனுக்கு வழங்க முன்வந்துள்ளது. ஏற்கனவே அறிவித்தபடி உக்ரைனுக்கு வழங்க உள்ள ஆயுதங்களில் நீண்ட தூரம் சென்று தாக்கும் ஏவுகணைகள், டாங்கிகள் ஆகியவற்றை வழங்க முன்வந்துள்ளது. இதன்மூலம் இனி ரஷ்யா மீதான உக்ரைன் தாக்குதல் மேலும் தீவிரம் அடையும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

## தற்கொலைக்கு முயன்ற இளைஞர்: எச்சரிக்கை கொடுத்த பேஸ்புக்

இந்தியா - உத்தரப்பிரதேச மாநிலம், காஜியாபாத், கன்னோஜ் பகுதியைச் சேர்ந்தவர் 23 வயது இளைஞர் ஒருவர் சமீபத்தில் ரூ.90,000 (இந்திய ரூபா மதிப்பில்) நஷ்டமடைந்திருக்கிறார்.

இதையடுத்து, தொடர்ந்து பல்வேறு சிக்கல்களை எதிர்கொண்டு வந்திருக்கிறார். இதனால் மனமுடைந்த அவர் தற்கொலை செய்துக்கொள்ள முடிவெடுத்திருக்கிறார். இந்தநிலையில், தன் இயலாமையை பேஸ்புக் லைவ்வில் தெரிவித்து விட்டு, தற்கொலை செய்துக்கொள்வதையும் நேரலையில் ஒளிபரப்ப முயன்றிருக்கிறார்.

இதற்கிடையே, கடந்த ஆண்டு மார்ச் மாதம் மெட்டா மற்றும் உத்தரப்பிரதேச பொலிஸார் இடையே செய்யப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில், கலிபோர்னியாவில் உள்ள பேஸ்புக்கின் மெட்டா நிறுவனம், குறித்த நபர் தற்கொலை செய்துக்கொள்ள முயல்வது தொடர்பான தகவலை, உடனடியாக உத்தரப்பிரதேச மாநிலத்தில் உள்ள டிஜிபி அலுவலகத்தின் ஊடக மையத்துக்கு, மின்னஞ்சல் மூலம் தெரிவித்து எச்சரித்திருக்கிறது.

அதைத் தொடர்ந்து, சம்பவ இடத்துக்கு 15 நிமிடத்துக்குள் சென்ற பொலிஸார் குறித்த நபரின் உயிரைக் காப்பாற்றினர்.

இது தொடர்பாக பேசிய பொலிஸ் அதிகாரி, "எங்களுக்கு மெட்டா நிறுவனத்திடமிருந்து மின்னஞ்சல் வந்தது. இதையடுத்து குறித்த நபரை காப்பாற்ற முடிவு செய்தோம். அவரின் வீட்டை கண்டுபிடிக்க மட்டுமே சற்று தாமதமானது" எனத் தெரிவித்திருக்கிறார்.




## பணத்தாளில் இருந்து நீக்கப்பட்ட பிரிட்டன் அரசி!

பிரிட்டன் அரசி எலிசபெத் மறைவைத் தொடர்ந்து, தனது கரன்சி நோட்டுகளில் அவரது உருவம் இடம் பெறாது, புதிய கரன்சிகளில் அரசர் சார்லஸின் உருவமும் இருக்காது என்று அவுஸ்திரேலியா அறிவித்துள்ளது.

எனினும், இனி அச்சிடப்படும் நாணயங்களில் சார்லஸின் உருவம் பொறிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.




## போலி ஆவணங்களை தயாரித்த நீதியமைச்சர்

தென் கொரியாவின் முன்னாள் நீதியமைச்சருக்கு அந்நாட்டு நீதிமன்றம் 2 வருட சிறைத்தண்டனை விதித்து இன்று தீர்ப்பளித்துள்ளது. தனது பிள்ளைகளுக்காக மோசடியான கல்வித் தகைமைகள் தொடர்பில் மோசடியான ஆவணங்களை சமர்ப்பித்தமைக்காக முன்னாள் நீதியமைச்சர் சோகுக்கு இத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சட்டத்துறை விரிவுரையாளராக பணியாற்றிய சோ குக், 2019 செப்டெம்பர் முதல் 2019 ஒக்டோபர் வரை நீதியமைச்சராக பதவி வகித்தார். எதிர்காலத்தில், தென் கொரியாவின் ஜனாதிபதியாக அவர் தெரிவு செய்யப்படுவார் என அப்போது எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அவர் பல்வேறு சர்ச்சைகளில் சிக்கினார். இந்நிலையில், தனது மகனும், மகளும் கல்லூரிகளில் அனுமதிக்கப்படுவதற்காக போலியான ஆவணங்களை தயாரித்தமை தொடர்பில் சோ குக் குற்றவாளியாக காணப்பட்டார். இதனால் அவருக்கு 2 வருட சிறைத்தண்டனையும், 60 லட்சம் வொன் (5000 டொலர்) அபராதமும் விதித்து சோல் மத்திய மாவட்ட நீதிமன்றம் தீர்ப்பளித்தது.



## யாருக்கு சுதந்திர தினம்?

தூக்கில் இடப்படவேண்டிய
தலைகள் எல்லாம் இன்று
வலம் வருகின்றனர்.
பேரினவாதிகளே!

தமிழ் இனத்தோடு
இனியும் விளையாடாதே
எம்முடன் ஆட்டம் போட்ட
சிங்கள இனவெறியர்களின்
தலையை கொய்து கொன்றவன்- எம்
தலைவன்...

எம்இனம் வாழ்ந்த வரலாற்றை
அழிக்க எத்தனை எத்தனை
ஏமாற்று நாடகங்கள்
இன்று வரை...

இனியும் எம்மை ஏமாற்ற
தந்தை செல்வாவோ சம்பந்தனோ
செல்வமோ சுரேசோ சித்தார்தரோ
டக்ளஸ்சோ சங்கரியோ கருணாவோ
பிள்ளையானோ அல்ல - நாம்
புதிதாய் புறப்பட்ட
புலிப்பால் குடித்து வளர்ந்த
பெரும் தலைவனின் புதல்வர்கள்
வேண்டாம் இனியும்
எம்மோடு வெறியாட்டம்

வடக்கான் கிழக்கான் மலையகத்தான்
என்று எம்தமிழ் உறவுகளை
பிரித்தாளுகிறாய் இன்று வரை
இனியும் வேகாது உன் பருப்பு

முதலில் தமிழ் இனத்துரோகிகளையும்
காட்டியும் கூட்டியும் கொடுப்பவர்களை
களை பிடுங்கி எறிந்து விட்டு
நவீன தொழில் நுட்பத்துடன்
சங்காரம் செய்ய வருவார்கள்-எம்
தன்மான தமிழ் புதல்வர்கள்

தொடர்ந்தும் பேச்சுவார்த்தை என்று
எம்மை ஏமாற்ற நினைக்காதே - முடிவில்
பேச உன் இனமே வாழ்ந்த
வரலாறு அற்றுப்போகும்

போரியல் வரலாற்றில்
சர்வதேச நாடுகளின் உதவி இன்றி - எம்
தலைவன் போராட்டத்தை
வென்ற ஒரு
வரலாற்று சமரை
சொல்லுங்கள்
இனவெறி பிடித்த காடையர்களே!

யாருக்கு சுதந்திரம் - சிங்கள
இனவெறியர்களே!
வடகிழக்கு இணைந்த - தமிழ்
தலைமை சாம்ராஜ்யம் - என்று
மலர்கிறதோ அன்றுதான் - எம்
இனத்திற்கு சுதந்திரம்
அதுவரை........

-இரணியன்-



## 75வது சுதந்திர தின நிகழ்வு

இலங்கையின் 75வது தேசிய சுதந்திர தின நிகழ்வுகள் இன்று காலை கொழும்பு காலி முகத்திடலில் ஜனாதிபதி தலைமையில் பிரதமர் தினேஷ் குணவர்தனவின் பங்கேற்பில் நடைபெற்றது. இலங்கை இராணுவம், இலங்கை கடற்படை, இலங்கை விமானப்படை, இலங்கை பொலிஸ், சிவில் பாதுகாப்பு படை மற்றும் தேசிய கெடட் படையணிகளின் அணிவகுப்பு இடம்பெற்றது.

இந்த அணிவகுப்பில் முப்படைகளின் 390 கவச வாகனங்கள் உள்ளடங்கியதுடன், 21 ஓய்வுபெற்ற அதிகாரிகள் மற்றும் 29 அங்கவீனமுற்ற அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.வான்வழிப் போர் விமானங்கள் மற்றும் காலி முகத்துவாரத்திலிருந்து கடற்படைக் கப்பல்களும் இந்த நிகழ்வில் ஈடுபடுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.








### மட்டக்களப்பு வேபர் மைதானத்தில் அரச அதிபரின் தலைமையில் இடம்பெற்ற இலங்கையின் 75வது சுதந்திர தின நிகழ்வு





## யாழ் பல்கலைக்கழக முன்றலில் இருந்து சுதந்திர தின எதிர்ப்பு பேரணி ஆரம்பம்!

இலங்கையின் சுதந்திர தினமான அன்று சனிக்கிழமை (4) தமிழர்களுக்கான கரிநாளாக பிரகடனம் செய்து, "தாயகம், தேசியம், தன்னாட்சி உரிமை" எனும் தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை நிலைநிறுத்தக் கோரி, யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களால் பேரணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலை முன்றலில் காலை 10.30 மணிக்கு ஆரம்பமான பேரணியில், பல்கலைகழக சமூகம், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், அரசியல் கைதிகளின் உறவுகள் , சிவில் சமூக பிரதிநிதிகள் என பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டனர்.






இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 05.02.2023 அன்று வெளியிடப்பட்டது.